

# தமிழரசு


16-5-1988 ரூ. 1





வேதாரணியத்தில் 28-4-1988 அன்று மேதகு குடியரசுத் தலைவர் திரு ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகள்.







மீண்டும் நிகழ்த்திக் காட்டப்பட்ட வேதாரணியம் உப்பு யாத்திரையில் பங்கு பெற்ற பெருமக்களை வரவேற்கும் விழாவில் 28-4-88 அன்று கலந்துகொண்ட மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் 'தமிழரசு' இதழை ஆர்வத்துடன் படிக்கிறார்.


தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2019 விபவ - வைகாசி 3

மலர்: 18 இதழ் : 22

16-5-1988

# வரலாறு படைத்த விழாக்கள்

நா. கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப.
இணைச் செயலர் மற்றும் அலுவலால் இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு

**வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரக நினைவைப் போற்றும் புனிதப் பயணம் வெற்றி பெற்றுள்ள வரலாற்றை, கட்டுரை தெளிவாக்குகிறது.**

ஒரு நாட்டின் சுதந்திர வரலாறு அந்த நாட்டு மக்களின் தியாகத்தால் எழுதப்படுவதாகும். அவர்கள் நடத்திய போராட்ட வேள்விகள் அந்த நாட்டின் சரித்திரத்தின் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும், அதில் வைர வரிகளாக மின்னிக் கொண்டிருக்கும். ருஷ்ய நாட்டில் ஜாரின் கொடுங்கோன்மை சரிந்ததை ஜெயபேரிகை கொட்டி வரவேற்ற தேசிய மகாகவி பாரதி, 'ஆஹா வென்றெழுந்தது பார் யுகப் புரட்சி!' என்று ஆர்ப்பரித்தான். அதற்குச் சற்றும் குறைந்தது அல்ல, கத்தியின்றி இரத்தமின்றித் தொடங்கப்பட்ட காந்திஜியின் சாத்வீகப் போராட்டம்.



சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு, ஒத்துழையாமை, சிறைவாசம் அனுபவித்தல் போன்ற இன்னல்களுக்கு இலட்சக் கணக்கான தொண்டர்கள் ஆளாக நேர்ந்தது. தொண்டர்கள், தியாக சீலர்கள் அமைதியாக அறவழியில் போராட்டங்களைத் தொடங்கிய போதிலும், அவர்களை அடக்கி ஒடுக்க முனைந்த அந்நிய ஆட்சி காட்டுமிராண்டித்தனமாக நடந்து பல்லாயிரக் கணக்கில் அவர்களது உயிர்களைப் பலிகொண்டது. கள வேள்வியில் கைகால்கள் போவதையும், வெஞ்சிறையில் வெந்து மாய்வதையும் மகத்தான பேறாகவும், விடுதலைக்குத் தரும் விலையாகவும் கருதித் தேசபக்தர்கள் அவைகளைப் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டனர்.

இதெல்லாம் புராணங்கள் அல்ல. கட்டுக் கதைகள் அல்ல. நடந்த வரலாறு. உலகறிந்த உண்மைகள், ஆனால், இன்றைய இளம் தலைமுறை ஆழ்ந்து அறிய வேண்டிய பேருண்மைகள். இவைகளை அவர்கள் நன்கு உணர்வார்களானால், அவர்களது உள்ளங்களில் தேசபக்தியும், கடமையுணர்வும், குறுகிய நோக்கங்களை விட்டொழிக்கும் பரந்த நோக்கும், பொங்கி வழியும் என்பதை உணர்ந்தார் மாண்புமிகு பாரதப்பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள்.

கடந்த கால வரலாற்றை இன்றைய இளைஞர்களுக்குச் சொல்ல வேண்டிய கட்டாயம் என்ன? நாட்டில் சரியான குறிக்கோள் இல்லாமல, சிறந்த வழிகாட்டல் இல்லாமல் இளந் தலைமுறையினர் நெறி தடுமாறி நிற்பதையும், சில நேரங்களில் அவர்கள் ஆத்திரத்திற்கும் வெறுப்புக்கும் ஆளாகி, வன்முறையில் இறங்கும் அவலத்தையும் பார்க்கிறோம். இதற்கு முற்றுப் புள்ளிவைத்து, அவர்களது சக்தியை ஆக்க வழியில் திருப்பி, நாட்டுக்கும் வீட்டுக்கும் நற்பணியாற்றும் நற்குடிமக்களாக உருவாக்க, உருவானதொரு நடவடிக்கையாகப் பிரதமர் மேற்கொண்ட உணர்ச்சி பூர்வமான முயற்சியே, உப்புச் சத்தியாக்கிரகத்தை மீண்டும் நடத்திக் காட்டி அதில் இளைஞர்களையும் பெண்களையும் பொது மக்களையும் பெருமளவில் ஈடுபாடு கொள்ளச் செய்து, உருப்படியான காரியங்களில் அவர்களது சக்தியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது. இந்த வகையில் குஜராத் மாநிலத்தில் தண்டி யாத்திரையும், தமிழகத்தில் வேதாரணியப் பயணமும் பெருவெற்றி அளித்துள்ளன.

1988 ஏப்ரல் 15-ஆம் நாள் திருச்சியில் மேதகு குடியரசுத் துணைத் தலைவர் திரு சங்கர் தயாள் சர்மா அவர்கள் தொடங்கி வைத்த வேதாரணியம் உப்புப் பயணத்தின் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை பல கிராமங்களிலும், சிற்றூர்களிலும் மக்களின் வரவேற்பையும், மக்கள் மத்தியில் இந்தப் பயணம் நிகழ்த்திய மன மாற்றத்தையும் பல இடங்களில் நேரில் காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

இளைஞர்களிடையே கடமையுணர்வு, ஒழுக்கம், தன்னையும் சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ளும் மனப்பாங்கு, மற்றவர்களோடு ஒத்துப்போவது, உறவை வளர்ப்பது, ஒற்றுமையாகச் செயல்படுவது, ஊருக்கு உதவுவது போன்ற அருங்குணங்களை இந்தப் புனிதப் பயணம் வளர்த்திருக்கிறது. நம்முடைய பிரச்சினைகளுக்கு வன்முறை வழியல்ல, விவாதம், விடா முயற்சி, தியாகம் இவையே அடிப்





படைத் தேவை என்பதை நிலை நாட்டியுள்ளது.

**ஓங்கி நின்ற ஒருமித்த உணர்வு**

கிராம மக்கள் இந்தத் தொண்டர்களை வரவேற்பதில் கட்சி, மதம், இனம், மொழி என்ற எந்த வேறுபாட்டையும் காட்டவில்லை. வயது வித்தியாசம் கூட குறுக்கே நிற்கவில்லை. பல கோயில்களிலிருந்து பூரணகும்ப வரவேற்பு அளித்ததைப் போலவே, முஸ்லீம்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் அவர்களது சமயமுறைப்படி அவர்களது இசையினைப் பாடி வரவேற்றார்கள். கிறிஸ்தவ ஆலயங்களும் வரவேற்பளித்தன.

இதுபோன்றே பல்வேறு அரசியற் கட்சிகளைச் சார்ந்தவர்களும் வரவேற்பளித்தனர். சமூகநல இயக்கங்கள், பெண்கள் சங்கங்கள் ஆகியவை பெருமளவில் வழிகளில் உபசாரம் செய்தது மறக்க முடியாத நிகழ்ச்சிகளாகும்.

மரங்கள் நடுதல், மதுவிலக்கு. தீண்டாமை எதிர்ப்பு, ஒழுக்கக் கல்வி, புலனடக்கம், கட்டுப்பாடு, இத்தனை மணிக்குப் படுப்பது, இத்தனை மணிக்கு எழுந்திருப்பது என்ற நியதியில் கண்டிப்பு, கண்ணியம் காத்தல், உண்ணா நோன்பிருந்து உள்ளத்தின் ஆற்றலையும் உடலின்வல்லமையையும் பெருக்கிக் கொள்ளல் ஆகியவற்றில் தொண்டர்கள் உறுதியாக இருந்தது, மக்களிடையே புதியதோர் விழிப்பையும், எழுச்சியையும் உண்டாக்கியுள்ளது. '' அன்றைக்குக் காந்தியைப் பார்க்கவில்லை; இன்றைக்கு உங்களைப் பார்க்கிறோம்'' என்று பல இடங்களில் பெண்கள் பக்திப் பரவசத்துடன் தியாக சீலர்களை வரவேற்றது, பார்த்தவர்களைப் புல்லரிக்கச் செய்தது. அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புகளில் வயது வித்தியாசம் பார்க்காது போற்றினார்கள்.

வேதாரணியம் உப்பு யாத்திரைக்கு முத்தாய்ப்பாய் அமைந்தன 1988 ஏப்ரல், 28, 30ஆம் நாள் நிகழ்ச்சிகள். வேதாரணியத்தின் வரலாற்றில்மட்டுமல்ல, தமிழ்நாடு, இந்தியத் திருநாடு ஆகியவற்றின் வரலாற்றிலும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்க சிறப்புப் பெற்றுவிட்டன.

**தொண்டர்கள் சென்ற வழி**

ஏப்ரல் 13-ஆம் நாள் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று மேதகு துணைக் குடியரசுத் தலைவர் திரு சங்கர் தயாள் சர்மா அவர்கள் திருச்சியில் இந்தப் புனிதப் பயணத்தைத் தொடங்கி வைத்தார். தேசபக்தர்கள் 121 பேர் இப்பயணத்தில் பங்கு கொண்டு, அன்று ராஜாஜி தலைமையில் உப்புச் சத்தியாக்கிரகிகள் 100 பேர் எந்தப் பாதை வழியாகத் திருச்சியிலிருந்து வேதாரணியம் வந்தடைந்தார்களோ, அதே பாதை வழியாக, உபாதைகளைப் பொருட்படுத்தாமல் உற்சாகப் பெருவெள்ளத்தில் மிதந்தபடி, அன்பு, அகிம்சை, ஆக்கபூர்வ நடவடிக்கைகளை எடுத்துச் சொல்லிய வண்ணம் நடந்து வந்தார்கள்.

திருச்சியில் புறப்பட்டவர்கள் ஸ்ரீரங்கம், திருவானைக்காவல், திருவளர்சோலை, கல்லணை. கோவிலடி, திருக்காட்டுப்பள்ளி, சாத்தனூர், திருவையாறு, கண்டியூர், தஞ்சாவூர், நடார், ஐயம்பேட்டை, வழுத்தூர், பாபநாசம், நல்லூர், கும்பகோணம், வலங்கைமான், செம்மங்குடி, ஆலங்குடி, நார்த்தங்குடி, நீடாமங்கலம், பூவனூர், ராஜப்பையன்சாவடி மன்னார்குடி, தட்டாங்கோவில், ஆவிச்சபுரம், விளங்குடி, திருத்துறைப் பூண்டி, மேலமருதூர். தகட்டூர், ஆயக்காரன்புலம் வழியாக, மொத்தம் 221 கி.மீ. தூரம் நடந்து ஏப்ரல் 28-ஆம் தேதி காலை 7.45 மணிக்கு வேதாரணியம் வந்து சேர்ந்தனர்.

இந்தத் தியாக சீலர்களுக்கு வழியெங்கும் மக்கள் உற்சாகமான வரவேற்பு அளித்தார்கள். காலைச் சிற்றுண்டி, மதியஉணவு, இரவு உணவு, ஏற்பாடு செய்தார்கள். வழி நெடுக அவர்களுக்குப் பழங்கள், மோர், குளிர்பானங்கள் அளித்ததுடன் பல இடங்களில் கதராடைகளும், மாலைகளும் அணிவித்து மகிழ்ந்தனர். கூட்டங்கள், நடத்தி தேசபக்தியும் தெய்வபக்தியும் நல்லொழுக்கமும் மிக்க சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள் நடைபெற உதவினார்கள். 58 ஆண்டுகளுக்கு முன்பு ராஜாஜி தலைமையில் உப்புச் சத்தியாக்கிரகிகளின் யாத்திரை இந்த வழியாகத்தான் நடந்தது.

**விழாக்கோலம் பூண்டது வேதாரணியம்**

28-ஆம் தேதி அதிகாலையிலிருந்தே, வரவேற்புக் கூட்டம் நடைபெற்ற வேதாரணியம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் திடலில் மக்கள் சாரைசாரையாக வந்து குழுமத் தொடங்கினர். முந்தின நாள் இரவு, வண்ண விளக்குக் கோபுரங்கள் ஒளிசிந்தி வரவேற்புக் கூறின. சுவரொட்டிகள், அலங்காரப் பந்தல்கள், வளைவுகள் விளம்பர ஊர்திகள் போன்றவை மக்களின் எழுச்சிக்குக் கட்டியங் கூறின. சிறப்புப் பேருந்துகள் தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களிலிருந்து மக்களைக் கொண்டு வந்து குவித்தன.

காலை 9 மணிக்கு மேதகு குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் ஹெலிகாப்டரில் வந்து இறங்கினார். இதற்காக ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் திடலில் ஒரு தனித் தளம் அமைக்கப்பட்டிருந்தது. மேதகு ஆளுநர், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.கே.மூப்பனார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், முக்கியப் பிரமுகர்கள் முதலானோர் குடியரசுத் தலைவர் அவர்களை அன்புடன் வரவேற்றார்கள். அங்கிருந்து அவர் அகஸ்



**உப்புயாத்திரை இறுதி நாளன்று (30-4-88) ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா, இ.ஆ.ப. மற்றும் புனிதப் பயண வீரர்கள் உப்பு எடுக்கும் காட்சி.**

தியம்பள்ளிக்குச் சென்று ராஜாஜி உப்பு எடுத்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியின் நினைவாக அங்கு எழுப்பப்பட்டுள்ள நினைவு ஸ்தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தினார் பின்னர் விழா மேடைக்கு வருகை தந்தார்.

விழா மேடை, தூய வெண்ணிறப் பொலிவோடு, மல்லிகை மலர் அழகுடன் மணங்கமழ பிரம்மாண்டமான முறையில் எடுப்பாக அமைக்கப்பட்டிருந்தது. மேடை ஐந்து பிரிவாகப் பிரிக்கப்பட்டு ராஜாஜி தலைமையில் உப்பெடுத்த தியாகிகள் ஒரு பிரிவிலும், மேதகு குடியரசுத் தலைவர், மற்றும் மேதகு ஆளுநர் இன்னொரு பிரிவிலும், பிரமுகர்கள், இசைக்குழுவினர் போன்றவர்கள் மற்ற பிரிவுகளிலுமாக உட்கார்ந்திருந்தனர். வேதாரணியம் நோக்கி வரும் 121 தொண்டர்களுக்கென ஒரு மேடை ஒதுக்கப்பட்டிருந்தது. 30 அடி உயரமுள்ள காந்திஜி, ராஜாஜி, சர்தார் வேதரத்தினம் ஆகியோர் கட்-அவுட்டுகள் கம்பீரமாக நின்று மக்களைக் கவர்ந்தன. மேடையின் பின்னணியில் காந்திஜியும், ராஜாஜியும் உரையாடிக் கொண்டிருப்பது போன்ற ஓவியம் வைக்கப்பட்டிருந்தது.

விழா தொடங்குவதற்கு முன்னதாக, கலைமாமணி நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் நாதஸ்வர இசை வழங்கினார். தொடர்ந்து இசைக்குயில் எம். எல். வசந்தகுமாரி, தேசபக்திப் பாடல்களும், தெய்வபக்திப் பாடல்களும் பாடினார். கலைமாமணி பத்மா சுப்பிரமணியம், சியாமளாபால கிருஷ்ணன் ஆகியோர் விழா தொடங்குவதற்கு அறிகுறியாகத் தமிழ்த்தாய் வாழ்த்தும், பின்னர் வந்தேமாதர இசையும் பாடினார்கள்.

நாயன இசை முழங்க 221 கி.மீ. தொலைவு தூரத்தை 15 நாட்களில் நடந்து, வரலாற்றுப் பெருமை மிக்க வேதாரணியத்தை அன்று வந்தடைந்த 121 தொண்டர்களும் குடியரசுத் தலைவர் புன்முறுவலுடன் வரவேற்க விழாப் பந்தலை வந்தடைந்தனர்.

### சத்தியாக்கிரகிகளுக்குச் செய்யப்பட்ட சிறப்பு

1930-இல் ராஜாஜியின் தலைமையில் உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்ட தியாகச் செம்மல்கள் ஜி. ராமசந்திரன், ஓ.வி. அளகேசன், சர். வெங்கட்ராம ஐயர், வந்தே மாதரம் செட்டியார் ஆர்.எஸ். ராமகிருஷ்ணன், என்.ஏ.வி. பதி, கே. ஏ. சுப்பிரமணியம், ஏ. பாலகிருஷ்ணன், டி. எம். பாலசுப்பிரமணியம், சண்முகம் பிள்ளை, திருவேங்கடம், ஏ. பழனிவேலு ஆகியவர்களுக்கும், மூதறிஞர் ராஜாஜியின் புதல்வர் திரு சி. ஆர். நரசிம்மன், உப்புச் சத்தியாக்கிரகப் போரை வேதாரணியத்தில் பெரும் எதிர்ப்புகளுக்கிடையில் முடித்துக் கொடுத்து வெற்றி கண்ட சர்தார் வேதரத்தினம் பிள்ளையின் மைந்தர் திரு வே. அப்பாக்குட்டி, சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி., வேதாரணியத்தில் சவரத்தொழில் நடத்தி வந்தவரும் அப்போராட்டத்தில் அடக்குமுறை செய்ய வந்த அந்தக் காலத்துக் காவலாளிகளுக்கு முகச்சவரம் செய்யமறுத்து அதற்காக ஆறுமாதக்கடுங்காவல் தண்டனை பெற்றவருமான திரு வைரப்பன் ஆகியவர்களுக்கும் மேதகு குடியரசுத்தலைவர் அவர்கள் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசுகள் வழங்கினார். பெண்கள் ராட்டையில் நூல் நூற்றதைப் பார்வையிட்டார்.

உப்பு யாத்திரைக் குழுவினர் எடுத்து வந்த மூவண்ணக்கொடியை யாத்திரையில் கலந்து கொண்டவரும் சர்தார் ஆதிகேசவலு நாயக்கர் மகனுமான வழக்கறிஞர் திரு. பி.ஏ. தெய்வசிகாமணியும், யாத்திரைக்கு வழிகாட்டிய ஜோதியை, சர்தார் வேதரத்தினம் பிள்ளையின் பேரன் திரு கேடிலியப்பனும் குடியரசுத் தலைவரிடம் கொடுத்தனர். அவற்றைக் குடியரசுத் தலைவர், ஆளுநரிடம் அளித்தார். நடைப் பயணத்தில் கலந்து கொண்ட தொண்டர்களைக் குடியரசுத்தலைவர் வாழ்த்தி, அவர்களுக்கும் நினைவுப்பரிசுகள் வழங்கினார். பின்னர், மேடையருகே அமைக்கப்பட்டிருந்த உப்புச் சத்தியாக்கிரக நினைவுக் கல்வெட்டைத் திறந்து வைத்தார். அதன் பின்னர் உப்புச் சத்தியாக்கிரகத் தொண்டர்கள் மேடைக்கழைத்துச் செல்லப்பட்டனர்.

உப்புச் சத்தியாக்கிரகத்தை நினைவூட்டும் எழில் மிக்க நினைவுச் சின்னத்தை தமிழக ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அளித்தார்.

பின்னர் இராமர், சீதை, இலட்சுமணன் ஆகியோர் அடங்கிய செப்புச் சிலையை, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா. இராமு, இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட மக்களின் சார்பாக மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு வழங்கினார்.

அகஸ்தியம்பள்ளியில் உப்புச் சத்தியாக்கிரக நினைவாலயம் அமைக்க வேதாரண்யம் ஆலயத்திற்கு உரிமையான 10 ஏக்கர் நிலத்தில் உப்பெடுத்துவந்த உரிமையை, திருமதி வேதம்மாள் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களிடம் வழங்கினார்.

### மேதகு ஆளுநரின் வரவேற்புரை

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்களின் வரவேற்புரை:

"பெருமதிப்பிற்குரிய குடியரசுத் தலைவர் அவர்களே! இங்கே கூடியுள்ள பெரியோர்களே! தாய்மார்களே! நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் வணக்கம். நமது நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் ஒரு முக்கியக் கட்டமாக விளங்கிய

வேதாரணியம் உப்பு யாத்திரையை நினைவுகூர நாம் கூடியிருக்கிறோம்.

''அதுமட்டுமல்ல அந்தப் போராட்டத்திலும், மற்ற விடுதலைப் போராட்டத்திலும் கலந்து கொண்ட வீரத் தியாகிகளுக்கு நன்றியையும், அஞ்சலியையும் செலுத்த நாம் கடமைப்பட்டுள்ளோம். இந்த விழாவில் பெருமதிப்பிற்குரிய குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் கலந்து கொள்வது பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ஏனெனில் அவரும் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட பெருந்தலைவர்களில்முக்கியமானவர்.

''1930-இல் மகாத்மா காந்தியடிகளின் உத்வேகத்தோடு வேதாரணியம் உப்பு யாத்திரையில் கலந்து கொண்ட 15 பேர் இன்றும் நம்மிடையே இருப்பது பெரிய பேறாகும். திரு ஜி. ராமச்சந்திரன், திரு ஓ. வி. அளகேசன் போன்ற பெரியவர்கள் இன்று இங்கு வந்துள்ளனர். அவர்களுடைய வரவு நமக்கு மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது.

''தமிழக மக்களின் சார்பாக இந்த வீரர்களை வணங்குகின்றேன், வாழ்த்துகிறேன். அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களது பாதை, அவர்களது செயல், அவர்களது தியாகம் நமக்கு நல்ல எடுத்துக் காட்டாக விளங்கும் என்று நம்புகிறேன். உங்கள் அனைவருக்கும் மீண்டும் எமது மனமார்ந்த வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம், நன்றி.''

**மேதகு குடியரசுத் தலைவரின் பேருரை:**

மேதகு குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன்அவர்கள் ஆற்றிய பேருரை:

''மாண்புமிகு ஆளுநர் டாக்டர் அலெக்சாண்டர் அவர்களே! உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்ட வீரர்களே! காங்கிரஸ் சக ஊழியர்களே! பெரியோர்களே! நண்பர்களே!

''டாக்டர் அலெக்சாண்டர் தமிழில் பேசியது நம் எல்லோருக்கும் பெரிய மனமகிழ்ச்சியை அளித்தது. நான் தண்டிக்குச் சென்றபோது நானும் அங்கே இந்தியிலே பேசினேன். ஆனால் அவர் பேச்சு, என்னுடைய பேச்சை விட மிகச் சிறப்பாக இருந்தது என நினைக்கின்றேன்.



'நம்முடைய நாட்டினுடைய விடுதலை வரலாற்றிலே மிகமுக்கிய கட்டமாக அமைந்தது உப்புச் சத்தியாக்கிரகம். அதற்கு முன்பு ஒத்துழையாமை இயக்கம் நடந்தது. அதற்குப் பின்பும் பல சட்ட மறுப்பு இயக்கங்களும் நடந்தன. என்றாலும் சரித்திரப் பூர்வமாக முக்கியத்துவம் வாய்ந்தது உப்புச் சத்தியாக்கிரகம் தான். காரணம் என்ன என்றால் அன்று வரை சட்டத்தை நாம் மறுக்க முடியாது. சட்டத்தின் கீழ் நாம் எப்போதும் அடிமைகளாக இருக்கவேண்டும். சட்டத்தை மீறி நாம் நம்முடைய விடுதலைப் போராட்டத்தை ஒரு கட்டமாக அமைக்க முடியும் என்பதை எல்லாம் அன்று நாம் அறியவில்லை.

'''உப்புச் சத்தியாக்கிரகம் ஆரம்பிக்கிறேன்' என்று காந்தியடிகள் சொன்னபொழுது உலகத்தில் இருக்கின்ற பத்திரிகையாளர்கள், அரசியல் நிபுணர்கள் எல்லோரும் 'சூரியனே மறையாத இந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை, ஒரு பிடி உப்பை எடுத்து இவர்கள் கவிழ்த்து விடலாம் என்று நினைத்தால் இதை விட மதியீனம் என்ன இருக்கிறது?' என்றெல்லாம் நம்மைப் பரிகசித்தார்கள். ஆனால் இந்தச் சத்தியாக்கிரகத்திற்கு மக்கள் மேலும்மேலும் ஆர்வம் காட்டிப் புறப்பட்டு வருவதைப் பார்த்து உலகத்தில் இருக்கின்ற பெரிய அரசியல்வாதிகளும், பத்திரிகை நிபுணர்களும் இந்தியாவை நோக்கி விரைந்து வந்தார்கள். அவர்கள் கண்டகாட்சி, இந்த நாட்டினுடைய விடுதலைப் போர் இன்று ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்பதுதான்!

''காந்திஜி அவர்கள், மக்களுக்கு எந்தவிதமான வெறுப்புக்கொடுக்கக் கூடிய சட்டங்கள் இருக்கின்றனவோ, எந்தச் சட்டங்களை அந்நிய ஆட்சி, மக்கள் மீது சுமத்துகின்றார்களோ அந்தச் சட்டத்தை மீறுவதில் தர்மம் இருக்கின்றது - நியாயம் இருக்கின்றது - சத்தியம் இருக்கின்றது என்று சொன்னார். அக்காலத்தில் ராஜதந்திர நிபுணர்கள் எல்லோரும் ஏற்ற சட்டத்தை எப்படி எதிர்ப்பது? சட்டசபை மூலமாகத்தானே அவற்றை மாற்ற வேண்டும் என்று எல்லாம் நமக்கு அறிவுரைகள் கூறினார்கள்.

''ஆனால் காந்திஜி அவர்களுக்கு மக்களின் மனதை நன்றாகப் புரிந்து கொள்ளக்கூடிய சக்தி இருந்தது. இந்த அநாகரிகமான உப்புச் சட்டத்தின் எதிர்ப்பின் மூலமாக மக்களை இந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்திற்கே எதிர்ப்பாக உருவாக்கி விடலாமென அவர்கள் உணர்ந்தார்கள். இந்தியாவில் பல பாகங்களில் உப்புச் சத்தியாக்கிரகம் நடந்தது. ஆனால் இரண்டே இரண்டு இடங்களில் தான் சத்தியாக்கிரக யாத்திரை மேற்கொள்ளப்பட்டது. காந்திஜி அவர்களுடைய தலைமையில் தண்டிக்குச் சென்ற யாத்திரை. வேதாரண்யத்திலே ராஜாஜி அவர்கள் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட உப்புச் சத்தியாக்கிரக யாத்திரை. இவ்விரண்டும்தான் யாத்திரையாக மேற்கொள்ளப்பட்டன.

''இந்த யாத்திரையின் பொழுது இங்கு இருக்கின்ற உப்புச் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டவர்களுக்கெல்லாம் தெரியும். என்ன தொல்லைகள், தொந்தரவுகள் எல்லாம் ஏற்பட்டன என்று. அப்



பொழுது இருந்த கலெக்டர் 'தார்ன்' அவர்கள் இவர்களுக்கு தண்ணீர் கூடக் கொடுக்கக்கூடாது, சோறு போடக்கூடாது. போட்டால் கைது செய்வேன் என்றெல்லாம் பிரகடனம் செய்தார்கள். அது எந்தச் சட்டத்தின் கீழ் அவர்கள் செய்தார்கள் என்று நிபுணர்கள் தான் விசாரித்துச் சொல்ல வேண்டும். அன்றைக்கு அதையெல்லாம் பொருட்படுத்தாமல் விருந்து சாப்பிட்டவர்கள் இங்கே இருக்கின்றார்கள். தென்பாதி ராயசசந்திர நாயுடு வீட்டிலேயும், பந்துலு அய்யர் வீட்டிலேயும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட விருந்து ஞாபகம் இருக்கும் என்று நினைக்கின்றேன். அதுமாத்திரம்லல - அன்றைக்கிருந்த ஆட்சி இந்த யாத்திரையை எப்படியாவது கலைக்க வேண்டும் என்றெல்லாம் அவர்கள் திட்டமிட்டு எதிர்ப்புச் சக்திகள் எல்லாவற்றையும் ஊக்குவித்து எப்படியாவது கலைக்க வேண்டும் என்று முயற்சி செய்தார்கள்.

''கும்பகோணத்திலே கூட்டம் நடக்கின்றபொழுது இவ்வாறு ஒரு கலவரம் செய்தார்கள. அவ்வாறு செய்வதன் மூலம் மக்கள் ஆத்திரம் கொண்டு கலகம் செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பார்கள். அதன் மூலமாக சட்டம் ஒழுங்கு மீறிவிட்டது என்று சொல்லி - சட்டத்தைப் பிரயோகிக்கலாம் - தடியடி செய்யலாம் என்றெல்லாம் கனவு கண்டது அந்நிய ஆட்சி.

''ராஜாஜி அவர்களுடைய தூய தலைமையின் காரணமாக அவர்கள் அன்றைக்கு அளித்த சாத்வீக தத்துவத்தின் மூலமாக அது முறியடிக்கப்பட்டது. வேதாரணியம் வந்து சேர்ந்தார்கள். உப்பு எடுப்பதற்கு அவர்களுக்கு உப்பு நிலத்தை யார் கொடுத்தார்கள்? வெள்ளைக்காரர்கள் அந்த நிலத்தையெல்லாம் பறிமுதல் செய்து அவர்களை விரட்டியடித்து விடுவார்கள் என்பது நன்றாகத் தெரியும். இருந்தாலும் அன்றைக்கு ஒரு சர்தார் தேவைப்பட்டார்.

''கீதையிலே சொல்வார்கள்: 'எவ்வெப்பொழுதெல்லாம் அதர்மம் அடியெடுத்து வைக்கின்றதோ அவ்வப்பொழுதெல்லாம் பரமாத்மா உதித்து மக்களைக் காப்பாற்றுவார்' என்று. அதேபோல, எவ்வெப்பொழுதெல்லாம் நம்முடைய சத்தியாக்கிரகஇயக்கத்திற்கு இடையூறு வரும் என்ற நிலைமை ஏற்படுகின்றதோ அவ்வப்பொழுதெல்லாம் ஒரு தியாகி தோன்றி அந்த இயக்கத்தை வலுப்படுத்தினார்கள். அவர்தான் சர்தார் வேதரத்தினம் பிள்ளை.

''தமிழ்நாட்டிற்கு இரண்டு சர்தார் உண்டு. மற்றவர்களெல்லாம் சர்தார் இல்லை. சென்னையில் ஒரு சர்தார் பி.எம். ஆதிகேசவலு நாயக்கர். இரண்டு சர்தார்கள் தான் நம்முடைய தமிழ்நாட்டிலே தலையெடுத்தார்கள். இந்த சர்தார் பட்டம் வேதரத்தினம் பிள்ளை அவர்களுக்கு காங்கிரஸ் மாநாடு நடந்தபொழுது அளிக்கப்பட்டது. ஆனால் அவருக்கு என்ன ஏற்பட்டது தெரியுமா? நானூறு ஏக்கர் உப்பளத்தை எல்லாம் பறிமுதல் செய்து சர்க்கார் எடுத்துக்கொண்டார்கள். விடுதலைஅடைந்த பிறகு தான் அந்த நிலங்கள் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது. 18 ஆண்டுகள் அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள், நஷ்டங்கள எல்லாவறறையும் அளவிட்டுச் சொல்ல முடியாது. ஆனால் தியாகத்திலே பிறந்த -தியாகத்திலே வளர்ந்த காங்கிரஸ் ஊழியர்கள் எதையும் இலட்சியம் செய்யவில்லை. ஆனால் இந்த தியாகப் பரம்பரையைச் சேர்ந்த காங்கிரஸ் தியாகிகளுக்கு நன்றாகத் தெரியும் எவ்வளவு இன்னல்களுக்கிடையே, எவ்வளவு கொடுமையான நடவடிக்கைகளுக்கிடையே அவர்கள் தலைநிமிர்ந்து நின்று தங்களுடைய சுதந்திர இலட்சியத்தை அவர்கள் நிறைவேற்றினார்கள் என்பது. உலகத்திற்கே இது ஒரு புதுமை.

''நாட்டிலே இருக்கின்ற சட்டத்தை எதிர்ப்பதன் மூலமாக நாட்டில் இருக்கின்ற சட்டத்துடன் ஒத்துழையாமை செய்வதன் மூலமாக பிற நாடு ஒரு நாட்டை ஆளமுடியாது என்பதை நிரூபிக்கக்கூடிய ஒரு இயக்கமாக இருந்தது. அந்தத் தத்துவத்தை ஈன்றவர்தான் காந்திஜி அவர்கள்! அவருடைய ஆன்மா நிச்சயமாக இன்றைக்கு சாந்தியடையும். மனப்பூர்வமாக சந்தோஷிக்கும்.

''அதேபோல நம்முடைய தலைசிறந்த தலைவர் ராஜாஜி அவர்கள், தனக்கு எவ்வளவோ நல்ல வசதியெல்லாம் இருந்தும் அவற்றையெல்லாம் ஒதுக்கி காங்கிரஸ் தொண்டிலே ஈடுபட்டு ஒவ்வொரு இயக்கத்திலும் அவர்கள் தலைமை தாங்கி நடத்தி -நம்முடைய நாட்டினுடைய விடுதலைக்கு அடிகோலினார்கள். அடித்தளம் நாட்டினார்கள். அந்தப் பெரியோர்கள் வழியிலே வந்த தொண்டர்கள் அனைவரையும் நான் பாராட்டுகின்றேன்.

''58 ஆண்டுகளுக்குப் பிறகு நாம் இதே இடத்திலே கூடி சந்தோஷமாக ஒரு விடுதலயடைந்த சுதந்திரப் புருஷனாக - வீரனாக நின்று நாம் பேசுவோம் என்று கனவில்கூட அன்று கண்டிருக்கமாட்டார்கள். அக்காலத்தில் சிறைக்குச் சென்றவர்கள் எல்லோருக்கும், தாங்கள் சட்டசபை அங்கத்தினர்களாக அல்லது ஜனாதிபதியாக மந்திரியாக வருவோம் என்ற கனவுகூடக் கிடையாது. ஒரு சிறு உதாரணம் சொல்ல விரும்புகின்றேன்.

''1942ஆம் ஆண்டு 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கம் சற்றேறக்குறைய 45வது ஆண்டுக் காலத்தில் ஓடிந்துவிட்டது. தஞ்சைச் சிறையிலே நாங்கள் இருபது, முப்பது பேர் இருந்தோம். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்-நாங்கள் எல்லோரும் மாலை வேளையில் சிறிதுதூரம் நடந்து போவோம். ஒருநாள் ராமசாமி ரெட்டியார் அவர்கள், என்னிடத்திலே சொன்னார்கள்; என்ன ஆர். வி. பாருங்க ஜப்பானும்தோற்றுப்போயிட்டான். ஜெர்மனிக்காரனும் தோற்றுப்போயிட்டான். இனிமே நமக்கு அடுத்த இயக்கம் வநதால்தான் ஏதாவது விமோசனம் கிடைக்கும். அடுத்த இயக்கம் எப்போது வரும்னு சொல்லவும் முடியாது. காந்திஜி எப்போது பார்த்தாலும் 10 வருஷத்திற்கு ஒருதரம் தான் இயக்கம் ஆரம்பிக்கிறார். 1920ல் ஒரு இயக்கம். 1930வது இயக்கம், 1940, 1942 இயக்கம் என்று.... அதனாலே அடுத்த 1952ஆம் ஆண்டு வரையிலும் நாம் சிறையிலே இருக்கப் போகிறோமா அல்லது நாம் எல்லோரும் வெளியிலே வந்து மறுபடியும் இயக்கத்திலே சேரப்போகிறோமா என்று அவர்கள் கேட்டார்கள்.

''ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் தமிழகத்தில் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நம்முடைய ஆட்சியில் -நல்லாட்சியைக் கண்டு களித்தார்கள். ஆகவே இன்றும் தியாகம் செய்த எல்லோ

ருக்கும் தலை வணங்குகின்றேன். ஈடுபட்ட ஒவ்வொருவருக்கும் நான் பாராட்டுதல் தெரிவிக்கின்றேன். இந்த இயக்கத்தை நடத்திய தலைவர்கள் எல்லோருக்கும் நாம் அஞ்சலி செலுத்துகின்றோம். வாழ்க பாரதம்! வாழ்க மணித்திரு நாடு! வந்தே மாதரம்!''

**ஆணையர்-செயலர் நன்றி**

''பெருமதிப்பிற்குரிய மேதகு இந்தியக்குடியரசுத் தலைவர் அவர்களே! பெருமதிப்பிற்குரிய மேதகு தமிழக ஆளுநர் அவர்களே! சரித்திரப் புகழ்பெற்ற 1930ஆம் ஆண்டு உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்கு பெற்ற தியாகிகளே! மதிப்பிற்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்களே! மீண்டும் நடத்திக் காட்டப்படுகின்ற உப்புச் சத்தியாக்கிரகத்தில் உற்சாகமாகவும், உத்வேகத்துடனும் பங்கு கொள்ளும் வீரர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! மாணவச் செல்வங்களே! மற்றும் நண்பர்களே! வணக்கம்.

''சரித்திரப்புகழ்பெற்ற 1930-ஆம் ஆண்டு உப்புச் சத்தியாக்கிரகத்தினை மீண்டும் நினைவுகூருகின்ற வகையில் நடைபெறும் உப்பு யாத்திரையில் பங்கு பெற்றவர்களை நல்லாசி கூறி வரவேற்கவும், சரித்திரம் படைத்த அந்த உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்குபெற்ற உத்தமத் தியாகிகளைப் பாராட்டவும், பல்வேறு பணிகளுக்கிடையே மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் வருகை தந்தது சரித்திரத்தில் இடம் பெறும் மற்றொரு தேசிய நிகழ்ச்சியாகும். மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்குத் தமிழக அரசின் சார்பாகவும், உங்களின் சார்பாகவும் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''இம்மாதம் 13ஆம் தேதி தமிழ் வருஷப் பிறப்பன்று உப்பு யாத்திரை திருச்சிராப்பள்ளியில் தொடங்கியபொழுது வாழ்த்தி, வழியனுப்பி இன்று இங்கு அந்த யாத்திரையில் பங்கு பெற்றவர்களை வரவேற்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் மேதகு ஆளுநர் அவர்களுக்கு அரசின் சார்பிலும், உங்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். 1930ஆம் ஆண்டு மூதறிஞர் இராஜாஜி அவர்களின் தலைமையில் தொடங்கிய சரித்திரப் புகழ்வாய்ந்த உப்புச்சத்தியாக்கிரகம் இந்திய வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்படவேண்டிய ஒரு மாபெரும் அத்தியாயமாகும். தங்களையே நாட்டுக்கு அர்ப்பணித்துக் கொண்டு, அந்த சுதந்திர வேள்வியில் பங்கு கொண்ட உத்தமத் தியாகிகளில் பதினொருவர்-

புனிதப்பயணம் தொடர்பான வண்ணப் படங்கள் (பக்கம் 27-30)



குறிப்பாக பெருமதிப்பிற்குரிய டாக்டர் ஜி. ராமச்சந்திரன், திரு ஓ.வி.அளகேசன் அவர்கள் முதிர்ந்த வயதிலும், சிரமத்தைப் பாராது இந்தச் சிறப்புமிகு நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருப்பது நமக்கெல்லாம் பெருமையையும் பூரிப்பையும் தருகின்றது. அந்தத் தியாகச் செம்மல்களுக்கு, தமிழ்நாடு அரசின் சார்பிலும் உங்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு வருகை தந்துள்ள மதிப்பிற்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் குறிப்பாக திரு மூப்பனார் அவர்களுக்கும், திரு ரங்கராஜன் குமாரமங்கலம் அவர்களுக்கும் தமிழக அரசின் சார்பிலும் உங்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''மீண்டும் நடத்தப்படும் உப்பு யாத்திரையில்பங்கு கொண்டு அரிய வாய்ப்பைப் பெற்ற வீரர்கள், 221 கிலோ மீட்டர் தூரத்தை 16 நாட்களாக சளைக்காது களைப்பின்றி நாட்டுப்பற்று ஒன்றே கருத்தாகக் கொண்டு நடந்து வந்துள்ளார்கள். அந்த வீரர்கள் அனைவருக்கும் குறிப்பாக விடுதலைப் போர் வீரர் சர்தார் ஆதிகேசவலுவின் புதல்வர் வழக்கறிஞர் திரு.தெய்வசிகாமணி அவர்களுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பிலும் உங்கள் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாபெரும் நிகழ்ச்சியில் பங்கு கொண்டு சிறப்பித்த 40வது இந்திய சுதந்திரதின விழா மற்றும் நேரு நூற்றாண்டு விழாக் குழு உறுப்பினர்களுக்கு அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விழாவின் சிறப்பிற்கு மிகவும் காரணமான உள்ளூர்ப் பிரமுகர்கள் அனைவருக்கும் குறிப்பாக சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களின் குமாரர் திரு அப்பாக்குட்டி அவர்களுக்கும், திரு. வயிரவன் அவர்களுக்கும் அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''திருச்சிராப்பள்ளி விழாவும், வேதாரணியம் விழாவும் சிறப்பாக நடைபெற்றதற்கு எல்லாவிதத்திலும் தக்க ஆலோசனைகளைக் கூறி சிரமத்தைப் பொருட்படுத்தாது டெல்லியிலிருந்து நேரில்வந்து உதவி செய்த 40வது இந்திய சுதந்திரதின விழா மற்றும் நேருநூற்றாண்டு விழாக் குழு உறுப்பினர் மேஜர் ஜெனரல் நரேந்திரசிங் அவர்களுக்கும், மைய அரசின் செயலாளர் திரு.முராரி அவர்களுக்கும் மற்ற உறுப்பினர்களுக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''இங்கு வருகை தந்துள்ள பத்திரிகை நண்பர்கள், தொலைக்காட்சி, வானொலி நிலையத்தாருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புகழ்மிக்க யாத்திரை சிறப்பாக நடைபெற எல்லா விதத்திலும் உதவி செய்த தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.இராமு அவர்களுக்கும் மற்றும் அரசு அலுவலர்கள் அனைவருக்கும் மற்றும் இவ்வினிய விழாவின் நிகழ்ச்சிகளில் பங்கேற்றுச் சிறப்பித்த அனைவருக்கும், திரளாக வந்துள்ள பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.''

**அதிகாலையில் அகஸ்தியம்பள்ளியில்...**

வேதாரணியம் உப்பு யாத்திரை நிறைவு விழா-உப்பு எடுக்கும் விழா 30.4.1988 காலையில் அகஸ்தியம் பள்ளியில் நடைபெற்றது. அதிகாலை 3.45 மணிக்கு, தொண்டர்

கள் வேதாரணியத்தை விட்டுப் புறப்பட்டார்கள். அவர்கள் 6.2 கிலோ மீட்டர் தொலைவு நடந்து 5.30 மணிக்கு அகஸ்தியம்பள்ளியை அடைந்தார்கள்.

அன்று ராஜாஜி உப்பு எடுக்கத் தொண்டர்களுடன் சென்றபோது அன்றைய கலெக்டர் தார்ன், அவர்களுக்குச்சோறு தண்ணீர் கொடுக்கக் கூடாது என்று உத்தரவு போட்டார். அப்பொழுது நாடு அடிமைப் பட்டுக்கிடந்தது. இன்றோ இந்தத் தொண்டர்களைவரவேற்கத்தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர், செய்தி சுற்றுலாத்துறைச்சிறப்பு ஆணையர் மற்றும் செயலர், மற்றும் உயர் அதிகாரிகள் மட்டுமல்லாமல் மேதகு ஆளுநரின் பெருமதிப்பிற்குரிய ஆலோசகர் திரு ஜி.வி.ராமகிருஷ்ணா அவர்களும் அந்த இடத்திலிருந்தார்கள். இதற்குக் காரணம் இன்று நாடு விடுதலை பெற்று தியாகத்தைப்போற்றவும்பாராட்டவும் முன் வந்திருப்பதுதான்.

மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி.ராமகிருஷ்ணா அவர்களும், தொண்டர்களும் ராஜாஜி 1930-ல் உப்பெடுத்த ஞாபகார்த்த ஸ்தூபிக்கு மலர் அஞ்சலி செலுத்தி விட்டு உப்பளத்தில் இறங்கி உணர்ச்சி மேலிட்டவர்களாய் மிகுந்த கட்டுப்பாடுடன் வரலாற்றை நினைவு கூரும் வகையில் உப்பெடுத்தார்கள். உப்பு அள்ளும் பொழுது 'வந்தே மாதரம்', 'பாரத மாதாவுக்கு ஜே' என்ற முழக்கம் வானைப் பிளந்தது.

**ஆணையர்-செயலர் வரவேற்புரை**

அனைவரையும் வரவேற்று செய்தி சுற்றுலாத்துறையின் சிறப்பு ஆணையர்-செயலர் திரு செ.ராம்தாஸ் அவர்கள் பேசும் பொழுது ரத்தினச் சுருக்கமாக இந்த இயக்கத்தின் வரலாற்றையும் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

''தண்டியில் உப்பெடுத்து வெள்ளை ஏகாதிபத்திய ஆட்சியை உலுக்கி உடைத்தெறிந்தார் உத்தமர்-அண்ணல் காந்தியடிகள். அதே போல் மூதறிஞர் இராஜாஜி இதே இடத்தில் 58 வருடங்களுக்கு முன்பு உப்பு எடுத்து, உத்தமர் காந்தியடிகளுக்கு உறுதுணையாக இருந்து உதவினார். அது அன்றைய வரலாறு.

''உப்பு யாத்திரையை இத்தலைமுறை இளைஞர்களுக்கு நினைவூட்டி அவர்களை 21-ஆம் நூற்றாண்டை நோக்கி வீர நடை பயில வைத்தார், மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள். இது இன்றைய வரலாறு.

''மகாத்மாவின் தண்டி யாத்திரையைப் போன்றே சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது 1930-ல் நடந்த வேதாரண்யம் யாத்திரை. விடுதலைக்கு வித்திட்ட பெருமை அதற்கு உண்டு.

''58 ஆண்டுகளுக்கு முன்னால் ராஜாஜியும், அவரது தோழர்களும் அகஸ்தியம் பள்ளியில் எங்கே உப்பெடுத்தார்களோ, அங்கேயே உப்பெடுத்து, இந்த வேதாரணிய யாத்திரை இன்று நிறைவடைகிறது.

''சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிறைவு விழாவில் இந்த தேசிய நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கென்றே சென்னையிலிருந்து மேதகு ஆளுநரின் ஆலோசகர் பெருமதிப்பிற்குரிய திரு ஜி.வி. இராமகிருஷ்ணா அவர்கள் வந்திருப்பது நாம் பெற்ற பேறேயாகும். பல்வேறு வேலைகள் மலைபோல் குவிந்திருந்தாலும், இந்நிகழ்ச்சியின் தேசிய முக்கியத்துவம் கருதியும், தியாக சீலர்களைப்போற்றிப் பெருமைப்படுத்த வேண்டும் என்று நினைத்தும் ஆலோசகர் அவர்கள் வந்திருக்கிறார்கள். உங்கள் அனைவரின் சார்பாகவும் அவர்களை வருக வருக என்று வரவேற்கிறேன்.

''மத்திய அரசும், மாநில அரசும் தோளோடு தோள் நின்று இணைந்து பணியாற்றியதால்தான், வேதாரணிய உப்பு யாத்திரை இன்று ஒப்பற்ற வெற்றியை ஈட்டியிருக்கிறது. இரண்டு அரசுகளும், இரண்டு அரசின் , அலுவலர்களும் எப்படி ஒன்றுபட்டு ஒருங்கிணைந்து செயல்படவேண்டும் என்பதற்கு இது சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

''மேஜர் ஜெனரல் நரேந்திரசிங் அவர்களின் தக்க ஆலோசனைகளின்படி அகஸ்தியம் பள்ளியின் அழியாத வரலாற்றுச் சின்னமாகத் திகழும் வேதாரணிய உப்பு யாத்திரை நினைவு ஸ்தூபியை எழில் கொஞ்சும் இடமாகவும் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளித்து மனதுக்கு மகிழ்ச்சியும், சாந்தியும் தரும் இடமாகவும் அபிவிருத்தி செய்ய உத்தேசித்துள்ளோம். இதற்கான தொழில் நுட்ப ஆலோசனைகளையும் பிற உதவிகளையும் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு இடங்களிலிருந்து அவர் அனுப்புவதாக உறுதி கூறியிருக்கிறார். இந்த இடம் வேதாரணியத்தின் பிருந்தாவனமாகும் என்ற நல்ல செய்தியை இந்த நேரத்தில் உங்களிடம் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.''

**திரு. வே. அப்பாக்குட்டி உரை**

திரு வே.அப்பாக்குட்டி, அவர்கள் பேசும்பொழுது குறிப்பிட்டதாவது;

''ராஜாஜி அவர்களும் என் தந்தையார் சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களும் மற்ற தொண்டர்களும் உப்பெடுத்தபோது இங்கே போக்குவரத்துச் சாலைகள் எதுவும் கிடையாது. ஆனால் இப்பொழுது சாலைவசதி இருக்கிறது. அப்பொழுது மாஜிஸ்திரேட் அவர்களே இந்த இடத்திற்கு வந்துராஜாஜிக்குத் தண்டனை அளித்தார். இப்படி இந்தியாவில் வேறு எங்கும் நடந்தது இல்லை. உப்பு, ஏழைகளின் உணவு. அதனால் உப்புமீது விதிக்கப்படும் செஸ் வரியை அரசு ரத்து செய்ய வேண்டும்.''

**திரு தெய்வசிகாமணி உரை**

திரு பி.ஏ. தெய்வசிகாமணி பேசும்பொழுது, இந்தப் புனிதப் பயணத்தின் வெற்றிக்கு ஒத்துழைப்பு நல்கிய தமிழக அரசுக்கும் செய்தி சுற்றுலாத் துறையின் செயலர், இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர்களுக்கும் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

**ஆலோசகர் உரை**

பின்னர் மேதகு ஆளுநரின் மதிப்பிற்குரிய ஆலோசகர் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா அவர்கள் பேசும் பொழுது, ''நாம் காந்தியின் தலைமையில் அரசியல் விடுதலைக்காகப் போராடினோம். அது கிடைத்து விட்டது. இப்பொழுது பொருளாதார விடுதலைக்காகப் போராட வேண்டி உள்ளது. இதற்காக அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும். தியாகமும், உழைப்பும் தான் நாட்டைப் பலப்படுத்தும். இங்கே திரு அப்பாக்குட்டி அவர்கள் பேசும் பொழுது, உப்பு சம்பந்தமாகச் சில பிரச்சினைகளைப் பற்றிச் சொன்னார்கள். அவற்றை அரசு பரிசீலிக்கும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்'' என்று குறிப்பிட்டார். அதன் பிறகு செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா.கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப., அவர்கள் தியாகத் தொண்டர்களுக்கும், பொது மக்களுக்கும் உறுதிமொழி செய்து வைத்தார். அந்த உறுதி மொழி வாசகம் வருமாறு:

**இத்திருநாளில்**

1. இந்தியத் திருநாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பேன்;
2. வகுப்பு ஒற்றுமையைப் பேணிக் காப்பேன்;
3. கட்டுப்பாடான வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகுவேன்;
4. எளிய மக்களின் உயர்வுக்காக எந்நாளும் உழைப்பேன்.
5. இந்தியத் திருநாடு வலிமையும் வளமையும் பொருந்தி மேலும் சிறந்து விளங்க அயராமல் பாடுபடுவேன் என்று உறுதி கூறுகிறேன்.

**நன்றி நவிலல்**

இறுதியில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா. இராமு, இ.ஆ.ப அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துப் பேசுகையில் தொண்டர்கள் நடந்து வந்த கிராமங்களிலெல்லாம் மக்களின் குறைகளும், கோரிக்கைகளும் எவ்வாறு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதையும், இராஜாஜி உப்பெடுத்த இந்த இடத்திற்கு எப்படி மிக விரைவாகவும், வசதியாகவும் பாதை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிட்டார்.

வேதாரணியம் கஸ்தூர்பா காந்தி கன்னியா குருகுலம் பெண்கள் மேல்நிலைப்பள்ளிமாணவிகள்தேசபக்திப் பாடல்களும், தெய்வபக்திப் பாடல்களும் பாடினார்கள். ஏராளமான பெண்கள் நூற்பு வேள்வியில் கலந்து கொண்டார்கள். அதிகாலை வேளையில் மக்கள் பெருந்திரளாகக் கலந்துகொண்டு தியாகச் செம்மல்களைப் போற்றியது பார்த்தவர்களைப் பரவசப்படுத்தியது. மொத்தத்தில் இரு விழாக்களும் வேதாரணியம் மக்களிடையேஎன்றைக்கும் பசுமையாக நிலைத்திருக்கும்.

# வளம் சேர்க்கும் வளர்ச்சித் திட்டங்கள்

தமிழ்நாட்டில் சீரான நிர்வாகம், சிறப்பான திட்டங்கள் மூலம் மக்களின் தேவைகள் விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மக்களது வாழ்க்கைத் தரம் உயர்ந்து அவர்களது இல்லங்களிலும் உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்க அரசு அரும்பாடுபடுகிறது. இதை மக்கள் உணர்ந்துள்ளனர். அரசின் பல முற்போக்குத் திட்டங்கள் மக்கள் மற்றும் பத்திரிகைகளின் பாராட்டைப் பெற்று வருவதையும் பார்க்கிறோம்.

மக்கள் நலனில் மற்றுமொரு மைல் கல்லாக, செய்திருக்கிற, செய்யப் போகிற செயல்களின் தொகுப்புகள் சிலவற்றை, **தலைமைச் செயலர் திரு எம். எம். ராஜேந்திரன், இ.ஆ.ப.,** அவர்கள் 3-5-1988 அன்று தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் விளக்கிச் சொன்னார். அதன் விவரம் வருமாறு:

**வீட்டு வசதி**

உலக வங்கி உதவி பெற்று, ரூ 632 கோடி செலவில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டமொன்று நிறைவேற்றப்பட இருக்கிறது. இதன்படி, சென்னை, திருச்சி, வேலூர், கோவை, ஈரோடு, திருப்பூர், மதுரை, சேலம், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய நகரங்களில் வீட்டுவசதி போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்படும். இவை 6 ஆண்டுகளில் முடிக்கப்படும்.

**குடும்ப நலம்**

சென்னை, பம்பாய் நகரங்களில் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த உலக வங்கி உதவியுடன் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. 7 ஆண்டுகளில் நிறைவேற இருக்கும் இத்திட்டத்திற்காகச் சென்னை நகருக்கு மட்டும் ரூ 60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரில் குடும்பக் கட்டுப்பாட்டு வசதிகளைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும். தாய்-



இந்த நகரங்களில் வீடுகள் கட்டுதல், தெரு விளக்குகள் அமைத்தல், வடிகால் வசதி செய்தல் போன்றவற்றுக்கு ரூ 306 கோடி செலவிடப்படும்.

சாலைகள் அமைத்தல், வட்டப்பாதை, சுற்றுப் பாதை அமைத்தல், மேம்பாலம் கட்டுதல், புதிய பேருந்துகள் விடுதல் போன்றவைகளுக்காக ரூ. 159 கோடி செலவிடப்படும். இதில், பல்லவன் போக்குவரத்துக் கழகம் 900 பேருந்துகள் வாங்க ரூ 59 கோடி வழங்கப்படும்.

சேய் நலம், குழந்தைகள் நலம் பேணல், மகப்பேறு மருத்துவமனை, ஆரம்பச் சுகாதார நிலையங்கள், குடும்பக் கட்டுப்பாட்டுக்கான அறுவைச் சிகிச்சை முகாம்கள் நடத்துதல் போன்ற குடும்ப நலத் திட்டத்தின் எல்லா வசதிகளும் ஒருங்கிணைத்து இதில் செயல்படுத்தப்படும்.

**சுற்றுப்புறச் சூழல்**

கூவம், பக்கிங்காம் கால்வாய், அடையாறு போன்ற ஆறுகளைத் தூர்வாரி ஆழப்படுத்தி, கரைகளைச் செப்

பனிட்டு, நீர்வழிப் போக்குவரத்துக்கு ஏற்றதாக மேம்படுத்த ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. உலக வங்கி போன்ற வெளிநாட்டு நிறுவனங்களின் உதவி பெற்று இத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு ரூ. 194 கோடி செலவாகும் என்றும், இதுகுறித்து ஆய்வு நடத்தப்படுவதாகவும், ஐரோப்பிய நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. இதற்காக அந்த நிறுவனம் சுமார் ரூ. 98 லட்சம் சொந்தச் செலவில் ஆய்வு அறிக்கையொன்றைத் தயாரித்து இத்திட்டத்தை நிறைவேற்ற ஆர்வம் காட்டுகிறது.

**குடிநீர் வசதி**

தமிழ்நாடு முழுவதும் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க ரூ. 10 கோடி செலவில் 4,000 குழாய்க் கிணறுகள் 1988 ஜூலை மாதத்திற்குள் அமைக்கப்படும்.

முதற் கட்டமாக 685 குழாய்க் கிணறுகள் அமைக்க திட்டமிடப்பட்டு. 627 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது கட்டமாக 2,000 குழாய்க் கிணறுகளும், மூன்றாவது கட்டமாக 1,315 குழாய்க் கிணறுகளும் அமைக்கப்படும்.

**சாதிச் சான்றிதழ்**

மேல்படிப்பு, தொழிற்கல்வியில் சேருவது, அரசுப் பணிகளுக்கு விண்ணப்பிப்பது போன்றவற்றின் போது ஒவ்வொரு முறையும் சாதிச் சான்றிதழ் வாங்கி இணைக்க வேண்டியிருக்கிறது. இனிமேல் அதற்கு அவசியம் இராது.

தாசில்தார் அலுவலகத்தில் ஒருமுறை குறிப்பிட்ட படிவத்தில் சாதிச் சான்றிதழ் வாங்கி வைத்துக் கொள்ளலாம். இவ்வாறு ஒருவருக்குத் தாசில்தார் அலுவலகத்தில் கொடுக்கப்படும் சான்றிதழில் ஒரு எண் கொடுக்கப்படும். கல்லூரிகள், தொழிற் கல்விக் கூடங்கள் அல்லது அரசுப் பணிக்காக விண்ணப்பிப்பவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ் எண் விவரத்தை மனுவில் குறிப்பிட்டால் போதுமானது. சான்றிதழை மனுவோடு சேர்த்து அனுப்பத் தேவையில்லை. நேர்முகப் பேட்டிக்குப் போகும்போது சான்றிதழைக் காட்டினால் போதும்.

**வாக்காளர் பட்டியல்**

வாக்காளர் பட்டியலில் புதிதாகப் பெயர் சேர்க்க 5,78,603 மனுக்கள் வந்துள்ளன. இவற்றில் 20,934 மனுக்கள் மீது ஆட்சேபணை எழுப்பப்பட்டு அவை பரிசீலனையில் உள்ளன. இவற்றின் மீது முடிவு விரைவில் எடுக்கப்படும்.

1984-ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலில் இருந்த வாக்காளர் எண்ணிக்கையை விட,





தற்போது 13 அல்லது 14 சதவீதம் வரை வாக்காளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 1988 ஏப்ரல் 2-ஆம் நாள் வெளியிடப்பட்டுள்ள வாக்காளர் வரைவுப் பட்டியல்படி மொத்த வாக்காளர் எண்ணிக்கை 3 கோடியே 50 இலட்சத்து 77 ஆயிரத்து 738. இதில் ஆண்கள் ஒரு கோடியே 77 இலட்சத்து 307. பெண்கள் ஒரு கோடியே 73 இலட்சத்து 77 ஆயிரத்து 431.

1984-ஆம் ஆண்டில் 39,635 வாக்குச் சாவடிகள் இருந்தன. இவை, வரவிருக்கும் தேர்தலில் 42,639 ஆக உயர்த்தப்படும்.

**தமிழில் அரசியல் சட்டம்**

இந்திய அரசியல் சட்டம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சில் உள்ளது. அது 1988 ஜூன் மத்தியில் வெளியிடப்படும்.

**அல்லிக்குளத்தில் அங்காடி**

மூர்மார்க்கெட் வியாபாரிகளுக்குப் புதுக்கடைகள் கட்டிக் கொடுப்பதற்கு அல்லிக்குளம் பகுதியில் ரூ. 22 கோடி செலவில் 9 மாடி புதிய கட்டடம் கட்டப்படுகிறது.

**கல்வி வளர்ச்சி**

தமிழ்நாட்டில் கல்வி வசதிகளைப் பெருக்கும் திட்டப்படி 5,995 தொடக்கப் பள்ளிகளில் கரும்பலகை போன்ற வசதிகளைச் செய்வது, கற்பிக்கும் ஆசிரியர்களின் தரத்தை உயர்த்துவது, அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பது போன்றவற்றிற்காக மத்திய அரசு ரூ. 4.80 கோடி அளித்துள்ளது. 450 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள்.

1669 இடைநிலைப் பள்ளிகளிலும், 152 உயர்நிலைப் பள்ளிகளிலும், 405 மேல்நிலைப் பள்ளிகளிலும் விஞ்ஞானக் கருவிகள் வாங்கச் சுமார் 2.18 கோடி ரூபாயை மத்திய அரசு வழங்கியுள்ளது.

மேல்நிலை வகுப்பில் தொழிற்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக 100 மேல்நிலைப் பள்ளிகள் தேர்வு

செய்யப்பட்டு அவைகளுக்குக் கட்டட வசதிகள், கருவிகள் போன்ற வசதிகள் செய்து தரப்படும். ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்படும்.

**வயது வந்தோர் கல்வி**

15 வயதிலிருந்து 35 வயதுக்குட்பட்டவர்களில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் ஒரு கோடியே 17 இலட்சம் பேர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். இவர்களுக்கு முறைசாராக் கல்வி அல்லது வயதுவந்தோர் கல்வி அளிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். 7-ஆவது திட்டக் கால இறுதிக்குள் இவர்களில் 70 இலட்சம் பேருக்கு எழுத்தறிவு அளிக்கப்படும். எஞ்சியுள்ளவர்கள் அனைவருக்கும் 8-ஆவது திட்டக் காலத்திற்குள் எழுத்தறிவு அளிக்கப்பட்டுவிடும். இந்த மகத்தான பணியில் அரசுடன் ஒத்துழைக்க 40 சமூக சேவை நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

**சத்துணவுத் திட்டம்**

தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டு வரும் சத்துணவுத் திட்டத்திற்கு ஆண்டுக்கு ரூ. 178 கோடி செலவிடப்படுகிறது. இதில் உணவிற்காக மட்டும் ரூ. 112 கோடி செலவாகிறது.

இத்திட்டம் மேலும் வலுப்படுத்தப்படும். சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனையும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு உலக வங்கியின் உதவி கிடைக்க நல்ல வாய்ப்பு இருக்கிறது.

**கிராமப் புறங்களில் வறுமை ஒழிப்பு**

கிராமப்புறங்களில் வறுமை ஒழிப்புக்காக நிறைவேற்றப்படும் திட்டங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ், ஏற்கெனவே பயன் பெற்றவர்கள் 1,99,938 பேர்; புதிதாகப் பயனடைந்தோர் 78,189 பேர்.

கிராமப்புறங்களில் நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டப்படி, ரூ. 55 கோடி செலவில் 2.84 கோடி மனித நாட்கள் பணி நடந்திருக்கிறது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டப்படி ரூபாய் 63.59 கோடி செலவில் 3.22 கோடி மனித நாட்கள் பணி நடந்துள்ளது.



## ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்கு இலவசச் சீருடை நோட்டுப் புத்தகங்கள்

தமிழ்நாடு அரசு ஆதிதிராவிட மாணவ, மாணவியர்கட்குப் பல தரப்பட்ட சலுகைகளை நீட்டித்துள்ளது. ஆதிதிராவிட நலப் பள்ளிகள் மற்றும் ஆதிதிராவிட நல விடுதிகளில் பயிலும் தங்கியுள்ள மாணவர்களின் நலனுக்காக உதவித்தொகை மனுக்கள் வழங்கப்படுகின்றன. 1987-88ஆம் ஆண்டு முதற்கொண்டு, பள்ளிகள் மற்றும் விடுதிகளில் மனுக்கள் மற்றும் பதிவேடுகள் இல்லையென்ற நிலை இல்லாமல் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1,146 பள்ளிகள் மற்றும் 780 விடுதிகளில் உள்ள மாணவ,மாணவியர் இதனால் பயனடைகின்றனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் 3 முதல் 10 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்கட்கு, ஆண்டுதோறும் இலவசமாக நோட்டுப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1987-88ஆம் ஆண்டில் 31.23 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. 1988-89ஆம் ஆண்டு நோட்டுப் புத்தகங்கள் வழங்க தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்திடம் கோரப்பட்டுள்ளது. அதன்படி கோடை விடுமுறை முடிந்தபின் பள்ளி திறக்கப்பட்டவுடனேயே நோட்டுப்புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்படும். ஆண்டு தோறும் பலகைகள் 1 முதல் 3-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கட்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. 1987-88ஆம் ஆண்டில் ரூபாய் 3,75,461 செலவழிக்கப்பட்டுள்ளது. 98,439 மாணவர்கள் பயனடைந்தனர்.

ஆதிதிராவிட நலப்பள்ளிகள் மற்றும் விடுதிகளில் உள்ள மாணவர்கட்கு இலவசமாக இரண்டு செட்டு சீருடைகள் தரப்படுகின்றன. 1987-88ஆம் வருடம் இதற்கென்று ரூபாய் 1,43,41,800 செலவழிக்கப்பட்டுள்ளது. 1988-89ஆம் ஆண்டு சீருடைகள் பள்ளித் துவக்கத்திலேயே மாணவர்களுக்கு வழங்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


**சாண எரிவாயு**

1987-88இல் சாண எரிவாயுக் கலன்கள் 20,828 ஏற்படுத்தப்பட்டன.

**வகுப்பு ஒற்றுமைக்கு வீரப் பயணம்**

இந்தியா சுதந்திரம் பெற்று 40 ஆண்டுகள் ஆவதையொட்டி மக்களிடையே வகுப்பு ஒற்றுமை, நாட்டுப்பற்று, தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றை வளர்க்கும் வகையில், காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை 19 மாநிலங்கள் வழியாக, 37 நகரங்கள் மீது, இறக்கை கட்டிக்கொண்டு வானத்தில் பறவைபோல் பறந்து செல்ல முன்வந்துள்ளார் சியாமளா பிரசாத் என்ற வீராங்கனை. இப்பயணம் 1988 மே முதல் நாள் ஜம்முவில் தொடங்கி ஜூன் 12-இல் மதுரையில் முடிவடையும். இவர் 22-5-88 கோவையிலும், 24-5-88 மற்றும் 26-5-88 சென்னையிலும் தோன்றுவார்.

—நமது செய்தியாளர்






மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள், மதுரை காமராஜ் பல்கலைக் கழக வளாகத்தில், காமராஜர் அவர்களின் திருவுருவச் சிலையை 26-4-88 அன்று திறந்து வைத்தார்.

மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் 24-4-'88 அன்று சென்னை நகரக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் பவள விழாவை முன்னிட்டு ஊழியர்களின் குடியிருப்புக்கு அடிக்கல் நாட்டினார்.






# படமும் செய்தியும்



மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் கூட்டத்தை ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி. வி. இராமகிருஷ்ணா, இ.ஆ.ப., அவர்கள் 25-4-'88 அன்று தலைமைச் செயலகத்தில் தொடங்கிவைத்தார்.



ஹஜ் பயணத்துக்குக் கப்பல் மூலம் செல்லும் பயணிகளைத் தேர்ந்தெடுப்பதற்குரியகுலுக்கலை ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ. பத்மநாபன், இ.ஆ.ப., அவர்கள் 24-4-'88 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் தொடங்கி வைத்தார்.



பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 98-வது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னையில் உள்ள அன்னாருடைய திருவுருவச் சிலைக்கு அரசின் சார்பில் தலைமைச் செயலர் திரு எம். எம். ராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# உப்புச் சத்தியாக்கிரக நினைவைப் போற்றும் புனிதப் பயணம்

*சென்ற இதழில் (1-5-88) "உப்புச் சத்தியாக்கிரக நினைவைப் போற்றும் புனிதப் பயணம்" என்னும் கட்டுரையில் 13-4-88 முதல் 18-4-88 முடிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தன. இந்த இதழில் 19-4-88 முதல் 30-4-88 முடிய நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.*




**19—4—88**

பாத யாத்திரைக் குழுவினர் வழுத்தூரிலிருந்து புறப்பட்டனர். வழியில் ரெகுநாதபுரம், கோயில் தேவராயன்பேட்டை, பண்டாரவாடை, ராஜகிரி ஆகிய இடங்களில் ஊராட்சி மன்றங்களின் சார்பாக மக்களும், பள்ளிக் குழந்தைகளும் அன்பான வரவேற்பு அளித்தனர். ராஜகிரியில் திரு. வி. ரங்கசாமி மூப்பனார் அவர்கள் பாத யாத்திரையில் கலந்துகொண்டு பாபநாசம் வரை நடந்து வந்தார்.

பாபநாசம் பேரூராட்சியின் சார்பில் அதன் தலைவர் திரு. நாகராஜன் தலைமையில் பாத யாத்திரைக் குழுவினருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. சமூகநலத்துறை மகளிர் அணியின் பூரணகும்ப மரியாதையும் நடைபெற்றது. பாபநாசம் சாரதா மகளிர் மன்றத்தைச் சேர்ந்தவர்கள் தேசபக்திப் பாடல்களையும், கலை நிகழ்ச்சிகளையும் நடத்தினார்கள். பாபநாசம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சியும், நாடகமும் நடைபெற்றது.

மாலை, 4 மணிக்குப் பாதயாத்திரைக் குழுவினர் பாபநாசத்திலிருந்து நல்லூருக்குப் புறப்பட்டுச் சென்றனர். பாபநாசம் ஆர். சி. நடுநிலைப்பள்ளி, மாணவ, மாணவியர் பூரண கும்ப மரியாதையுடன் வழி அனுப்பி வைத்தார்கள். ஏழு மணியளவில் நல்லூர் வந்தடைந்தனர்.

இரவில், திருப்பூர் குமரன் நாடகமும், செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் திரைப்படக் காட்சியும் நடத்தப்பட்டது.

**20— 4— 88**

அதிகாலையில் பாதயாத்திரைக் குழுவினர் நல்லூரிலிருந்து புறப்பட்டுச் சென்றனர். சுந்தரப்பெருமாள் கோயிலில் பூரண கும்ப மரியாதையுடன் பள்ளி மாணவ, மாணவியர் ஆரத்தி எடுத்து வரவேற்றனர். பாத யாத்திரைக் குழுவினருக்கு திரு. ஜி. ரெங்கசாமி மூப்பனார் அவர்கள் வேட்டி மற்றும் துண்டு வழங்கினார். பள்ளி மாணவ, மாணவியர் பக்திப் பாடல்கள் பாடி மலர் தூவி வரவேற்றனர்.

திருவலஞ்சுழியில் பொதுமக்களும், பள்ளி மாணவ, மாணவியரும் திரளாக வந்திருந்து வரவேற்றனர். தாராசுரத்தை வந்தடைந்ததும் பொதுமக்களும், பள்ளிக் குழந்தைகளும் பூரண கும்ப மரி



**கும்பகோணத்தில், நடந்த வரவேற்புக் கூட்டத்தில் (20.4.88) செய்தி- மக்கள் தொடர்புத்துறை இயக்குனர் திரு சி. என். கிருஷ்ண பாரதி, இ.ஆ.ப. அவர்கள் தேசிய ஒருமைப்பாட்டு உறுதி மொழியைப் படித்தார்.**

யாதை, ஆரத்தியுடன் அதிர்வேட்டு முழங்க வரவேற்றனர்.

கும்பகோணம் ஊராட்சி ஒன்றிய மகளிர் மன்றத்தினர் மற்றும் பள்ளி மாணவ, மாணவியரின் பக்திப் பாடல்களும், தேசிய பாடல்களும் பாடப்பட்டன. ஏ.சி.சி. கல்லூரி நாட்டு நலத்திட்டக் குழுவின் சார்பில் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

அன்று மாலை பாத யாத்திரைக் குழுவினர் கும்பகோணம் புறப் பட்டுச் சென்றனர்.

கும்பகோணம் எல்லையில், கும்ப கோணம் நகராட்சியின் சார்பாக அலங்கார வளைவுகள் அமைக்கப் பட்டு இருந்தன.

உச்சிப்பிள்ளையார் கோயில் அருகே சாரங்கபாணி கோயில் சார் பாகப் பூரண கும்ப மரியாதையுடன் பிரசாதம் வழங்கப்பட்டது. பரி வட்டம் கட்டப்பட்டது. அதிர் வேட்டுக்கள் முழங்கின. ஆயிரக் கணக்கான பொதுமக்கள் , பள்ளி மாணவ, மாணவியர்கள் வரவேற்பு அளித்தனர். வழி நெடுக அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு இருந் தன. அலங்கார யானை வரவேற்பு அளித்தது.

குடந்தை ஆடவர் கல்லூரிநாட்டு நலத்திட்டக்குழு சார்பாக காந்திய சிந்தனைகள் அடங்கிய நூல்கள் வழங்கப்பட்டன. செய்தி- மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. சி. என். கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப., திரு. ஜி. ரெங்கசாமி மூப்பனார், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. இ.எஸ்.எம்.பக்கீர் முகமது,முன் னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சிவஞானம், ராஜாராம், ராஜாங்கம், கிருஷ்ணமூர்த்தி, பாப நாசம் ஊராட்சி ஒன்றியத் தலை வர் திரு. கருப்பண்ண உடையார், மன்னை நகர் மன்றத் தலைவர் சிவ. ராஜமாணிக்கம் ஆகியோர் உடன் நடந்து வந்தனர்.

வழுத்தூர் ஜாஸ்மின்பைத்து சபா குழுவினர் பாத யாத்திரையாளர் களுடன் இன்னிசை பாடிச் சென்ற னர். மேடையில் செய்தி - மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. சி. என். கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப., அவர்கள் பாத யாத்திரையாளர் களை வரவேற்றுப் பேசினார். சிறு மலர் மேல்நிலைப் பள்ளியில் பூரண கும்ப மரியாதையுடன் ஆரத்தி எடுத்துச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தேசிய ஒருமைப்பாட்டு உறுதி மொழி செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. சி.என். கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப., அவர் களால்படிக்கப்பட்டது. தொடர்ந்து சிறுமலர் மேல் நிலைப்பள்ளி மற்றும் குடந்தையிலுள்ள அனைத்துப் பள்ளிகளின் சார்பாக, கலைநிகழ்ச்சி யும், தஞ்சாவூர் பி.எஸ். இராம லிங்கம் குழுவினரால் தேசிய ஒருமைப்பாட்டை விளக்கும் நாடக மும் நடத்தப்பட்டது.

**21-4-88**

கும்பகோணத்தில் அதிகாலையில் பிரார்த்தனைக்குப்பிறகு குழுவினர் அருள்மிகுசாரங்கபாணி திருக்கோயி லுக்குச் சென்றனர்.

கும்பகோணம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத் தின் சார்பில் கரகம், பரத நாட்டி யம், தேசியப் பாடல்கள் மற்றும் கிராமியப் பாடல்கள்பாடினார்கள். மதிய உணவு மற்றும் மாலை சிற் றுண்டிக்குப் பிறகு 4 மணி அளவில் பாத யாத்திரைத் தொண்டர்கள் வலங்கைமான் புறப்பட்டார்கள்.

சோழன் போக்குவரத்துக் கழகத் தின் சார்பில் வரவேற்பு கொடுக்கப் பட்டது. வழி நெடுகத் திரளாகப் பொதுமக்களும், பள்ளி மாணவ, மாணவியர்களும், சமூகநலத்துறை யினரும், மகளிர் மன்றத்தினரும் வரவேற்பு அளித்தனர்.

சாக்கோட்டையில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் சார்பிலும், தனியார் நெல் அறவை சார்பிலும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அதிர் வேட்டுகள் முழங்க மேள தாளத் துடன் தாரை தப்பட்டையுடனும் பொதுமக்கள் வரவேற்பு அளித்த னர்.

மருதநல்லூரில் ஆதிதிராவிடப் பெண்கள் கயிறு திரிக்கும் கூட்டு றவுத் தொழிலகத்தின் சார்பாக வரவேற்பு அளித்தனர். திப்பிராஜ புரம் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. எம். கலியபெருமாள் தலை மையில் தாரை, தப்பட்டை, மேள தாளத்துடன் அதிர்வேட்டுகள் முழங்க வரவேற்புஅளிக்கப்பட்டது.

வலங்கைமான் எல்லையில் அருள் மிகு மகா மாரியம்மன்கோயில் சார்பாக பூரண மரியாதை அளிக் கப்பட்டு பிரசாதம்வழங்கப்பட்டது. வலங்கைமான் ஊராட்சி ஒன்றியத்

தலைவர் திரு நடராசன் வரவேற்றார். முஸ்லீம் வாலிபர் சங்கம், அல்லாமாஇக்பால் நற்பணி மன்றம் மற்றும் பெருவாரியான முஸ்லீம் சகோதரர்கள் இணைந்து சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

மின்விளக்குஅலங்காரவளைவுகள், வண்ணத் தோரணங்கள்,பேனர்கள் அமைக்கப்பட்டிருந்தன- மேள்தாளதாரை தப்பட்டையுடன் வரவேற்பு அளித்தனர். கடைவிதி வழியாக யாத்திரைக்குழுவினருடன் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. இராமு, இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு. கே. ஆர். கிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம் கோட்டாட்சியர் முதலியோர் நடந்து வந்தனர். 'வந்தேமாதரம்' என்று கோஷம் எழுப்பினார்கள்.

பாதயாத்திரைக் குழுவினர் முன்னே அலங்கார வண்டி சென்றது. அதில், அண்ணல் காந்தியடிகள் உப்பு எடுப்பது போன்ற வண்ணச் சித்திரமும், பாத யாத்திரைக் குழுவினர் கோஷமிட்டுச் செல்வது போலவும் சித்திரிக்கப்பட்டிருந்தது.

அதைத் தொடர்ந்து பாத யாத்திரைக் குழுவினர், 'கத்தியின்றி ரத்தமின்றி'என்ற பாடலைப் பாடிக் கொண்டு 'வந்தே மாதரம்' என்று முழங்கிக் கொண்டு வந்தனர்.கிராம மக்கள் வயல்வெளிகளிலிருந்து ஓடி வந்து ஊர்வலத்தைப் பார்த்து மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். கலம் வந்தடைந்த குழுவினருக்குப் பெரும் அளவில் அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அன்று இரவு நடந்த பொதுக் கூட்டத்தில் சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களின் பேரர் திரு அ. கேடிலியப்பன் அவர்கள் பேசுகையில், ''இந்தத் தலைமுறைக்குச் சுதந்திரவரலாறு தெரியவேண்டும்'' என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு சிங்காரவடிவேலு அவர்கள் பேசுகையில், ''பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்க வேண்டும்'' என்றார்.

திரு நாவலர் காந்தி அவர்கள் பேசுகையில்,''சுதந்திரப் போராட்ட



செம்மங்குடியிலிருந்து (22.4.88) பாத யாத்திரைக் குழுவினர் புறப்படுதல்.

வலங்கைமான் அரசுமேல்நிலைப் பள்ளியில் பாத யாத்திரைக் குழுவினர்களை வரவேற்று திரு. ரெங்கசாமி மூப்பனார் வாழ்த்துரை வழங்கினார். ஒருமைப்பாட்டு உறுதிமொழியை அடுத்து கலை நிகழ்ச்சிகளும், நாடகமும் நடைபெற்றன.

**22—4—88**

வலங்கைமானிலிருந்து பாத யாத்திரைக் குழுவினர் அதிகாலை புறப்பட்டுச் செம்மங்குடி வந்தனர். வரும் வழியெல்லாம் கிராம மக்கள் உற்சாகத்துடன் வரவேற்றார்கள். அன்புடன் உபசரித்தார்கள். பள்ளிக் குழந்தைகள் ,அணிவகுத்து நின்று முன்னே சென்ற ஊர்தியில் தேச பக்திப் பாடல்கள் ஒலித்துக்கொண்டிருந்தன.

பகல் ஓய்வுக்குப் பிறகு செம்மங்குடியிலிருந்து குழுவினர் புறப்பட்டனர். ஆலங்குடியில், மக்கள் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்றனர். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா.இராமு இ.ஆ.ப. பாத யாத்திரைக் குழுவினரோடு கலந்து கொண்டு, தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழியைப் படித்தார்.

நார்த்தாங்குடியில் திரளான மக்கள் பாதயாத்திரைக் குழுவினரை வரவேற்றார்கள். பிறகு நீடாமங்கலம் ... வரலாற்றை நினைவுபடுத்தவே இந்தப் பாதயாத்திரை'' என்றார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா. இராமு இ.ஆ.ப. அவர்கள் பேசுகையில், 'உப்புச்சத்தியாக்கிரக நினைவுப் பாதயாத்திரை, தஞ்சையில் சரித்திரம் படைத்திருக்கிறது சுதந்திரக் கால நிகழ்ச்சிகளை இக்கால இளைஞர்கள் நினைவுகூர வேண்டும்'' என்றார்

நில நிர்வாகச் சிறப்பு ஆணையர் திரு. ராமமூர்த்தி இ.ஆ.ப.அவர்கள் பேசுகையில் ''தண்டியில் தொடங்கிய உப்புச் சத்தியாக்கிரகம் வெள்ளையனைத் தண்டிக்கும் சத்தியாக்கிரகமாக அமைந்தது'' என்றார். பிறகு அனைவரும்

39...ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்நாடு அரசின் முக்கிய பணிகள் ஒரு தொகுப்பு

### தாழ்த்தப்பட்டோர் நலன் காக்க முன்னுரிமைத் திட்டங்கள்

*1988-89* ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மிக முக்கிய அம்சம் தமிழகத்தில் வாழும் தாழ்த்தப்பட்டவர்களின் நலன் காக்க ஆக்கப்பட்டிருக்கும் முன்னுரிமைத் திட்டமாகும். இத்திட்டத்திற்கு ரூபாய் 150 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### காமராசர் புதிய ஆதிதிராவிடர் வீட்டுவசதித் திட்டம்

இணைப்புச் சாலைகள், குடிநீர் வசதி, தீப் பிடிக்காத குடியிருப்புகள் ஆகியவற்றைத் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் அமைத்துக் கொடுப்பதற்காக மேலும் 27 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் காமராசர் புதிய ஆதி திராவிடர் வீட்டுவசதித் திட்டம் எனப்படும். *(17.3.88)*

### வளரும் தமிழகம்

*(மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் புதுடில்லியில் 19.3.88 ஆம் நாளன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து:)*

''குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டு வரப்பட்ட பிறகு, கடந்த ஒரு மாத கால அளவில், வளர்ச்சித் திட்டப் பணிகளின் செயல்பாட்டு வேகத்தை அதிகரித்துள்ளோம். ஆதிதிராவிடர், பழங்குடியினரின் குடியிருப்புப் பகுதிகளில் புதிய இணைப்புச் சாலைகள் அமைக்கவும் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கவும் அவர்களுக்கென்று தீப் பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காகவும் காமராஜ் ஆதிதிராவிடர் புதிய வீட்டுவசதித் திட்டம் போன்ற புதிய திட்டப் பணிகள் பலவற்றை நாங்கள் கொண்டு வந்துள்ளோம்.

கிராமப்புற இளம்பெண்கள் தம் திருமணத்தை ஒத்தி போடுவதற்காக அவர்களுக்கு ஊக்க உதவியுடன் கூடிய பயிற்சி அளிக்கும் தனித் திட்டமும், கல்லூரி மாணவர்களுக்கான ஊரக முகாம்களும், கல்லூரியில் பயிலும் தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு அறிவியல் பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குவதற்காக ஜவகர்லால் அறிவியல் ஆற்றல் நூல் வழங்கப்படும் திட்டமும், தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய திட்டங்களில் சிலவாகும்.'' *(19.3.88)*

### பாம்பன் பால அமைப்பு

பாம்பன் ரயில் பால அமைப்புப் பணிகளை, *1988* ஜூலை 15க்குள் நிறைவேற்றி முடிப்பதற்கான தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. *(31.3.88)*

### ஓராசிரியர் பள்ளிகளுக்கு இரு ஆசிரியர்கள்; உபகரணங்கள்

தமிழ்நாட்டிலுள்ள ஓராசிரியர் பள்ளிக்கூடங்களை இரு ஆசிரியர் பள்ளிக்கூடங்களாகத் தரம் உயர்த்தவும், தொடக்கப்பள்ளிகளுக்குக் கரும் பலகை உள்பட முக்கியச் சாதனங்களுக்காகவும், மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை நான்கு கோடி எண்பது லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

மாநிலத்திலுள்ள ஓராசிரியர் பள்ளிக்கூடங்கள் அனைத்திலும் இன்னும் மூன்று ஆண்டுகளில் படிப்படியாக இரு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். இதற்காக இந்த ஆண்டு மட்டும் 53 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதேபோல், இந்த ஆண்டு மட்டும் 5995 தொடக்கப்பள்ளிகளில் கரும்பலகை முதலிய முக்கிய சாதனங்களுக்காக நான்கு கோடி 27 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. *(31.3.88)*

### கோட்டூர்புரம் பாலம் திறப்பு

சென்னையில் அடையாறுக்குக் குறுக்கே கோட்டூர்புரம்-நந்தனம் இடையே கட்டப்பட்டுள்ள இணைப்புப் பாலம் 2.4.88 அன்று திறந்து வைக்கப்பட்டது. *(2.4.88)*



### ரூ. 10 கோடி செலவில் ஆழ்துளைக் கிணறுகள்

தமிழ்நாட்டில் நிலவும் வறட்சி நிலையைக் கருத்திற் கொண்டு, ரூ.10 கோடி செலவில் 4,000 ஆழ்துளைக் கிணறுகளை, 1988 ஜூலைக்குள் அமைக்க அரசு விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.


முதல் கட்டமாக ஏப்ரலுக்குள் 685 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்படும். மார்ச் இறுதி வரை 144 ஏற்படுத்தப்பட்டு விட்டன. *(6.4.88)*

### வறுமை ஒழிப்புக்கு ரூ. 154 கோடி

தமிழகத்தில் வறுமை ஒழிப்புத் திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்ற 154 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. *(8.4.88)*

## மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம்

கிராம அபிவிருத்தி, பொது விநியோகத் திட்டத்தைக் குறைபாடின்றிச் சீரமைப்பது, கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது, தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு அமைதிக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படாமல் பாதுகாப்பது ஆகியவையே தமிழ்நாட்டின் குடியரசுத்தலைவர் ஆட்சியின் முன்பாக தற்போதுள்ள தலையாய பிரச்சினைகள் என்று சென்னையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சரக போலீஸ் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள், மாவட்ட போலீஸ் அதிகாரிகள் கூட்டத்தில் மேதகு ஆளுநர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் தெரிவித்தார்கள். (8.4.88)





## மூடப்பட்ட 33 மில்களைத் திறக்க அரசு தீவிர நடவடிக்கை

தமிழகத்தில் மூடப்பட்டுள்ள 33 மில்களைத் திறக்கத் தமிழக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. (14.4.88)

## சென்னைக் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க அரசு நடவடிக்கைகள்

சென்னையின் குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய உடனடி, குறுகிய கால, மற்றும் நீண்டகால நடவடிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில்



தண்ணீர்த் தொட்டிகள், குழாய்க் கிணறுகள், வாகனப் போக்குவரத்து போன்ற பணிகளுக்குச் செலவானதைவிட தற்போது அந்தச் செலவினங்கள் வகையில் ரூ.1.2 கோடி வரை சேமிக்கப்பட்டுள்ளது.

தற்போது 250 லாரிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குறுகிய வீதிகள் மற்றும் குடிசைப் பகுதிகளுக்கு டிராக்டர் மூலம் தண்ணீர் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 500 கைப்பம்புகள் நிறுவப்பட்டு வருகின்றன. சென்னை நகரில் நபர் ஒன்றுக்கு தற்போது விநியோகிக்கப்பட்டுவரும் 7 காலன் தண்ணீரை 10 காலன் தண்ணீராக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

புதிய குடிநீர்த் திட்டத்தினால் 78 ஆயிரம் மக்கள் பலனடைவார்கள். இத்திட்டம் முழுமையடையும்போது 1,70,000 பேருக்குப் பலன் கிடைக்கும்.

இத்திட்டத்திற்காக ரூ 416 லட்சம் நிதி அங்கீகரிக்கப்பட்டது இத்திட்டத்தில் ரூ 86 லட்சம் வரை சேமிப்பு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னை மேற்கு அண்ணாநகர், வில்லிவாக்கம், கொளத்தூர்ப் பகுதிகளுக்குச் சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம் 4 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளது (14 4.88)

## நலிவடைந்த சிறு தொழில்கள் நல்ல முறையில் இயங்க...

தமிழ்நாட்டில் நலிவடைந்த தொழிற்சாலைகள் மீண்டும் நல்ல முறையில் இயங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 560 நலிவடைந்த சிறு தொழில்களுக்கு 23 கோடி ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது.

நலிவடைந்த தொழிற்சாலைகள் நல்ல முறையில் நடைபெற ரூ.5 லட்சம் வரை மறு நிதியுதவி அளிக்க தமிழக அரசு புதிய திட்டம் வகுத்துள்ளது. (22.4.88)

# மதுரை மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்



**1987-88** ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பணிகளுக்காக மொத்தம் ரூ. 1,58,78,900 செலவிட குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டதில், பிப்ரவரி 1988 மாதம் முடிய ரூ. 1,39,72,100 செலவிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள மொத்த செலவினத்தின் 20 அம்சத் திட்டத்தின் கீழ் 392 உழவு மாடுகள் வாங்க வழங்கப்பட்ட ரூ. 31,200 5 விவசாயக் கிணறுகள் வெட்ட செலவிடப்பட்ட ரூ. 23,940, 1598 ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க செலவான ரூ. 3,29,270. ஆதிதிராவிடர் நலபள்ளியில் பயிலும் மாணவ, மாணவியருக்கு இலவச பாடப் புத்தகங்கள் மறறும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கச் செலவிடப்பட்டு ரூ. 84,539. கலப்பு மணம் புரிந்த 5 தம்பதிகளுக்குச் சலுகைகள் வழங்க செலவிடப்பட்ட ரூ. 21,500. ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் கிணறுகள் வெட்ட செலவான ரூ. 2,02,000. மயானப்பாதைகள் மற்றும் சிறுவேலைகளுக்குச் செலவு செய்யப்பட்ட ரூ. 1,90,400. அரசு ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிட நலமாணவர் இல்லங்களில் தங்கிப்பயிலும் 5562 மாணவ, மாணவியர்களுக்குச் சீருடைகள் வழங்க செலவு செய்யப்பட்ட ரூ. 7,71,745. கல்லூரிகளில் பட்டப்படிப்பு பயிலும் 6152 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவ, மாணவியருக்குக் கல்வி உதவித்தொகை வழங்க செலவிடப்பட்ட தொகை ரூ. 5,73,000 ஆகியவை அடங்கும்.

மதுரை மாவட்டத்தில் 20 ஆதி திராவிடர் பள்ளிகளும், 50 விடுதிகளும் உள்ளன. மொத்தம் 3634 மாணவ, மாணவிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 224.04 இலட்சம் செலவில் 14624 பேர் பயன்பெற இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டதில், 1988 பிப்ரவரி முடிய பல்வேறு வளர்ச்சிப் பணிகளில் ரூ. 204.80 இலட்சம் செலவிடப்பட்டு 13279 பேர் பயனடைந்துள்ளனர்.

ரூ. 358.70 இலட்சம் வங்கிக் கடன் பெற்றுத்தரப்பட்டுள்ளது இதில் ஆதிதிராவிடர்களுக்கு அளிக்கப்பட்ட ரூ. 175.93 இலட்சம், பெண்களுக்கு அளிக்கப்பட்ட ரூ. 118.35 இலட்சம் ஆகியவை அடங்கும்.

ஆதிதிராவிடர்களுக்கு ரூ.87.93 இலட்சம் மானியமும், பெண்களுக்கு ரூ. 58.72 லட்சம் மானியமும் வழங்கப்பட்டுள்ளன.

1987-88 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மொத்தம் 7,312 ஆதி திராவிடர்களும், 4,826 பெண்களும் பயனடைய குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டதில், 1988 பிப்ரவரி முடிய 6,644 ஆதிதிராவிடர்களும், 4,519 பெண்களும் பயன்பெறும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1987-88 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ், உணவுப்பொருட்கள் மதிப்பு உட்பட, ரூ. 314.24 இலட்சம் செலவில் 16.54 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 1988 பிப்ரவரி முடிய பல்வேறு வேலைகளில் ரூ. 290.63 இலட்சம் செலவில் 17.32 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுச் சாதனை புரியப்பட்டுள்ளது. செலவினத்தில் ரூ. 82.36 இலட்சம் மதிப்புள்ள உணவுப் பொருட்கள் அடங்கும்.

புதிதாக 2147 வேலைகள் எடுக்கப்பட்டு 1,759 வேலைகள் முடிக்கப்பட்டன. மேலும் கடந்த நிதியாண்டின் இறுதியில் நிலுவையிலிருந்த 150 வேலைகளும் முடிக்கப்பட்டன.

ஆதிதிராவிடர்களுக்கு 1389 வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதில் 1098 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.

**ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற பணிகள்**

இத்திட்டத்தின் கீழ் 1987-88-ஆம் ஆண்டில் உணவுப்பொருள் மதிப்பு உட்பட மொத்தம் ரூ. 213.91 இலட்சம் செலவில் 10.29 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கிட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டதில் 1988 பிப்ரவரி முடிய உணவுப்பொருள் மதிப்பு உட்பட ரூ. 193.77 இலட்சம் செலவில் 11.40 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுச் சாதனை புரியப்பட்டுள்ளது. செலவினத்தில் 1,467.844 மெ.டன் அரிசியும், 1595.802 மெ.டன் கோதுமையும் அடங்கும்.

இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கு 1,105 வீடுகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 907 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.

**வேளாண்மை உற்பத்திப் பெருக்கத் திட்டத்தின் கீழ் நடைபெற்ற பணிகள்**

இத்திட்டத்தின் கீழ் 1987-88-ஆம் ஆண்டிற்குச் சிறுபாசனத் திட்டத்திற்கு ரூ. 36.96 இலட்சம் மற்றும் நில அபிவிருத்தி மற்றும் பணியாளர் ஊதியத்திற்கு ரூ.10.56 இலட்சம் என நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் பிப்ரவரி 88 முடிய முறையே ரூ.16.10 இலட்சம் மற்றும் ரூ.4.57 இலட்சம் செலவாகியுள்ளது.

சிறுபாசனத்திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்43, இதரர்488பேர்களும், நில அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் 11, இதரர் 44 பேர்களும் பயனடைந்துள்ளனர்.

சிறுபாசனத் திட்டத்தில் மொத்தம் 451.87 எக்டேர் நிலமும், நில அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மொத்தம் 37.10 எக்டேர் நிலமும் பயனடைந்துள்ளன.

**—எஸ். கோவிந்தம்மாள்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை மாவட்டம்.**

# அண்ணா மாவட்டத்தில் திட்டச் சாதனைகள்

அண்ணா மாவட்டத்திற்குச் சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ் 1987-88ஆம் ஆண்டில், ரூ. 500 லட்சம் வசூல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 15.2.88 முடிய ரூ. 108.60 இலட்சம் சிறுசேமிப்புத் திட்டத்தின்கீழ் வசூல் செய்யப்பட்டுள்ளது. மீதித் தொகையினை 31.3.88க்குள் வசூலித்து இலக்கினை முழுமையாகப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நடப்பு ஆண்டில் (1987-88) அரசின் உத்தரவுப்படி முதல் சிறு சேமிப்புச் சிறப்பு முகாம் 12.10.87 முதல் 30.11.87 முடிய நடத்தப்பட்டது. இந்தச் சிறப்பு முகாமில் ரூ. 61.57 இலட்சம் சிறுசேமிப்புத் தொகையாக வசூல் செய்யப்பட்டது. இரண்டாவது சிறப்பு முகாம் 1.2.88 முதல் 15.2.88 வரை நடத்தப்பட்டு ரூ. 16.82 லட்சம் வசூல் செய்யப்பட்டது. மூன்றாவது முகாம் 1.3.88 முதல் 15.3.88 முடிய நடைபெற்றுள்ளது.

இந்தச் சிறப்பு முகாம்களைத் தவிர, தமிழ்நாட்டில், அண்ணா மாவட்டத்தில் முதன்முறையாக வீட்டுக்கு வீடு அஞ்சலகச் சேமிப்புத் திட்டத்தினை ஊக்குவிக்கும் முகத்தான் தீவிர சிறு சேமிப்பு முனைப்பு இயக்கம் 20.1.88 முதல் 25.1.88 முடிய நடத்தப்பட்டது. இந்தத் தீவிர இயக்கத்தில், அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் பல்வேறு தொண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டு சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ் புதிய கணக்குகள் துவங்கும் பணியில் ஈடுபட்டனர். இந்தத் தீவிர இயக்கத்தின்மூலம் 7130 புதிய சேமிப்புக் கணக்குகள் துவங்கப்பட்டுள்ளன.

மேலும், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த இரண்டு பெரிய கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களிடையே சிறுசேமிப்புக் கணக்குகள் துவக்கப்பட்டு வருகின்றன.

### குடும்பநலத் திட்டத்தின் சாதனை

அண்ணா மாவட்டத்தில் குடும்பநலத் திட்டத்தின் முதற்கட்டச் சாதனையாக நடப்பு ஆண்டில் 13 ஆயிரத்து 251 நபர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேலும் 9 ஆயிரத்து 798 பெண்களுக்குக் கருத்தடை வளையமும், 43 ஆயிரத்து 933 தாய்மார்களுக்குக் கருத்தடை மாத்திரைகளும், 19 ஆயிரத்து 17 நபர்களுக்கு நிரோத்தும் வழங்கப்பட்டுள்ளன.

குடும்பநலத் திட்ட முனைப்பு இயக்கத்தின்கீழ் அண்ணா மாவட்டம், பிப்ரவரி திங்கள் 15ஆம் நாள் வரை இச்சாதனையைச் செய்துள்ளது. மேலும் 15.2.88 முதல் 15.3.88 முடிய நடைபெற்ற குடும்பநலத் திட்ட முனைப்பு இயக்கத்தின்கீழ் அதிக அளவு குடும்பநல அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.

குடும்பநலத் திட்ட முனைப்பு இயக்கத்தின் பல்வேறு சேவை நிறுவனங்களும், காந்தி கிராமத்தில் உள்ள கஸ்தூரிபாய் மருத்துவமனை, ஒட்டன்சத்திரம் அம்பிளிகையில் உள்ள கிறித்துவ மருத்துவமனை, திண்டுக்கல் மற்றும் பழனியில் உள்ள இந்தியக் குடும்பநலச் சங்கங்கள் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்றுள்ள மருத்துவ அலுவலர்களின் கீழ் உள்ள மருத்துவமனைகள் குடும்பநலத் திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு நல்கிட முன் வந்துள்ளன.

தொழிற்சாலை உரிமையாளர்களும், மற்றும் ஏனைய தொழில் முனைவோர்களும் இத்திட்டத்தில் பங்கு கொள்வதோடு, திட்டத்தின் பயனைத் தொழிலாளர்களிடம் எடுத்துக்கூறி இத்திட்டம் நல்ல முறையில் செயல்படத் தங்களின் ஒத்துழைப்பினை நல்கி வருகின்றனர்.

**வி. ஜி. பிரசாத்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திண்டுக்கல்,**
**அண்ணா மாவட்டம்.**

## போக்குவரத்து ஊழியர்களின் விளையாட்டுப் போட்டிகள்




அகில இந்திய போக்குவரத்துக்கழக ஊழியர்களின் 9-வது விளையாட்டுப் போட்டிகள் சென்னை இராஜரத்தினம் விளையாட்டு அரங்கில் 1988 மார்ச் 24,25, 26 ஆகிய 3 நாட்கள் நடைபெற்றன. பல்வேறு மாநிலங்களிலிருந்து போக்குவரத்துக் கழகங்களின் ஊழியர்கள் சார்பாக 21 அணிகள் போட்டிகளில் கலந்து கொண்டன.

அனைத்துப் போட்டிகளிலும் சேர்த்து, பட்டுக்கோட்டை போக்குவரத்துக் கழக அணி மட்டும் 41 வெற்றிப் புள்ளிகளைக் குவித்து 'சாம்பியன்' பட்டத்தைப் பெற்றது.

விளையாட்டுப் போட்டிகளின் முடிவில், பரிசளிப்பு விழா 26-3-'88 அன்று நடந்தது. பல்லவன் போக்குவரத்துக் கழகத் தலைவர் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். பட்டுக்கோட்டை அழகிரி அணிக்கு வெள்ளிக் கோப்பை அளிக்கப்பட்டது. கோப்பையைப் பட்டுக்கோட்டை போக்குவரத்து கழக விளையாட்டு அலுவலர் திரு. கதிர்வேலு, விளையாட்டுச் செயலாளர் திரு குப்புசாமி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

# மேற்கு அண்ணா நகருக்குக் குடிநீர் வசதி



சென்னை மேற்கு அண்ணா நகர் வில்லிவாக்கம்-கொளத்தூர் பகுதிகளுக்குச் சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியத்தால், நான்கு கோடி ரூபாய் செலவில் நிறைவு செய்யப்பட்ட குடிநீர்த்திட்டத்தைத் தமிழ்ப் புத்தாண்டு நாளான 13.4.'88 அன்று, தமிழகஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி. இராமகிருஷ்ணா அவர்கள் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தின் மூலம் 1 லட்சத்து 70 ஆயிரம் மக்கள் பயன் பெறுவார்கள். ஆளுநரின் ஆலோசகர் குடிநீர்வாரியத்தின் பகுதி-5 அலுவலகப் புதிய கட்டடத்தையும் திறந்து வைத்தார்.

சென்னைக் குடிநீர் வாரிய நிர்வாக இயக்குநர் திரு இரா.வரதராஜுலு, இ.ஆ.ப., அனைவரையும் வரவேற்றுப் பேசினார். சென்னைக் குடிநீர் வாரியப் பொறியியல் இயக்குநர் திரு சிவ.தெய்வமணி அவர்கள் திட்ட அறிக்கை வாசித்தார்.

சென்னைக் குடிநீர் வாரியத் தலைவர், நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறைச் சிறப்பு ஆணையர் மற்றும் செயலர் திரு ஆர்.ஏ.சீத்தாராம்தாஸ், இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில்,

''தனி நபருக்கு 7 காலன் தண்ணீர் வழங்கப்படுகிறது. இதை 10 காலன் ஆக உயர்த்த வேண்டும் என்று மேதகு ஆளுநர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். சென்னைக்கு ஏழு கோடி காலன் தண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. இன்று முதல் 7 கோடியே 20 இலட்சம் காலன் தண்ணீர் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. அதனால் யாருக்கும் தண்ணீர் குறையாது'' என்றார்.

தமிழக ஆளுநரின் ஆலோசகர் திருஜி.வி.இராமகிருஷ்ணா அவர்கள் பேசுகையில்,

''சென்னை நகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நீண்ட காலத்திட்டமும், குறுகிய காலத் திட்டமும் தீட்டப்பட்டிருக்கிறது. நீண்ட காலத் திட்டம் காலக்கெடுவுடன் அறிவிக்கப்படும்.

''கழிவு நீரைச். சுத்திகரித்து, தொழிற்சாலைகளுக்கு மீண்டும் பயன்படுத்தலாம். அப்படிப் பயன்படுத்தினால், ஒரு கோடியே 70 இலட்சம் முதல் 2 கோடி காலன் தண்ணீர் வரை மிச்சமாகும்.

''உலகிலேயே, இந்தியாவில் மட்டுந்தான் தொழிற்சாலைகளின் உபயோகத்திற்காகக் குடிநீர் பயன்படுத்தப்படுகிறது. ஐரோப்பிய நாடுகளில், தொழிற்சாலைகள் கழிவு நீரைச் சுத்திகரித்துத்தான் பயன்படுத்துகின்றன. 3 கோடியே 50 லட்சம் காலன் தண்ணீரைச் சுத்திகரிக்கும் வசதி சென்னைப் பெருநகர்க் குடிநீர் வாரியத்திடம் இருக்கிறது. ஆனால், அதைப் பயன்படுத்திக் கொள்ள யாரும் முன் வரவில்லை. தொழிற்சாலைகள் அதைப் பயன்படுத்திக் கொள்ள முன் வரவேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

விழாவில், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஷமீர் வியாஸ், இ.ஆ.ப., நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் அ.கலாநிதி, திரு.என்.வி.என். சோமு ஆகியோர் பேசினர். சென்னைக் குடிநீர் வாரியத் தலைமைப் பொறியாளர் திரு ஏ.வேதகிரி நன்றி நவின்றார்.

# விடுதலையின் வித்து

**மூதறிஞர் இராஜாஜி**

**"இந்த உப்புச் சத்தியாக்கிரகம், உப்புச் சத்தியாக்கிரகம் என்று சொல்கிறார்களே - பெரிய புளிய மரத்துக்கு புளியங்கொட்டை மாதிரி வைத்துக்கொண்டு, இந்த தினத்தை நினைத்துக் கொண்டாட வேண்டும் என்பது தான் எனது ஆசை".**

**25** ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் ஒரு பெரிய யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் கத்தி யாவது, ரத்தமாவது கிடையாது. யுத்தம் இந்திய மக்களுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் நடந்தது. ஏப்ரல் மாதம் 6 ஆம் தேதி மகாத்மா காந்தி யடிகள் தண்டி என்கிற கரையோரக் கிராமத்தில் உப்பைச் சமுத்திரக் கரையிலிருந்து எடுத்தார். அது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சட்டங்களுக்கு விரோதம். அதற்குத்தான் 'உப்புச் சத்தியாக்கிரகம்' என்று பெயர்.

மகாத்மா காந்தியடிகள் ஏப்ரல் மாதம் 6 ஆம் தேதி தண்டியில் ஆரம்பித்ததுபோல் வேதாரணியத்தில்-தமிழ்நாட்டில் நானும் என்கூட நூறு தொண்டர்களும் சேர்ந்து உப்புச் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்தோம். மகாத்மா 6ஆம் தேதி தண்டி போய்ச் சேர்ந்ததும்—உப்பு எடுக்கிறார் என்கிற சங்கதி தெரிந்ததும் - அவர் எடுத்த பிறகு நான் புறப்பட வேண்டும் என்று திருச்சிராப்பள்ளியில் தொண்டர்கள் எல்லாம் கூடினர்.


டாக்டர் ராஜன் என்றொருவர் இருந்தார். நம்முடைய தலைவர்களுக்குள் மிகவும் பிரசித்தி பெற்றவர். அவர் இப்போது இறந்து போனார். அவருடைய வீட்டில் பெரிய பந்தல் போட்டு நாங்கள் எல்லோரும் தங்கியிருந்தோம்.

1930 ஆம் வருஷம் ஆரம்பத்தில், அதாவது 25 வருஷத்திற்கு முன்னால் - சித்திரை மாதம் முதல் தேதி - அதாவது ஏப்ரல் 13ந் தேதிக்கு ஆரம்பித்து நடக்க ஆரம்பித்தோம். 25 வருஷத்திற்கு முன் நான் கால் நடையாக 150 மைல் நடந்தேன் என்பது உங்களுக்கெல்லாம் ஆச்சரியமாக இருக்கலாம். எனக்கும்தான் இப்போது ஆச்சரியமாக இருக்கிறது. போதாததற்கு - காலில், கட்டை விரலில்- செருப்புக் கடித்துப் புண்ணாய் வீங்கிப்போயிருந்தது. அதனால்-செருப்பும் போட்டுக் கொள்ளாமல் - இந்த 150 மைலும் நடந்தேன். நம்பவேண்டிய விஷயம்!

நான் புறப்படும்பொழுது ஏப்ரல் மாதம் 13ந் தேதி சித்திரை மாதம் 1ந் தேதி புறப்பட வேண்டும் என்று சொன்னேன். அதற்கு 2 நாளைக்கு முன்னதாக டாக்டர் ராஜன் அவர்கள் நான் போக வேண்டிய மார்க்கத்தை நேரில் சென்று பார்த்து விட்டு வந்தார். எல்லா இடங்களிலும் சர்க்காருடைய பந்தோபஸ்து மிகக் கடினமாக ஏற்பட்டிருக்கிறது என்பது எங்களுக்குத் தெரிய வந்தது.

நம் யாருக்கும் சாப்பாடு கொடுக்காதபடியும், படுக்க இடம் கொடுக்காதபடியும் கலெக்டர் கடுமையான உத்தரவை எல்லோருக்கும் அனுப்பியிருந்தார். இதுதான் முதல்தடவை! இந்தியாவில் சர்க்காருக்கும் நமக்கும் நடந்த போரில் தர்மத்திற்கு விரோதமான நடவடிக்கை சர்க்கார் எடுத்தது. முதன் முதலாகத் தஞ்சாவூர் கலெக்டர் சாப்பாடு இல்லாமல் இவர்களை விரட்டி விடலாம் என்று யோசித்து ஜனங்கள் பயப்படும்படியான உத்தரவுகள் - தண்டோரா இந்த மாதிரியெல்லாம் ஏற்பாடு செய்து பயங்கரமான சூழ்நிலையை ஏற்படுத்தி இருந்தார். ஆனபோதிலும்கூட நாங்கள் புறப்பட்டு விட்டோம். எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும் அவ்வளவும் நமக்கு உற்சாகத்தைத்தான் தந்தது, அந்தக் காலத்திலே!

அந்தக் காலத்தில் தொண்டர்களுக்கோ, எனக்கோ எலெக்ஷன் தொந்தரவு அல்லது உத்தியோகத் தொந்தரவு ஒன்றும் கிடையாது. கஷ்டமே நமக்கு எலெக்ஷன். பட்டென்று போய்விட்டால் என்ன ஏற்பாடு என்பதற்காகக் கொஞ்சம் அவல், கடலைப் பொரிகளை ஒரு மூட்டையில் கட்டி மாட்டு வண்டியிலே போட்டு நமக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தது. சர்க்கார் தண்டோராவும், துண்டுப் பிரசுரங்களும் ரொம்பக் கடுமையாக இருந்தபோதிலும்கூட, ஜனங்களுடைய




உற்சாகத்தினால் நான் போகிற இடங்களில் எல்லாம் மறைமுகமாகவோ பகிரங்கமாகவோ சாப்பாடு எல்லாம் தயாராகவே இருந்தது. வர வர உற்சாகம் ரொம்ப அதிகமாகப் போய், பெரிய உற்சாகமாகவே நடந்து போயிற்று நம்முடைய குழாம்.

முதல் நாள் இருந்த பயங்கரம் பீதியெல்லாம் ஜனங்களுக்கு வர வரப் போய்க் கடைசியிலே பெரிய உற்சாகமாகவே நடத்திவிட்டார்கள், முடிவாகத் தஞ்சாவூர் நகரத்திற்குப் போனவுடன்! என்ன இருந்தாலும் 'ஜனங்கள் அந்தக் காலத்தில் வரம்பைத் தாண்டமாட்டார்கள். சர்க்கார் என்றால் ரொம்ப ஜாக்கிரதையாகவும் பவ்யமாகவும் நடந்து கொள்வார்கள். தற்போது நிலைமை கொஞ்சம் மாறியிருக்கிறது. அந்தக் காலத்திலே எல்லோருக்கும் ரொம்ப பயம்.

சாயந்திரம் போய்ச் சேர்ந்தோம். நமக்கு யாரும் இடம் கொடுக்க மாட்டார்கள் என்பதால் ஆற்றோரத்தில் - மணலில்தான் தங்கினோம். சித்திரை மாதமானதால் மணலில் உட்கார்ந்திருப்பதில் ரொம்பக் கஷ்டமாகத் தோன்றவில்லை. சாயந்திரம் நிலைமை எப்படி இருக்கிறது என்பதை அறிவதற்காக நான் மட்டும் தனியே போனேன். ஊரிலே ஒரு வித ஏற்பாடும் கிடையாது, நமக்காக! எந்த இடத்தில் கூட்டம் நடத்த வேண்டும் என்று நோட்டீஸ் அனுப்பியிருந்தேனோ அந்த இடத்தில் போய்ப் பார்த்தால் ஒரு மேஜை, நாற்காலிகூடக் கிடையாது.

கூட்டம் நடக்காது என்று தீர்மானித்துக் கொண்டு, ரொம்பக் கஷ்டப்பட்டு ஒரு நண்பரிடம் சென்று ஒரு உடைந்த மேஜையைச் சம்பாதித்தோம். சம்பாதித்தோம் என்றால் நானும் - கோகுல் என்பவர் - இப்போது டாக்டராக இருக்கிறார் - அப்போது வெறுந் தொண்டராகத்தான் இருந்தார். அவரும் நானும் சேர்ந்து அந்த மேஜையைக் கொண்டு வந்தோம் - ரொம்பவும் உடைந்து போயிருந்தது. அப்படித்தான் கொடுத்தார் அவர். ஏனென்றால் அடுத்தநாள் விசாரணை என்று வந்தால் இது என் மேஜை இல்லை என்று சொல்லிவிடலாம்.





கொண்டு வந்து வெட்டவெளி மைதானம் ஒன்றில் போட்டோம். அங்குதான் கூட்டம் நடத்துவது என்று ஏற்பாடு. ஆனால் அங்கு வெறும் நிசப்தம் - ஒரு ஆள் கூட அங்கு கிடையாது. அதனால் நாங்கள் முகாமுக்குத் திரும்பிப் போனோம். எங்கும் நான் போகும் இடங்களிலெல்லாம் - காலையில் நடக்க வேண்டியது. - சாயந்திரம் பிரார்த்தனைக் கூட்டம் இதுதான் நம்முடைய புரோகிராம்.

அன்றைய பிரார்த்தனைக் கூட்டம் தஞ்சாவூரில் - வெட்ட வெளியில்-மைதானம் பூராவும் 20 ஆயிரம் ஜனங்களுக்கு மேல் கூடியிருந்தார்கள். ஒரு வித ஏற்பாடும் இல்லாமல்! கடல் போல் அங்கு ஜனங்கள் கூடியிருந்ததைப் பார்த்துவிட்டு இது ஆண்டவனுடைய ஏற்பாடு என்று நிச்சயம் செய்து கொண்டோம். கூட்டத்தை ஆரம்பிச்சோம். என்னுடைய பக்தியானது மக்களை ரொம்பவும் பரவசமடையச் செய்தது.

இன்னொரு இடத்தில் நமக்குச் சாப்பாடு போட்டவரை - கூட்டத்தின் மத்தியிலேயே போலீசார் வந்து கைது செய்து கொண்டு போய்விட்டார்கள் - ஜி.ராமச்சந்திர நாயுடு என்பவரை. ஒருவர் சாதாரணமாக குழாமை நடத்திச் சென்று கொண்டிருக்கிறார் - அதில் கலவரம் ஏற்படுத்தி - பெரிய மிராசுதார் ஜி.ராமச்சந்திர நாயுடுவைக் கைது செய்து - கலவரம் ஏற்படுத்தினால் கூட்டம் மிரண்டு கலைந்துவிடும் என்பது போலீசாருடைய உத்தேசம். கூட்டத்தில் கலவரத்தை ஏற்படுத்துவது என்பது - தடியடி செய்து - கைது செய்தால் கூட்டம் கலைந்து போகும்—மேற்கொண்டு கூட்டத்தை நடக்கவிடாமல் செய்யலாம் என்பது—அவர்களுடைய திட்டம். ஆனால் எப்படியோ தெய்வாதீனமாக அவரைக் கைது செய்து கொண்டு போனபோது கலகம் ஆரம்பித்தது. இருந்தாலும் என் சமாதானப் பேச்சினால் கூட்டம் இனிதே முடிவுற்றது.

நம்மில் கலகம் உண்டாக்கவே கைது செய்து கொண்டு போயுள்ளனர். இது ஜாமீனில் விடுதலை செய்யவேண்டிய கேஸ். இதனால் யாரும் பீதிகொள்ள வேண்டாம் என்றும் - குழப்பமடைய

வேண்டாம் என்றும், இப்போதே அவரை ஜாமீனில் விடுதலை செய்துவிடுவார்கள் என்றும் கூட்டத்தின ரைப் பார்த்துக்கேட்டுக்கொண்டேன். அதன்படியே கலகம் நடக்காததால் அவரை ஜாமீனில் விடுதலை செய்துவிட்டனர்.

சரியாக ஏப்ரல் மாதம் 29ந் தேதி வேதாரணி யம் போய்ச் சேர்ந்தோம். காலையில் கடற்கரை யில் குளித்துவிட்டு, உபவாசம் பிரார்த்தனை செய்து மறுநாள் சத்தியாக்கிரகம் செய்வது என்று ஏற்பாடு. நம்முடைய கேம்பிலேயே வழக்கம்போல சர்க்காருடைய ஆட்கள் இருந்தனர். உப்பை எடுக்க விடாமல் இந்த விஷயத்தை முடித்துவிட வேண்டும், முன்னாலேயே கைது செய்துவிடலாமென்றும் இருந் தார்கள். ஒரு ஆள் மீது எனக்குச் சந்தேகமாக இருந் தது. இவர்தான் சர்க்காருடைய ஆள் என்று எப்ப டியோ தெரிந்தது. அவருக்கும் சமாசாரத்தைச் சொல்லாமல் ஏமாற்றி - விடியற்காலை 4 மணிக்கே வேதாரணியம் உப்பு எடுக்கப் போனோம், நானும் மற்றும் 10 பேர்களும்.

முதல் நாள் துப்பாக்கி பிரயோகத்துக்கும் தயாராயிருந்தோம். அதற்காக 10 பேரை ரொம்ப வும் ஜாக்கிரதையாகத் தேர்ந்தெடுத்துவிட்டோம். இன்னொரு விஷயம் உங்களுக்குச் சொல்ல வேண் டும்! இது ஒரு தற்செயலாக ஏற்பட்டது. கோவிந்த மேனன் என்பவர் (போலீஸ் சூப்பிரண்டெண்ட்), பொன்னுசாமிபிள்ளை என்பவர் மாஜிஸ்டிரேட். இவர் சேலம் கலெக்டர் ஆபிசிலே குமாஸ்தாவாக இருந்தபோது நான் சேலத்தில் வக்கீலாகஇருந்தேன். இந்த இருவரும் என்மீது ரொம்பவும் பிரியமாக இருப்பார்கள். அவர்களைப் பற்றி எனக்கும், என் னைப் பற்றி அவர்களுக்கும் நன்கு தெரியும்.



கோவிந்த மேனன் தலைமையில் வந்த போலீ சார் எங்களைக் கலைந்து போகுமாறும் - சட்ட விரோதமாகச் செயல்படக்கூடாது என்றும் ஒரு முறை, இருமுறையாகச் சொன்னார்கள். கூட்டம் கலையவில்லை. கைது செய்து கொண்டு போய் மாஜிஸ்டிரேட் முன் நிறுத்தினார்கள். பொன்னுசாமி பிள்ளை என்னைப் பார்த்தால் சரியாகப் பேச மாட்டார். அவ்வளவு மரியாதை. இவர்கள் எனக் குத் தெரிந்தவர்களாக இருப்பினும் என்னைக் கைது செய்து, தண்டனை அளித்தார்கள். வேதார ணியம் வேதரத்தினம் பிள்ளை அவர்களைக் கேட் டால் நன்றாக - விளக்கமாகச் சொல்வார்.

1757 ஜூன் மாதம் 23ந் தேதி - 200 வருஷத் துக்கு முன் கிளைவ் என்பவர் பிளாசி யுத்தத்தில் ஜெயித்தார். 1947ஆம் வருஷத்திலே அதே ஜூன் மாதம் 21ந் தேதி என்னை கவர்னர்-ஜெனரலாக நியமித்து பிரிட்டிஷ் மன்னர் அதிகாரப் பத்திரத்தை எனக்கு அனுப்பினார். பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு 1947 ஆம் வருஷம் அந்திம சமஸ்காரம் செய்து முடித்து வையுங்கள் என என் மூலமாகச் சொல்லப் பட்டது.

பிளாசி யுத்தம் என்பது ஒரு முக்கிய நிகழ்ச்சி யாக விளங்கியது. இதெல்லாம் உலகத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்தால் அதன்பின் என்ன நடக்க வேண் டும், அதற்குப் பின் நடப்பதெல்லாம் ஒரு நியதிப்படி நடக்க வேண்டும் என்பதைத்தான் காட்டுகிறது.

ஒரு புளியங்கொட்டையை நட்டால் எப்படி அது முளைத்து, வளர்ந்து செடியாகி, பெரிய மர மாகிறதோ அப்படி, பிளாசி-யுத்தம் ஒரு புளியங் கொட்டையாக நினைத்துக் கொள்ள வேண்டும். பின்னால் நடந்த அந்திம சமஸ்காரம் என்பது புளி யங்கொட்டையில் இருந்தது என்பதை உணர வேண் டும். இப்படி நடக்க வேண்டும் என்பது ஆண்டவனு டைய ஏற்பாடு! இயற்கை நியதி! அது முடிந்து போயிற்று!

இந்த உப்புச் சத்தியாக்கிரகம், உப்புச் சத்தி யாக்கிரகம் என்று சொல்கிறார்களே - 25 வருஷங் களாச்சு - அதுதான் இன்றைய சுதந்திரத்திற்கு - பெரிய புளிய மரத்துக்கு புளியங்கொட்டை மாதிரி வைத்துக் கொண்டு இந்த தினத்தை நினைத்துக் கொண்டாட வேண்டும் என்பதுதான் எனது ஆசை. உப்பு எப்படி நம்முடைய சமையலுக்கு முக்கியமோ- அப்படி உப்புச் சத்தியாக்கிரகம் நம்முடைய விடு தலைப் போருக்கு மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சி யாக ஆரம்பித்தது. மகாத்மா காந்தி அவர்கள் உப் பைக் கண்டால் தெய்வமாகக் கொண்டாடுவார். இந்த உப்பை வைத்தே பிரிட்டிஷ் அரசை எப்படி யும் ஜெயித்து விடலாம் என்று ரொம்ப யோசனை செய்து அதனை யாத்திரையில் கைக்கொண்டார் - வடுதலையும் கண்டார்.


[வேதாரணிய யாத்திரையின் வெள்ளி விழாவையொட்டி, மூதறிஞர் ராஜாஜி அவர்கள் வானொலிக்கு 1955இல் அளித்த பேட்டியிலிருந்து..]

வேதாரணியம்
உப்புச் சத்தியாக்கிரக
நினைவு போற்றும்
புனிதப் பயணம்






படத்தொகுப்பு




28-4-1988






















# அந்த வீரவரலாற்றை நினைவுபடுத்த....

**உப்புச் சத்தியாக்கிரக நினைவைப் போற்றிப் புனிதப் பயணம் மேற்கொண்ட தொண்டர்களில் மூவரைச் சந்தித்தோம். அவர்களில் ஒருவர் 1930-இல் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தலைமையில் நடந்த உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கு கொண்டவர். அவர்களின் பேட்டி இங்கே தரப்படுகிறது.**

## ''இளைஞர்களுக்குத் தேசிய உணர்வு ஊட்ட வேண்டும்''.

**—சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களின் பேரர் திரு அ. கேடிலியப்பன்**



தஞ்சை மாவட்டம், வேதாரணியத்தைச் சேர்ந்த திரு.அ.கேடிலியப்பன் அவர்கள், சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களின் பேரனாவார். இவருக்கு வயது 33. இன்றைய உப்புச் சத்தியாக்கிரகப் பாதை யாத்திரையில் பங்கு கொண்ட இவர் செய்யும் தொழிலும் உப்பு வியாபாரமே! அதுமட்டுமல்ல, இவர் கலந்து கொண்ட முதல் பொது நிகழ்ச்சியும் இதுவே. அவர் கூறுகிறார்:

''அண்ணல் காந்தியடிகளும், மூதறிஞர் இராஜாஜியும் தொடங்கி வைத்த உப்புச் சத்தியாக்கிரகப் புனிதப் பயணத்தை நினைவுகூர்கிற இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டது எனக்குக் கிடைத்த அரிய வாய்ப்பாகும்

''நாங்கள் சென்ற கிராமங்களிலெல்லாம், பாதைகளிலெல்லாம், 90 வயது கிழவர் முதல் பள்ளிக் குழந்தைகள் வரை ஆர்வத்தோடு வரவேற்றார்கள்; உற்சாகத்தோடு உபசரித்தார்கள்.

''வழுத்தூர் என்னும் கிராமத்தில் முஸ்லீம் பெருமக்கள் மிகுந்த ஆர்வத்துடன் எங்களை வரவேற்றார்கள். தேசியப்பாடலை எங்களுடன் சேர்ந்து பாடினார்கள். ரமலான் மாதத் தொடக்கத்திலும் அவர்கள் திரளாக வந்து உற்சாகமாக எங்களுடன் கூடவே சற்று தூரம் நடந்து வந்தார்கள். வலங்கைமானில், ஒரு முஸ்லீம் தாய்,- அன்று இராஜாஜி நடை பயணம் வந்தபோது அவருக்குக் கஞ்சி கொடுத்தவர்-அந்தத்தாய் எங்களை வரவேற்றது என்றும் மறக்கமுடியாத காட்சியாகும்.

''இன்றைய இளைஞர்கள் மத்தியிலே தேசிய உணர்வும், தெய்வீக உணர்வும் ஊட்டப்பட வேண்டும். பாடநூல்களில், வரலாறுகளில், சுதந்திரப் போராட்ட நிகழ்ச்சிகள் முக்கியமாக இடம் பெறவேண்டும். வீரம் மிக்க அந்தச் சுதந்திரப் போராட்ட வரலாறுகளை இளைஞர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

## ''வீரவரலாற்றைத் தெரிய வைக்க உதவும்''.

**—திரு கே.டி. ரங்கநாதன்**

''கடந்த 45 ஆண்டுகளாக, காந்தியத் தொண்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வரும் இவருக்கு வயது 75. திருத்துறைப்பூண்டி, ஆலத்தம்பாடி இவரது சொந்த ஊர். விவசாயத்தொழில் செய்து வருகிறார். அவர் கூறுகிறார்:

''மறந்தவர்களுக்குப் பழைய வரலாற்றை ஞாபகமூட்டுவதற்கும், புதியவர்களுக்கு அந்த வீரவரலாற்றைத் தெரியவைப்பதற்கும் இந்தப் புனிதப் பாதை யாத்திரை பயன்படும்.

''இவ்வளவு தூரம் நடந்து வந்திருக்கிறோம். களைப்போ, கஷ்டமோ தெரியவில்லை; உற்சாகத்



துடன்தான் இருக்கிறேன். உள்ளுணர்வு ஒரு லட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் போது, எதுவும் உடலைப் பாதிக்காது.

''செம்மங்குடியில் சாமியப்பா கூராயர் என்று தியாகி இருந்தார். அவர் பல தியாகிகளை உருவாக்கியவர். சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களுடன் இருந்தவர். சிறை சென்றவர். காந்தியடிகளைப் போல எளிமையானவர். அவருடைய மகன் திரு.வேதாரணியம் இதே ஊரில் எங்களை வரவேற்றது எங்களுக்கெல்லாம் பெருமையாக இருந்தது. வேதாரணியம் உப்புப் போராட்டத்தின்போது இவர் பிறந்ததால், இவருக்கு இவர் தந்தை இந்தப் பெயரை வைத்தாராம்.

## "மூதறிஞர் இராஜாஜி தலைமையிலே சென்றேன்!"

**திரு எஸ். ஜே. ஜேம்ஸ்**

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திரு எஸ்.ஜே.ஜேம்ஸ் அவர்கள், 1930இல் மூதறிஞர் இராஜாஜி அவர்களுடன் உப்பு யாத்திரையில் சென்றவர். இவருக்கு வயது 80. இவர் அந்தக் காலத்தில், அந்நிய ராட்சியில் அடைந்த துன்பங்களை விவரிக்கிறார்:

''நான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோதே நாட்டு விடுதலையில் ஆர்வம் ஏற்பட்டது. மதுரையில், ஜான்ஜோசப் என்னும் வழக்கறிஞர் இருந்தார். அவர் 'நாடு விடுதலை பெறவேண்டும்; என்ற ஆர்வம் உடையவர். இளைஞர்களிடம் அவர் இதுபற்றியெல்லாம் பேசுவார். சுதந்திர ஆர்வம் எனக்கு ஏற்பட்டது இப்படித்தான்.

''நான் இளைஞனாயிருந்தபோது ஈரோடு கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டேன். அந்நியத் துணி பகிஷ்கரிப்புப் போராட்டத்திலும், ரயில் மறியல் போராட்டத்திலும் கலந்து கொண்டேன். அப்போது எனக்கு வயது 22 இருக்கும்.

''அதுமட்டுமல்ல, ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் செய்தேன். மதுரை, இராமநாதபுரம், திருச்சி, தஞ்சை ஆகிய ஊர்களில் பலமுறை பிரச்சாரம் செய்திருக்கிறேன். அப்போது என்னைப் போலீசார் பல முறை கைது செய்திருக்கிறார்கள்.

''அப்போது 1930க்கு முன்பு, தண்டனை, அபராதம் எதுவும் விதிக்கப்படுவதில்லை என்பது என் ஞாபகம். போலீசார் கைது செய்து 'லாக்கப்'பில் அடைப்பார்கள். கடுமையாக அடிப்பார்கள்; சித்ரவதை செய்வார்கள்.

''ஒரு சமயம் என்னை, ஒரு திருட்டுக் குற்றவாளியுடன் லாக்கப்பில் அடைத்தார்கள். ஒருநாள் இரவு, அந்தக் கைதியை அடித்துத் துன்புறுத்தினார்கள். எனக்குப் பரிதாபமாக இருந்தது. ''ஐயா, அவனை ஏன் இப்படி அடிக்கிறீர்கள்? என்று கேட்டேன். உடனே அவர்கள் கோபம் என்பக்கம் திரும்பியது. அவ்வளவுதான். சரமாரியான அடி உதை; மூர்ச்சையாகும் வரை....

''ஒரு சமயம் ஒரு லாக்கப்பில், ''நீ யாரடா அரசாங்கத்தை எதிர்க்கிறதுக்கு....'' என்று கேட்டுப் பிரம்பால் அடித்தார்கள். பிரம்பைத் தண்ணீரில் ஊற வைத்து அடிப்பார்கள். பூட்ஸ் காலால் மிதிப்பார்கள். மூர்ச்சையாகும் வரை




அடித்துப் போட்டுவிட்டு போய் விடுவார்கள், தண்ணீர் கூடத் தர மாட்டார்கள், கேட்டால், 'மூத்திரம் குடி' என்பார்கள்.

—என்று சொல்லிவிட்டு திரு ஜேம்ஸ் அவர்கள் —ஒரு நிமிடம் மௌனமாகிறார். அவர் கண்கள் கலங்குகின்றன. அந்தக் காலத்தில் அந்நியராட்சியில் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு ஏற்பட்ட சோதனைகள், துயரங்கள் எல்லாம் அவர் கண் முன் தோன்றியிருக்க வேண்டும்....

திரு ஜேம்ஸ் அவர்கள் மேலும் தொடர்கிறார்....

''1930-இல் மதுரையில் இருந்தேன்.

''அந்தக் காலத்தில் திரு சின்னசாமிபிள்ளை, சுப்பிரமணிய முதலியார் என்னும் இருவர் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக இருந்தவர்கள். அப்போது, மூதறிஞர்



இராஜாஜி அவர்கள் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை அறிவித்த சமயம். நான் அந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று கூறினேன். உடனே அவர்கள் எனக்கொரு கடிதம் தந்தார்கள். இதைத் திருச்சியில் டாக்டர் ராஜன் அவர்களிடம் கொடுக்கும்படி கூறினார்கள். நான் டாக்டர் ராஜன் அவர்களை அவரது வீட்டில் சந்தித்துக் கடிதம் கொடுத்தேன்.

''உன்னால் கடைசிவரை வர முடியுமா?'' என்று கேட்டார்கள்.

''நான் நிறைய தொல்லைகளை அனுபவித்தவன்.. ஆகவே என்னால் இதுமுடியும் என்று நினைக்கிறேன்'' என்றேன்.

'சரி' என்ற டாக்டர் ராஜன் ''முடிந்தால் நீ பிரச்சாரமும் செய்ய வேண்டும்'' என்றார். 'சரி' என்றேன்.

13.4.1930 அன்று மூதறிஞர் இராஜாஜி அவர்களைச் சந்தித்தேன்.

''அவர் (டாக்டர் ராஜன்) எல்லாம் சொல்லியிருப்பாரே!'' என்றார் இராஜாஜி. 'ஆமாம்' என்றேன்.

உப்புச் சத்தியாக்கிரகப்போராட்டபடை புறப்பட்டது,வேதாரணியம் நோக்கி, நூற்றுக் கணக்கான தொண்டர்கள் மூதறிஞர் இராஜாஜி அவர்களின் தலைமையில் அணிவகுத்தார்கள். வேதாரணியத்தில் உப்பு எடுத்தோம்.

அன்றும் கலந்து கொண்டேன், இன்றும் கலந்துகொள்கிறேன். இது என் வாழ்க்கையில் கிடைத்த அரிய வாய்ப்பு; பெரும்பேறு. அந்தப் புனிதப்போரை, இன்று மீண்டும் நடத்திக் காட்டியதற்குத் தமிழக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கால இளைஞர்களுக்கு இவர் கூறும் அறிவுரை;

சுதந்திரப் போராட்ட வரலாற்றை அரும்பாடுபட்டுப் பெற்றுத் தந்த சுதந்திரத்தைப் பேணிக் காத்திட ஒவ்வொரு வட்டார இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும். மக்கள் உணர்ந்து கொள்ளும் வகையில் பிரச்சாரமும் செய்யவேண்டும். நான் என் வாழ்நாள் முழுக்க இந்தப்பணியில் என்னை ஈடுபடுத்திக் கொள்ளப் போகிறேன்.

**பேட்டி: பி.வி.கிரி**

மாணவர் பக்கம்

# அறிவுச் சுடர்

* அமெரிக்கத் தலைவரின் அரசாங்க இல்லத்தின் பெயரென்ன?

—ஒயிட்ஹவுஸ்.

* 'மேகதூதம்' நூலின் ஆசிரியர் யார்?

—காளிதாசர்.

* 'மனோன்மணீயம்' நூலின் ஆசிரியர் யார்?

—பேராசிரியர் சுந்தரம் பிள்ளை.

* ஹீராகுட் அணை உள்ள மாநிலம் எது?

—ஒரிஸ்ஸா.

* குஜராத் மாநிலத்தின் தலைநகர் எது?

—காந்திநகர்.

* பெய்ரூட் எந்த நாட்டின் தலைநகரம்?

—லெபனான்.

* பணவீக்கத்தின் முக்கிய அம்சம் எது?

விலைவாசி ஏற்றம்

* குளிர்பதனியில் தேவையான வெப்பத்தை வாயுக்கள் எவ்விதம் பெறுகின்றன?

—பம்பின் அழுத்தத்திலிருந்து.

மேற்குப் பாரதத்தின் இரண்டாவது மிகப்பெரிய நகரம் எது?

—அகமதாபாத்.

* பறவைகளில் மிக வேகமாகப் பறக்கக்கூடியது எது?

—கழுகு.

* குருநானக்கின் உபதேசங்களைக் கொண்ட நூலுக்கு என்ன பெயர்?

—கிரந்த்ஸாஹேப்

* உலகின் மிகப் பெரிய கடல் எது?

—பசிபிக் பெருங்கடல்.

## நூலைப்படி



பொழுது புலரும் வேளை இது—தம்பி
பொறுப்பாய்ப் படிக்க நூலை எடு
விழுது விட்டிடும் பேரறிவு—அந்த
விதைதான் நல்ல நூலறிவு!

அமைதி தவழும் விடியலிலே—தம்பி
ஆழ்ந்து நூலைப் படிக்கையிலே
மனதில் தானாய் பதிந்துவிடும்—உனது
மனதின் மயக்கம் தெளிந்துவிடும்!

நல்ல நூல்களைப் படித்துவிடு—அவையே
நவிலும் கருத்தைப் பதித்துவிடு
பொல்லா எண்ணம் களைந்துவிடு—உலகம்
புகழும் வழியை நாடிவிடு

அறிஞர் வாழ்வை நீஅறிந்தால்—உனது
அறிவின் வளர்ச்சி மேலோங்கும்
சிறந்த மனிதன் எனச்சொல்லி—இந்தச்
செகமே உந்தன் புகழ்பாடும்!

—கே.எஸ். நாகராஜன்

## விளையும் பயிர்!

தஞ்சை மாவட்டம், திருவாரூர் அரசு கலைக் கல்லூரியில் இரண்டாமாண்டு விலங்கியல் படிக்கும் மாணவர் எஸ். சேகர்.

இலக்கியத் துறையில் ஆர்வமுள்ள இவர், மாநில அளவில் நடந்த கட்டுரைப் போட்டியில் சிறப்புப் பரிசும், மாவட்ட அளவில் நடந்த கட்டுரைப் போட்டியில் இருமுறை முதல் பரிசுகளும் பெற்றுள்ளார்.



* இயக்க விசைக் கொள்கையை உருவாக்கிய அறிவியல்மேதைகள் யாவர்?

—ரம்ஃபோர்டு, டேவி, ஜூல்.

* எலக்ட்ரான் பாதைகளைப்பற்றி ஆராய்ந்த அறிவியலார் யார்?

பரி, லூயிஸ், லாங்மூர்.

* அல்லி வட்டம் எத்தனை வகைப்படும்?

—4 வகைப்படும்.

* மஞ்சள் காமாலைக்குச் சிறந்த மருந்து எது?

—ஆரியோமைசின்.

* சர்க்கரைப் பயிர்கள் மூன்று கூறுக?

—கரும்பு, பீட்ரூட், மரவள்ளி.

* தமிழகத்தில் விடுதலை இயக்கத்திற்காகச் சிறை சென்ற முதல் பெண்மணி யார்?

—டாக்டர் ருக்மணி லட்சுமிபதி.

# இராமநாதபுரம் மாவட்டத்தில் உவர்நீர் இறால் வளர்ப்பு

அஜய்பட்டாச்சார்யா, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர், இராமநாதபுரம் மாவட்டம்.

●●●

**அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் இறாலை உவர் நீரில் வளர்க்கும் முறையும் - வளர்ப்பதற்காக மீனவர்களுக்கு வழங்கப்படும் அரசு உதவிகளும் விவரிக்கப்பட்டுள்ளன.**

●●●

இயற்கை அன்னை தமிழகத்திற்குச் சுமார் 1,000 கிலோ மீட்டர் நீளம்கொண்ட வளமான கடற்கரையைத் தந்துள்ளாள். இந்தக் கடலோரப் பகுதியில் சுமார் 56,000 எக்டேர் தாழ்ந்த நிலப் பரப்பு, இறால் வளர்ப்பிற்கு உகநததாக உள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது: இவற்றுள் இராமநாதபுரம் மாவட்டம மட்டும் 265 கிலோமீட்டர் தூரமுள்ள கடற கரையைப் பெற்றுச் சுமார் 1,000 எக்டேர் நிலப்பரப்பு இறால் வளர்ப்பிற்குச் சாதகமாக உள்ளது. பயனற்றுக்கிடக்கும் இந்தத் தரிசுநிலங்களைப் பயன்படுத்தி, இறால் வளர்த்து உற்பத்தியைப் பெருக்கி, இந்தியாவிற்கு அந்நியச் செலாவணியைக் கணிசமான அளவு ஈட்டலாம். கடலோரப் பகுதிகளில் பண்ணைகள் அமைத்து இறால் வளர்த்து நல்ல பலனை அடையலாம் எனத் தமிழக அரசு ஆராய்ச்சிகள் பிரிவும் மற்றும் மத்திய அரசு மீன்துறை ஆராய்ச்சிப் பிரிவுகளும் பல பரிசோதனைகள் செய்து வெற்றியைக் கண்டுள்ளார்கள். உவர்நீர் இறால் வளர்ப்பை மேற்கொண்டால் விவசாயத்தில் கிடைக்கும் பலனை விட இருமடங்கு பலன் கிடைக்கும் வாய்ப்புள்ளது. பின்தங்கிய மீனவ சமுதாய மக்களுக்கும், படித்த வேலையற்ற இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்புப் பெருமளவில் கிடைக்கும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் காரங்காடு, கண்ணாமுனை (தேவி பட்டினம்) என்ற இடங்களில் தமிழ்நாடு அரசு மீன்துறை நிறுவனத்தினால் செயல் விளக்க இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. மீன்துறை ஆய்வாளரின் நேரடிக் கண்காணிப்பில் மீன்துறை உதவி இயக்குநரின் (இறால் வளர்ப்பு) தொழில் நுட்ப ஆலோசனையின் படி இப்பண்ணைகளில் தற்பொழுது இறால் வளர்க்கப்பட்டு வருகிறது. மேற்படி பண்ணைகளில் இயற்கைச் சூழ்நிலையில் உப்பங்கழி ஆறுகளில் கிடைக்கும் தரமான இறால் குஞ்சுகளைச் சேகரித்து இருப்பு செய்து, தக்க தீவனம் கொடுத்து, மூன்று மாத காலம் வளர்த்து வந்ததில் ஒரு எக்டேர் குளத்தில் 200 முதல் 300 கிலோ வரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதுபோன்று ஆண்டுக்கு இருமுறை அல்லது மூன்று முறை வரை இறால் வளர்த்துப் பயன்பெறலாம்.

தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் மட்டும் இதுபோன்று பத்து செயல்விளக்க இறால் பண்ணைகளில் இரால் வளர்க்கப்பட்டு, பொதுமக்களுக்கு இறால் வளர்ப்பினைப் பற்றியும் அதனால் கிடைக்கக்கூடிய பலனைப்பற்றியும் எடுத்துக்கூறி இறால் வளர்ப்பினை மேற்கொள்ள ஊக்கம் அளிக்கப் பட்டு வருகிறது.

இறால் வளர்ப்பில் மீனவ சமுதாயத்தை ஈடுபடுததும் பொருட்டு, காரஙகாடு கிராமததிலும், அரியங்குணடு (இராமேசுவரம) கிராமத்திலும் கூட்டுறவு முறையில் இறால் வளர்க்க தலா ரூ. 12.5 லட்சம் தமிழக அரசால் நிதி ஒதுக்கீடு செய்து, பண்ணைகள் அமைக்கப் பட்டு வருகின்றன;

இயற்கைச் சூழ்நிலையில் இறால் குஞ்சுகள் தேவைப்படும்போது தேவையான அளவு கிடைப்பதில்லை. எனவே, வாலிநோக்கம் என்ற கிராமத்தில் பல லட்சக் கணக்கில் நிதி ஒதுக்கீடு செய்து இறால் குஞ்சு பொரிப்பகம் தொழில் நுட்ப உதவியுடன் அமைக்கப்பட இருக்கிறது. எனவே, இந்த இறால் குஞ்சு பொரிப்பகத்தின் மூலம் தரமான-நன்கு வளர்ச்சி அடையக்கூடிய இறால் குஞ்சுகளை, தேவைப்படும் போது தேவையான அளவு பெறும் காலம் மிக விரைவில் வரவிருக்கிறது. எனவே, இப்பகுதியில் இறால குஞ்சு பொரிப்பகம் வரும் வரை இயற்கைச் சூழ்நிலையில் அல்லது வேறு இடங்களில் உள்ள இறால் குஞ்சு பொரிப்பகத்திலிருந்து இரால் குஞ்சுகள் சேகரித்து வளர்ப்புச் செய்து பயன் பெறலாம்.

இராமநாதபுரம் மீன்துறை உதவி இயக்குநரால் (உவர்நீர் விரிவாக்கம் மற்றும் அளவை) உவர்நீர் இறால் வளர்ப்போர்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனைகளும், இறால் வளர்ப்பினைத் தனியார் மேற்கொள்ளத் தகுதிவாய்ந்த இடத்தினைத் தேர்வு செய்தலும், இறால் வளர்ப்புக்குரிய விரிவாக்கப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெரும் அளவில் அரசு அல்லது தனியார் நிறுவனத்தால் இறால் வளர்ப்பதற்கு காரங்காட்டில் உள்ள கோட்டக்கரை ஆற்றில் சுமார் 200 எக்டேர் நிலப்பரப்பில் தற்பொழுது ''மைக்ரோ லெவல்'' சர்வே நடைபெற்று வருகிறது. இந்த சர்வே முடிவுற்றவுடன் மேற்படி இடத்தில் இறால் வளர்ப்பதற்குத் தக்க திட்டங்கள் தயாரிக்கப் பெற்று அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும்.

இராமநாதபுர மாவட்டத்தில் உள்ள மாரியூர் (வாலிநோக்கம்) என்ற கிராமத்தில் தமிழக உப்பு நிறுவனத்திற்குச் சொந்தமான சுமார் 110 ஏக்கர் பரப்பளவுள்ள உவர்நீர் ஏரி ஒன்று உள்ளது. இந்த ஏரியில் திருத்திய முறையில் இறால் மீன் மற்றும் நன்கு வளரக்கூடிய மீன்களைக் கூட்டுறவு மீனவச் சங்கத்தின் மூலம் வளர்த்து, உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடலோரப் பகுதிகளில் உவர்நீர் இறால் பண்ணை அமைத்து, இறால் வளர்க்க விரும்பும் விவசாயிகள், பண்ணைகள் அமைக்க வங்கிக் கடனுதவியும் மானியமும் பெறத் தமிழக அரசின் மீன்துறையால் திட்டம் ஒன்று தயாரிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் கடலோரத்தில் சொந்த நிலம் வைத்திருப்பவர்களும் நீண்டகாலக் குத்தகை எடுத்திருப்பவர்களும் மீன்துறையை அணுகிப் பயன் பெறலாம்.

எனவே உவர்நீர் இறால் வளர்க்க விரும்புவோர்களுக்கு எளிதில் நிதி உதவி கிடைக்கவும், தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கவும் மீன்துறை ஆயத்தமாக உள்ளது. கடலோரப்பகுதிகளில் இறால் பண்ணைகள் அமைத்து எல்லா வசதிகளையும் பொருத்தி, திறமையான நிர்வாகம் செய்தால் குறைந்தது ஆண்டுக்கு இரு முறை இறால் வளர்ப்பினை மேற்கொண்டு ஒரு எக்டேருக்கு 1,000 முதல் 2000 கிலோ வரை இறால் உற்பத்தி செய்து கணிசமான அளவு பலனடையச் சிறந்த வாய்ப்பு உள்ளது.

# சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம்

**சமுதாய வளர்ச்சிக்கு, சமூகக் காடுகள் கை கொடுக்கின்றன. கோவை மாவட்டம் பல்லடத்தில் இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்படுவதை இக்கட்டுரை விளக்குகிறது.**

ஒரு செடியை நாம் நடும்போது நமக்கு அளவிலா மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதை நாம் வளர்க்கும்போது, நம் எதிர்கால நம்பிக்கையும் சேர்ந்தே வளர்கிறது என்றால் அதில் கிஞ்சிற்றும் ஐயப்பாடே இல்லை.

உலக நிலப்பரப்பிலே மூன்றில் ஒரு பங்கு வனவளம் பெற்றதாகும். ஆனால் ஒவ்வொரு நாளும் 165 சதுர கிலோ மீட்டர் வனங்களை நாம் தொடர்ந்து அழித்துக் கொண்டே வருகிறோம். அதன் விளைவாக 165 இலட்சம் சதுர கி.மீ. மண் வளத்தையும் நாம் ஆண்டுதோறும் இழந்து வருகிறோம்.

இந்நிலை தொடருமேயாயின், மழையளவு பெரிதும் குறைந்து, பாசன வசதிக்குறைவு, குடிநீர்ப் பஞ்சம், உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டுப் பற்றாக்குறை பெருகும். நோய்களால் மக்கள் பாதிக்கப்படுவர்; கால்நடைகள் மற்றும் உயிரினங்கள் பெரிதும் பாதிக்கப்படும்.

இத்தகைய பல்வேறு பாதிப்புகளை நன்குணர்ந்து அரசு ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. இச்சீரிய திட்டத்தை ஊரக வளர்ச்சித் துறை செயல்படுத்துகிறது.

ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் தேசிய ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய இரு திட்டங்களின் கீழ் சமூகக்காடு வளர்ப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது.

**பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தில்**

கோவை மாவட்டத்திலுள்ள பல்லடம் ஊராட்சி ஒன்றியத்தில் வனத் துறையிலிருந்து கருவேல விதைகளை ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் கொணர்ந்து சேகாம்பாளையம் என்ற ஊரில் அவற்றை மிகக் கவனமுடன் வளர்த்தார்கள்.

பின்னர் இவ்வூராட்சி ஒன்றியத்திலுள்ள ஆறுமுத்தாம்பாளையம் ஊராட்சியில் 4000 கருவேலச் செடிகள் நடப்பட்டன. காய்ந்து போன 200 செடிகள் தவிர்த்து, ஏனைய செடிகள் அனைத்தும் சுமார் 1 அடி உயரத்திற்குத் தற்போது செழிப்பாக வளர்ந்துள்ளன. மொத்தம் 6 ஏக்கர் நிலத்தில் செடிக்குச் செடி 5½ முதல் 6 அடி இடைவெளியில் இவற்றை நட்டார்கள். இடையில் பெய்த மழையின் விளைவாக இச்செடிகள் நன்கு வளரத் தொடங்கின.


பல்லடம் ஊராட்சி ஒன்றியம்வசமுள்ள இச்செடிகளை 3 ஆண்டுகள் வரை ஊராட்சி ஒன்றியமே வளர்த்து வரும். ஏழை எளியவர்களுக்கு 2-சி மரப்பட்டா கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு பட்டாக்கள் கொடுக்கப்பட்டதும், அதைப் பெற்றவர்கள் மரங்களை மேலும் வளர்த்துப் பயனடைவர்.

ஒருவருக்கு ஓர் ஏக்கர் வீதம் 6 பேர்களுக்குக்கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஓர் ஏக்கரில் சுமார் 640 செடிகள் இருக்கும்.

கணவன் மனைவியைப்பல்லடம், ஊராட்சி ஒன்றியம் பணியிலமர்த்தி செடிகள் அனைத்திற்கும் தண்ணீர் ஊற்றிப் பாதுகாக்க ஏற்பாடு செய்துள்ளது. ஒவ்வொருவரும் செடிகளைப் பிள்ளைகள போல் கண்ணும் கருத்துமாகக்காத்துவருகின்றனர்.

இவர்களில் ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு ரூ.10 வீதம் ஊதியம் அளிக்கப்படுகிறது. ரொக்கமாக ரூ. 5.05-ம், எஞ்சிய தொகைக்குக் கோதுமையும் அரிசியும் தரப்படுகின்றன.

1985-86ஆம் ஆண்டு முதல் இவ்வாண்டு பிப்ரவரி முடிய சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டத்திற்கு ரூ. 5016 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 4204 இலட்சம் செலவிடப்பட்டு, 1,23,293 எக்டேர் பரப்பளவில் மரங்கள் நடப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன.






# உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் பாதுகாப்பான திட்டங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை வளம்பெற செய்திடுவீர்.

உங்கள் சேமிப்பிற்கு $\frac{1}{4}$% கூடுதல் வட்டி உண்டு.

- சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்.
- தொடர் வைப்புத் திட்டம்.
- ரொக்க சான்றிதழ்.
- சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.

TNSC BANK

தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.

*TNSC வங்கி—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*

# நூல் நயம்

## விஞ்ஞான நோக்கில் நோய் நீக்கும் மூலிகைகள்

ஆசிரியர்; அறந்தாங்கி டாக்டர் சுப.சதாசிவம்.
வெளியீடு: நியூ செஞ்சுரிபுக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் 41, பி. சிட்கோ இண்டஸ் டிரியல் எஸ்டேட், சென்னை-600098.

விலை: ரூ.13.00 பக்கங்கள்: 131

துளசி, வெள்ளைப்பூண்டு,வேம்பு கண்டங்கத்திரி,எருக்கு. ஊமத்தை, மிளகாய், சோம்பு, கசகசா, கரிசலாங்கண்ணி போன்ற எளிதில் கிடைக்கும் - விலைகுறைந்த, சில இலவசமாகவே கிடைக்கும் பொருட்களைக் கொண்டு நாம் அற்புதமான பலன்களை அடையலாம், நோய்களையும், உபாதைகளையும் எளிதில் போக்கலாம் என அறியும்போது வியப்பாக இருக்கிறது.

பன்னாட்டு வைத்திய முறைகளுக்கும் அடிப்படை நமது சித்த மருத்துவம்தான் என்ற கருத்து இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, பன்னாட்டவரின் புதிய பல ஆராய்ச்சிக்கும் வழி வகுத்திருக்கிறது. கையாள்வதற்கு எளிமையானவைத்தியமுறைகளை விவரிக்கும் இந்நூல் கிராமமக்களுக்குத்தன் அருகிலேயே எப்போதும் ஒரு வைத்தியரை வைத்திருப்பதைப் போல் உதவக் கூடியது

## ஆசிய ஜோதி ஜவஹர்

ஆசிரியர்: தி.ஜ.ர
வெளியீடு: தி அல்லயன்ஸ் கம்பெனி 244,ஆர்.கே. மட் ரோடு மயிலாப்பூர் சென்னை-400004.

பிலை: ரூ.22.00 பக்கங்கள் 280

ஆசியஜோதி நேருவின்வாழ்க்கை வரலாற்று நூல். இதில் நேருவின் வாழ்க்கை வரலாற்றோடு, அவரது வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்களை விளக்கும் அழகான புகைப்படங்கள், அவற்றின் விளக்கங்கள், நேருவின் மறைவு குறித்து இந்தியப் பெருந்தலைவர்கள் விடுத்த துயரச்செய்தி, ஆசிய ஜோதியின் அரிய வாழ்க்கைச் சம்பவங்கள் என்று பிரித்து அழகாகத் தொகுத்துத் தந்திருக்கிறார் ஆசிரியர்.

## மரம்-வளம்

ஆசிரியர்: பி.எஸ்.மணி
வெளியீடு: நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், பிரைவேட் லிமிடெட், 41,பி சிட்கோ இண்டஸ் டிரியல் எஸ்டேட். சென்னை-600098.

விலை ரூ. 16.00 பக்கங்கள்: 130

இன்று நாடுமுழுவதும் 'மரம் வளர்ப்போம்' என்ற கோஷம் ஓங்கி ஒலிக்கிறது. காரணம் மரத்தால் நாம் பெற்றுக்கொண்டிருக்கும், பெற இருக்கும் நன்மைகள்தான்.

மரங்கள் நம் நல்வாழ்வுக்கு வழி கோலுகின்றன என்பதை உணர்ந்த மக்களும் இன்று பெருவாரியாக மரங்களை வளர்க்க முனைந்திருக்கிறார்கள்.

மனிதனுக்குப் பல்வேறு வழிகளில் மரங்கள் எவ்வாறு உதவுகின்றன என்பதை இந்நூல் விவரிக்கிறது.

மேலும் தீக்குச்சி, காகிதம், கட்டுமானம், பட்டு, பஞ்சுநார் கோந்து, ரப்பர் என்று நமது அத்யாவசியப் பொருட்களுக்குக் கூட மரங்கள் தான் நமக்குத் துணை நிற்கவேண்டியுள்ளது என்பதையும் இந்நூல் எடுத்துரைக்கிறது.

—அ. மருதவிநாயகம்

## காதரீன் மேயோவும் இந்தியாவும்

ஆசிரியர்: மனோரஞ்சன்ஜா
வெளியீடு: நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் 41,பி-சிட்கோஇண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600098

விலை; ரூ.20 பக்கங்கள்: 172

வெள்ளை அரசாங்கத்தின் 'கைக் கூலி' எழுத்தாளர் என்றழைக்கப் பட்ட காதரீன் மேயோ எழுதிய 'அன்னை இந்தியா' என்ற நூல் இந்தியர்களை இழிவு படுத்தி எழுதப்பட்ட நூல்.

''ஒரு சாக்கடை ஆய்வாளரின் அறிக்கை'' என்று மகாத்மா இந் நூலைப்பற்றி மனம்வெதும்பினார்.

அமெரிக்கமாதான மேயோ பிரிட்டனிடம் கைக்கூலி பெற்று அமெரிக்காவிலேயே பிரிட்டனின் புகழ்பாடியவர்.

மேயோவின் 'அன்னை இந்தியா' எழுதப்பட்ட சூழ்நிலை, வெள்ளையர்களின் நரித்தந்திரங்கள் பற்றிய உண்மை விவரங்களைத் தேடிக் கண்டறிந்து இந்நூலை எழுதி இருக்கிறார் ஆசிரியர்.

வெந்த புண்ணில் பாய்ந்த மேயோவின் வேலைப்பிடுங்கி மருந்திட்டிருக்கிறார்ஆசிரியர். ஒவ்வொரு இந்தியனும் பாராட்ட வேண்டும்.

## பிணம் தின்னும் சாத்திரங்கள்

ஆசிரியர்: சு.சமுத்திரம்
வெளியீடு: நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் 41-பி, சிட்கோ எஸ்டேட், சென்னை-600098.

விலை ரூ:12 பக்கங்கள் 143

தமிழகத்தின் முதன்மையான பத்திரிகைகளில் வெளிவந்த சிறு கதைகளின் தொகுப்பு.

யதார்த்த வாத இலக்கிய வாதியான ஆசிரியரின் எழுத்தாற்றல், தனித்தன்மை, சொல்ல வந்ததை மிகத்தெளிவாகக் கூறிடும் திறமை அஞ்சாமை ஆகியவை இந்நூலில் உள்ள பதினோரு சிறுகதைகளிலும் மின்னலிடுகின்றன.

— மருது

## வாழ வைக்கும் வார்த்தைகள்

ஆசிரியர் : டாக்டர் மு. முத்துக்காளத்தி.

விற்பனை உரிமை : பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை-600108.

விலை : ரூ. 12 பக்: 112.

''கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். பக்தி விருத்திக்கு ஏதுவான, நல்ல வார்த்தை உண்டானால், அதையே கேட்கிறவர்களுக்கும் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்'' என்பது பைபிள் வாசகம்.

தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த புலமையும், வாழ்வியலில் தெளிந்த சிந்தனைப் போக்கும் நிறைந்த வாழ்வியல் எழுத்தாளர் டாக்டர் மு. முத்துக்காளத்தி, ''வாழ வைக்கும் வார்த்தைகள்'' என்ற இந் நூலில் வார்த்தைகளுக்கு உள்ள வலிமையையும், வாழ்க்கையில் வெற்றி பெற வார்த்தைகள் உதவும் விதத்தையும் சுவைபட விளக்குகிறார்.

''இதமான சூழ்நிலையை உருவாக்கப் பதமான வார்த்தைகளால் தான் முடியும்''

''யாரைப் பற்றியும் நல்லதைப் பற்றி மட்டுமே பேசும் பழக்கத்தை வழக்கமாக்கிக் கொள்''.

''நம்பிக்கையோடு நல்ல வார்த்தைகளையே பேசு, நல்லதே நடக்கும்''.

''உங்கள் நண்பர்களோடு அரட்டை அடிப்பதையும், வீண் பேச்சையும் குறையுங்கள்''.

இந்நூலில் இப்படி பக்கந்தோறும் உடம்பையும் உள்ளத்தையும் சேர்த்து வளர்த்து வாழ வைக்கும் வார்த்தைகளை இனிய எளிய நடையில் விளக்குகிறார் நூலாசிரியர். வாழ்க்கையில் வெற்றி பெற விரும்புவோர் அனைவரும் படித்துப் பயன்பெறத்தக்க நூல் இது.

வ. இராசமனோகரன்.

**குளிர் இரவில் நெருப்பு மலர்**

ஆசிரியர்: அறந்தைநாராயணன்
வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்.
41-பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-98.

விலை ரூ. 7. பக்: 84.

பெண்களின் பெயர்களைப் புனை பெயர்களாக்கொண்டு சமுதாயத்தை நச்சுக் காற்றால் நிரப்பி வரும் எழுத்தாளர்கள் சிலர் உண்டு. இந்த இரண்டாம் தர எழுத்தாளர்களுக்கு மனமாற்றம் ஏற்படுத்தக் கூடிய நூலிது.

பணம் கிடைக்கிறதே என ஆபாசக் கதைகளை எழுதி, அதனால் சமுதாயம்கெட்டுத் தொலைந்தாலும் சரி, தன்மனைவி, தன் குடும்பம் தன் சொந்தம் பாதிக்கப்படக் கூடாது என்பதில் எச்சரிக்கையுடன் இருக்கும் எழுத்தாளன் இராமநாதன். தன் கதையைப் படித்ததால் தன் மனைவி கதை நாயகிகள்போல் நடத்தை கெடுவாளோ என்ற சந்தேகம் ஏற்பட்டு மனம் குழம்பும் போதுதான், அவருக்கு ஞானம் தோன்றுகிறது.

புற்றீசல்போல் கிளம்பியுள்ள வக்கிரப்புத்தி எழுத்தாளர்களுக்குப் படிப்பினை ஊட்டும் நல்ல நூல்.

**வலிப்பு! பாதிப்பு**

ஆசிரியர்கள்: பு. ஜெயச்சந்திரன்
டாக்டர் தி. ஜெய ராமகிருஷ்ணன்.
வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்.
41-பி, சிட்கோ எஸ்டேட்
சென்னை-98.

விலை: ரூ. 11. பக்: 96.

வலிப்பு ஒரு நோயல்ல; காய்ச்சல், வாந்தி, தலைவலி போன்றவை ஒரு நோயின் அறிகுறிகள் என்பது போலவே, வலிப்பும் மூளையின் மின்னியக்கத்தில் ஏற்படும் மாறுதலைக் காட்டும் ஓர் அறிகுறியே என்கின்றனர் நூலாசிரியர்கள்.

வலிப்பு எதனால் வருகிறது, அதனை எவ்வாறு கண்டறிவது, வலிப்பு சமயத்தில் பாதிப்பாளரை எவ்வாறு பாதுகாப்பது, எவ்வாறு சிகிச்சை அளிப்பது என்பனபோன்ற விவரங்கள் மிகத் தெளிவாக இந்நூலில் விளக்கப்படுகின்றன.

இதுபோன்ற நூல்கள் நம் சமுதாயத்திற்கு இன்னும் அதிக அளவில் தேவை.

— வி. இராவணன்.

# மறைமலைநகர் அருகில் பல்லவர் கால ஊர்



மறைமலை நகருக்கு இரண்டு மைல் தொலைவில், பல்லவர் காலத்திய ஊர் அமைப்பு ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

'காயரம்பேடு' என்று தற்போது அழைக்கப்படும் அந்தப் பகுதி 1,200 ஆண்டுகளுக்கு முன் பல்லவர் காலத்தில் 'காசிபன்பேடு' என்று புகழ் பெற்று அழைக்கப்பட்டிருந்ததாகத் தொல்லியல் ஆய்வுத்துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த ஊர் பல்லவர் காலத்தில் முதன் முதலில் 'ரண சதுர்வேதி மங்கலம்' என்று அழைக்கப்பட்டு வந்ததாகவும், பல்லவர் காலத்திலேயே சிறப்புற விளங்கியதாகவும் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

இந்தப் பகுதியிலுள்ள சிவன் கோவிலில் ராஜராஜன், ராஜேந்திரன், சம்புவராயர், விஜய நகர அரசர்களின் கல்வெட்டுகள் உள்ளன. கோவிலின் முன் உள்ள மண்டபம் நிருத்த மண்டபம் என்றும், காவன் என்பவன் கட்டினான் என்றும் அறிய முடிகிறது. இது தவிர பல்லவன் காலத்துத் திருமாலின் சிலை உடைந்த நிலையில் அருகிலுள்ள ஏரியில் கிடக்கிறது.

அங்கு பல்லவர் கால 'ஜேஷ்டா' தேவியின் சிலை உள்ளது. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சப்த மாதர் சிலைகள் இப்போது 'காசியம்மன்' என்று அழைக்கப்படுகிற ஊருக்கு வடகிழக்கில் உள்ள கோவிலில் உள்ளன. இந்தச் சிலைகளின் கீழ் பீடங்களின் கழிவு ஒன்று காணப்படுகிறது. இது தவிர, சப்த மாதர்களுடன் வீரபத்திரர் உருவில் சிவபிரான் சிற்பமும், வலம்புரி விநாயகர் சிற்பமும் உள்ளன.

இந்த ஊரை ஒட்டியுள்ள நந்திபுரம் என்று அழைக்கப்படும் ஊர் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் அமைக்கப்பட்டிருக்கக்கூடும் என்று தெரிகிறது.

18 ....ஆம் பக்கத் தொடர்ச்சி

தேசிய ஒருமைப்பாட்டு உறுதி மொழியை எடுத்துக் கொண்டார்கள். விழா முடிவில் கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

**23— 4— 88**

தேசியப் பாடல்களைப் பாடிக் கொண்டு பாதயாத்திரைக் குழுவினர் நீடாமங்கலத்திலிருந்து புறப்பட்டனர்.

சாலை ஓரங்களில் நின்றிருந்த ஆண்களும் பெண்களும் இரு கை கூப்பிக் குழுவினரை வரவேற்றதுடன், சற்று தூரம் கூடவே நடந்து வந்தது உணர்ச்சி மயமாக இருந்தது.

பூவனூர் சென்றபோது, கரக ஆட்டத்துடன் மக்கள் வரவேற்றார்கள். வரவேற்பு வளைவுகளும், பதாகைகளும் அவர்களை வரவேற்றன.

பாத யாத்திரையையொட்டி, பூவனூரில் யாத்திரைக் குழுவினர் மரக்கன்றுகளை நட்டனர். ரூபாய் 50,000 மதிப்பில் கட்டப்பட்ட ஊராட்சி அலுவலகக் கட்டடம் திறக்கப்பட்டது.

பாதயாத்திரைக் குழுவினர் ராஜப்பையன்சாவடி, களஞ்சிமேடு வழியாக மன்னார்குடி எல்லையை அடைந்தனர். அங்கு யானை, குழுவினருக்கு மாலைபோட்டு வரவேற்றது. மன்னார்குடியில் பாத யாத்திரைக் குழுவினருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அன்று இரவு நடந்த பொதுக் கூட்டத்தில் மன்னார்குடி நகர மன்றத் தலைவர் திரு சிவ. ராஜமாணிக்கம் அனைவரையும் வரவேற்றார். மன்னார்குடி கோட்டாட்சித் தலைவர் திரு நடராசன் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் ''இளைஞர்கள் அன்றைய உப்பு யாத்திரையையும் சுதந்திரப் போராட்ட வரலாற்றையும் தெரிந்து கொள்ள இன்றைய உப்பு யாத்திரை பயன்படும்'' என்றார்.

1930-இல் உப்புச் சத்தியாக்கிரகப் போரில் பங்குபெற்ற தியாகி பழனிவேல் அவர்கள் பேசுகையில் ''ஜாலியன்வாலாபாக் படுகொலை, நான் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடக் காரணமாக இருந்தது. போராட்டத்தில் கலந்து கொண்டு தமிழ்நாட்டிலேயே முதன் முதலில் சிறுவன் என்ற முறையில் கைதாகிச் சிறை சென்றவன் நான்'' என்றார்.

திரு சேதுராமன் அவர்கள் பேசுகையில், ''இந்த வேள்வி, தேசிய ஒருமைப்பாட்டை, அகிம்சையை இன்றைய தலைமுறையினருக்கு எடுத்துக்காட்டும்'' என்றார்.

விழா முடிவில் கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

**24—4—88**

பொழுது புலர்ந்ததும் மன்னார்குடியிலிருந்து பாதயாத்திரைக் குழு புறப்பட்டது. அந்த நேரத்திலும் சாலை இருமருங்கிலும் ஆண்கள், பெண்கள் குழந்தைகள் கூடி அன்பான வரவேற்பு அளித்தார்கள்.

பாத யாத்திரைத் தொண்டர்கள், முன்னே அலங்கரிக்கப்பட்ட யானை ஒன்று அசைந்து வர, 'வந்தேமாதரம்' கோஷம் வானைப் பிளக்க ஊர்வலம் உணர்ச்சிபொங்கவந்தது.

கருவகுளம் கிராமத்தில், தாரை, தப்பட்டை முழங்க, மக்கள் வரவேற்பளித்தார்கள். காசாங்குளத்திலும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பிறகு தட்டாங்கோயில் வந்து சேர்ந்தது, பாத யாத்திரைக்குழு. இங்கு இடைவேளைக்குப்பிறகு மீண்டும் நடைப் பயணம் தொடர்ந்தது. மழவராயநல்லூரில் ஏராளமான பள்ளிக் குழந்தைகள் வெள்ளைக் கொடிகளை அசைத்து, ஊர்வலத்தொண்டர்களுடன் 'வந்தே மாதரம்' என்று முழங்கினர்.

பிறகு கம்மங்குடி வழியாக வரும்போது, அங்கும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அன்று மாலை ஆதிச்சபுரத்துக்குத் தொண்டர்கள் வந்தனர். அங்கு ஏராளமான பள்ளிக் குழந்தைகள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எல்லாரும் அன்புடன் வரவேற்றார்கள்.

அன்று மாலை நடந்த பொதுக் கூட்டத்தில் திரு. அ. கேடிலியப்பன், திரு. ஜவகர்லால், திரு. கே. எஸ். துரைசாமி ஆகியோர் பேசினர். பள்ளிக் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

**25—4—1988**

பாதயாத்திரை வீரர்கள் இன்று காலை ஆதிச்சபுரத்திலிருந்து புறப்பட்டு, விளக்குடி கிராமத்தை அடைந்தனர். ஊர் மக்கள் உற்சாகத்துடன் தொண்டர்களை வரவேற்றனர். அங்கு அவர்கள் பகலுணவு கொண்டு, ஓய்வெடுத்தனர்.

மாலையில் புறப்பட்டு, இரவு திருத்துறைப்பூண்டியை அடைந்தனர். சுதந்திரப் போராட்ட வீரர்கள் அமைப்பின் தமிழ் மாநிலத் தலைவர் மற்றும் செயலாளர்கள் டாக்டர் எஸ்.என்.சோமையாஜுலு, கே. சுப்பராமலு, ராஜாராம், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் சி.என்.கிருஷ்ணபாரதி இ.ஆ.ப., முதலியோர் வரவேற்றுச் சிறப்பித்தனர்.

**26—4—1988**

தியாக சீலர்கள் திருத்துறைப்பூண்டியிலிருந்து புறப்பட்டு, காலையில் மேலமருதூரை அடைந்தனர். நண்பகல் உணவு, ஓய்வுக்குப்பிறகு தகட்டூர் போய்ச் சேர்ந்தனர்.

ஊர்ப் பொதுமக்கள் 300 பேர் குழுமி உற்சாக வரவேற்பு அளித்தனர். இரவு நடைபெற்ற கூட்டத்தில் நடைப் பயண வீரர்கள், பி.ஏ. தெய்வசிகாமணி, ஜி.கே.கண்ணன், வழக்குரைஞர் தாயுமானவர், தமிழரசு வெளியீட்டுப் பிரிவுச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் மு.முத்துக்காளத்தி மற்றும் பலர் உரையாற்றினார்கள்.

1930-இல் ராஜாஜி தம் தொண்டர்களுடன் இந்தக் கிராமத்துக்கு வந்தபோது, ரோட்டிலிருந்து 1.5 மைல் தூரம் கிராமம் தள்ளியிருந்தது. வீடுகள் கிடையாது. ஆனால் பொது மக்கள் பந்தல் போட்டு வரவேற்றனர்.



குப்பன் என்ற ஆதிதிராவிடச் சிறுவன் ஒருவனை ராஜாஜி குளிப்பாட்டி, புத்தாடை அணிவித்து, கூட வைத்துக்கொண்டு சாப்பிட்டார். இப்பொழுது அந்தக் குப்பனுக்குச் சுமார் 65 வயது. இன்றும் அவருக்குக் கூட்டத்தில் சிறப்புச் செய்யப்பட்டது. கிராம மக்கள் அவரைக் கவுரவித்தது, கண்ணியமிக்க செயலாகவும் கண்களில் ஆனந்தக் கண்ணீரை வரவழைப்பதாகவும் இருந்தது.

**27—4—1988**

காலையில் தகட்டூரை விட்டுப் புறப்பட்டு, மருதூர் தெற்கை அடைந்தனர், பாதயாத்திரைக் குழுவினர். வழியெங்கும் விழாக் கோலம். மக்கள் விழியெங்கும் பெரு மகிழ்ச்சி. சிற்றுண்டி அளித்ததோடு தொண்டர்தம் சீர் பரவும் சிறப்புக் கவிபாடிக் களித்தனர்.

இலக்கியச் செல்வர் குமரி அனந்தன், பி.ஏ. தெய்வசிகாமணி, வழக்குரைஞர் தாயுமானவர், தமிழரசு வெளியீட்டுப் பிரிவுச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் மு. முத்துக் காளத்தி மற்றும் பலர் பேசினர்.

இங்கிருந்து ஆயக்காரன் அம்பலம் என்ற கிராமத்திற்குப் பகலுணவுக்கும் ஓய்வுக்கும் புறப்பட்டது உப்புச் சத்தியாக்கிரகிகள் குழு. வழியில் ஓர் ஆனந்தமான அனுபவம்.

மறுநாள் வேதாரணியத்தில் மேதகு குடியரசுத் தலைவர் கலந்து கொள்ளும் வரவேற்பு-வாழ்த்து நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக, மத்திய அரசின் அமைச்சரவைச் செயலகத்தின் செயலர் திரு முராரி, இ.ஆ.ப., அவர்களும், செய்தி - சுற்றுலாத் துறையின் சிறப்பு ஆணையர்-செயலர் திரு செ.ராம்தாஸ், இ.ஆ.ப., அவர்களும் அந்த வழியாகச் செல்ல நேர்ந்தது. எதிர்பாராத விதமாக அவர்கள் இந்தத் தொண்டர்களைச் சந்திக்கவே, அவர்களும் நடைப்பயணத்தில் கலந்துகொண்டு கால்நடையாகவே ஆயக்காரன் அம்பலம் வந்து சேர்ந்தனர். மக்களின் மகிழ்ச்சிக்கும், தியாக தீபங்களின் உற்சாகப் பேருவகைக்கும் கேட்க வேண்டுமா?

இந்த விழாவில் தமிழக அரசின் செய்தி-சுற்றுலாத்துறையின் சிறப்பு ஆணையர், செயலர் திரு செ.ராம்தாஸ், இ.ஆ.ப., அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்:

''இந்தப் புனிதப் பயணத்தில் புதுடில்லியிலிருந்து வந்து கலந்து கொள்ளும் அருமை அண்ணல்-பிரதமரின் சிறப்புச் செயலர் திரு முராரி அவர்களே! இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் அவர்களே! வெற்றி நடைபோட்டு இந்தப் புனித யாத்திரையின் சிறப்புக்குக் காரணமான தியாக வீரர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! புனிதப்பயணத்தில் கலந்துகொள்ள வாய்ப்பளித்த தலைவர் திரு தெய்வசிகாமணி அவர்களே! உங்கள் அனைவருக்கும் என் இதயங் கனிந்த நன்றி.

''58 ஆண்டுகளுக்கு முன்னால் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் இதே நாளில் இதே இடத்தில் வந்து தங்கினார். பெரியவர்கள் தங்கள் மலரும் நினைவுகளைப் புத்தகமாக எழுதுவது வழக்கம். காந்தி, நேரு, ராஜாஜி ஆகியவர்கள் அவ்வாறு எழுதியிருக்கிறார்கள். எனக்கு அப்படிப்பட்ட தகுதி இல்லாவிட்டாலும், இந்த மாவட்டத்தின் முன்னாள் ஆட்சித் தலைவராக இருந்த பசுமை நினைவுகள் இன்று என் மனக்கண்முன் நிழலாடுகின்றன. நீங்கள் உங்கள் பயணத்தில் மக்களுக்குத் தியாக உணர்வும், நாட்டுப் பற்றும், ஒருமைப்பாடும் பெருகவும் தீண்டாமை ஒழிப்பிலும், மதுவிலக்கிலும் மிகுந்த ஈடுபாடு வளரவும் நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்லி வந்திருக்கிறீர்கள். அவை சிறந்த பலனைத் தரும் என்று நம்புகிறேன். இங்கிருந்து நீங்கள் உங்கள் கிராமங்களுக்குத் திரும்பிச் செல்லும்போது அவைகளை மறக்காமல் மீண்டும் மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இந்தப் பயணத்தில் கலந்துகொண்டு உங்களோடு நடந்து வந்ததை நான் ஒரு பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

''நாளைக்கு வேதாரணியத்தில் நடைபெறும் விழாவில், நமது

## தியாகி வைரப்பன்

**திரு** வைரப்பன் அவர்கள் அக்காலத்தில் 15, 16 வயதுச் சிறுவன். தனது குடும்பத் தொழிலாகிய நாவிதர் வேலையைச் செய்து வந்தார்.

வேதாரணியத்தில் ஆங்கில அரசு உப்புச் சத்தியாக்கிரகத் தொண்டர்களுக்கு எந்த உதவியும் செய்யக்கூடாதென்று அடக்குமுறைச் சட்டம் விதித்திருந்தது. நேர்மாறாக மக்கள் அரசாங்க அதிகாரிகள் ஒருவருக்குமே எந்தவிதமான உதவியும் செய்வதில்லை என்று கட்டுப்பாடாக ஊர்க்கட்டுப்பாடு செய்து வைத்திருந்தார்கள். இந்த நிலையில் கிராமத்தொழிலாளர் எவரும் அரசு அதிகாரிகளுக்குச் சலவை செய்து கொடுப்பதோ, முடி வெட்டுவது போன்றவைகளோ செய்வதில்லை என்ற கட்டுப்பாட்டுடன் இருந்தார்கள்.

ஒருநாள் காவல்துறையைச் சேர்ந்த ஒரு போலீஸ்காரர், சாதாரண கிராம மக்கள் போன்று உடையணிந்து கொண்டு இந்த திரு. வைரப்பன் அவர்களிடம் முகச்சவரம் செய்து கொள்ள வந்தார். யார் என்று தெரியாமல் திரு வைரப்பனும் வேலையைத் தொடங்கி விட்டார். சற்று நேரத்திற்கெல்லாம் அவ்வழியாக வந்தவர் மூலம். இவர் போலீஸ்காரர் என்று தெரிந்ததும் பாதி க்ஷவரத்துடனேயே கத்தியை மடக்கி வைத்து விட்டு, மேற்கொண்டு செய்ய மறுத்துவிட்டார். உடனே போலீஸ்காரர் அவரைப் பிடித்துச் சென்று, அடித்து இம்சைப்படுத்தி க்ஷவரத்தைப் பூர்த்தி செய்யச்சொல்லி எவ்வளவோ துன்புறுத்தியும் ''என் உயிர் போனாலும் செய்ய மாட்டேன்'' என்று மறுத்துவிட்டார். பின்னர் இவருக்கு ஆறு மாதக் கடுங்காவல் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

1930-ஆம் ஆண்டில் இத்தகைய அறப்போரில் ஈடுபட்ட தியாகி வைரப்பன் அவர்களுக்கு 28-4-88 அன்று வேதாரணியத்தில் நடைபெற்ற விழாவில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கிப் பாராட்டிக் கௌரவித்தார்.

மேதகு குடியரசுத் தலைவர் - மண்ணின் மைந்தர் - கலந்துகொள்ளும் விழாவில் நீங்கள் பெருவாரியாக வந்து அவரது வாழ்த்துக்களைப் பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்''.

மத்திய அரசின் அமைச்சரவைச் செயலகத்தின் செயலரும், 40-வது சுதந்திர நாள் விழா, ஜவஹர்லால் நேரு நூற்றாண்டு விழா செயற்குழுச் செயலருமான திரு பி. முராரி, இ.ஆ.ப., அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்:

''மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய அருமைத்தம்பி ராமதாஸ் அவர்களே! உப்பு யாத்திரையில் கலந்துகொள்ளும் தியாகிகளே! சகோதர சகோதரிகளே!

''இந்த வழியாக ஊர்தியில் செல்லும்பொழுது எதிர்பாராத விதமாக இந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. தெய்வசிகாமணி அவர்கள் சில நாட்களுக்கு முன் நடந்த தண்டி யாத்திரை பற்றிச் சொன்னார். அதில் நான் முன்னணியில் இருந்தேன். குஜராத், காந்தியடிகளின் மாநிலம். அங்கு மக்களின் எழுச்சி மகத்தான அளவில் இருந்தது. ஆனால், அதையும் இதையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, தண்டி யாத்திரையில் காணப்பட்ட எழுச்சி ஆர்வத்தைவிடப் பன்மடங்கு உணர்ச்சி வெள்ளத்தை என் மாநிலத்தில் (தமிழகத்தில்) நான் பார்க்கிறேன். இப்படிப்பட்ட ஆர்வத்தை - பூரிப்பை - நான் எதிர்பார்க்கவே இல்லை.

''நாளை நடைபெறும் விழாவில் நீங்கள் ஏராளமான அளவில் கலந்துகொண்டு உங்கள் ஆசீர்வாதத்தை வழங்கி, அனைவரையும் கவுரப்பீர்கள் என்று நம்புகிறேன்''.

இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் பேசிய பேச்சின் சுருக்கம்:

''பிரதமரின் சிறப்புச் செயலர் திரு முராரி அவர்களே! ஐ.ஏ.எஸ் அதிகாரியாக இராமல் தியாகிகளின் புனிதப் பயணத்தோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டுள்ள திரு ராம்தாஸ் அவர்களே!

''குஜராத் தண்டியிலே காந்திஜி தொடங்கிய யாத்திரையைத் தொடர்ந்து மகாத்மாவின் மனச்சாட்சியின் காவலராக விளங்கிய ராஜாஜி அவர்கள் வேதாரணிய யாத்திரையை நடத்தினார். குஜராத்தில் அண்மையில் மீண்டும் நடத்தப்பட்ட தண்டியாத்திரையை விட இந்த வேதாரணிய யாத்திரை சிறந்து விளங்குவதாகச் செயலர் முராரி சொல்லும் சொற்கள் நம்மை உற்சாகம் கொள்ள வைக்கின்றன. தஞ்சையில் தோண்டும் இடமெல்லாம் தேசியமே ஊறும் என்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

''உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்று சொன்னார்கள். காந்திசேனை சாந்திசேனையாகும். இது ஊர்வலமாக இல்லை, ஊரே வலம் வந்ததாக இருக்கிறது. ராஜாஜி பாதம் பட்ட இடத்தில் கால்வைக்கக்கூசுகிறது. நம்முடைய நாட்டை உலகத்தில் சிறந்த நாடாக்க முயல்வோமாக!''

**28—4—1988**

வேதாரணியத்தில் மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் தியாகிகளை வரவேற்று வாழ்த்தி நினைவுப் பரிசுகள் வழங்கினார்.

**29—4—1988**

வேதாரணியத்தில் உப்பு யாத்திரைச் சத்தியாக்கிரகிகள் உண்ணா நோன்பு இருந்தார்கள்.

**30—4—1988**

வேதாரணியம் அகஸ்தியம்பள்ளியில் அதிகாலையில் சத்தியாக்கிரகிகள் உப்பெடுத்தார்கள். மேதகு ஆளுநரின் பெருமதிப்பிற்குரிய ஆலோசகர் திரு ஜி. வி. இராமகிருஷ்ணா அவர்களும் தியாகிகளோடுசேர்ந்துஉப்பெடுத்ததோடு, அவர்களது புனிதப் பயணத்தை நிறைவு செய்து பாராட்டிப் பேசினார்.

நிகழ்ச்சித் தொகுப்பு:

—நமது செய்தியாளர்கள்

## வேதாரணியப் பெருமை

மூர்த்தி சிறிதெனினும் கீர்த்தி பெரிது என்று சொல்வதுபோல, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வேதாரணியம் ஓர் சிற்றூர்தான் என்றாலும் சிறப்புகள் பல பெற்றிருக்கிறது. சைவ சமயாசாரியர்களால் புகழ்ந்து பாடப்பெற்ற திருத்தலம் இது. திருமறைக்காடு என்னும் பெயர் இவ்வூருக்கு உண்டு.

இங்குள்ள ஆலயத்தின் கதவு நெடுங்காலமாகத் திறக்கப்படாமல் இருந்தது என்றும், சம்பந்தர், அப்பர் ஆகியோர் பாடிய தேவாரப் பாடலின் விளைவாகத் திறந்து கொண்டது என்றும் ஒரு சேதி இலக்கியங்களில் காணப்படுகிறது.

இவ்வூர் கடலோரத்திலிருப்பதால் இராமநாதபுரத்தில் உள்ள சேதுவிற்குள்ள பெருமையும் இதற்கிருக்கிறது. நன்னாள்களில் மக்கள் கடல்நீர் ஆடுவதற்கேற்ற வகையில் ஆழமில்லாத கடல் இங்கு அமைந்திருக்கிறது.

இவ்வூரின் அருகிலுள்ள அகஸ்தியம்பள்ளி உப்பு விளைவுக்குப் பெயர்போன இடம் என்பதால்தான் இந்த இடம் உப்புச் சத்தியாக்கிரகத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

### அறப்போர் வீரர் பீ. எஸ். ராமையா

தமிழ்த் திரைப்பட உலகிலும், நாடகத் துறையிலும் புகழ்பெற்ற கதை, வசன ஆசிரியராகத் திகழ்ந்தவர் திரு பி. எஸ். ராமையா என்பது பலருக்குத் தெரியும். அவர், 1930-ல் நடைபெற்ற வேதாரணியம் உப்புச் சத்தியாக்கிரகத்தில் பங்கு பெற்று, சிறைத் தண்டனை விதிக்கப் பெற்று, அலிபுரம் சிறையில் வைக்கப்பட்டிருந்தார் என்ற செய்தி அநேகம் பேருக்குத் தெரிந்திருக்க முடியாது.

# குருதேவரின் குரல்

பேராசிரியர்
அ. சீனிவாச ராகவன்

**1912-**ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஒரு நாள் மாலை. இலண்டன் மாநகரில் ரோதென்ஸ்டின் என்ற ஓவியர் ஒருவருடைய வீட்டில், இலக்கிய ரசிகர்கள் சிலர் கூடியிருந்தார்கள். அவர்களிற் பலர் ஆங்கில இலக்கிய உலகில் பிரசித்தி பெற்றவர்கள். அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த யேட்ஸ் என்ற ஆங்கிலக் கவிஞரும் அந்தக் கூட்டத்தில் இருந்தார். சில பாடல்களின் எழுத்துப் பிரதி ஒன்று அவர் கையிலே இருந்தது. அதை எடுத்துப் படிக்கத் தொடங்கினார்:

வருகிறான், வருகிறான், வருகிறான்
அரவமின்றி ஆர்பதத்தின்
அசைவு கேட்கவில்லையா?
வருகிறான், வருகிறான், வருகிறான்

வருவது யார்? யார் என்று யாரால் அறுதியிட்டுச் சொல்லிவிட முடியும்? மோனமாய் வருகின்ற அந்தப் பாதங்களின் அசைவுமட்டும், கால வெள்ளத்தின் ஒவ்வொரு துளியிலும் கேட்கிறது.

ஓடுகின்ற ஓர் கணத்தில்
ஓங்குகின்ற ஊழியில்
ஆடுகின்ற பகலில்
அந்தகாரம் ஆழும் இரவினில்
வருகிறான், வருகிறான், வருகிறான்

ஆம், கோடை வெய்யிலில், கார் காலப் பெரு மழையில், வாசம் பெருகும் காட்டுப் பாதையில், குமுறி இடிக்கும் மேகத் தேரினில் உலகத்தில் எங்கும், எங்கும், எங்கும் அவன் வருகிறான், வந்து கொண்டே இருக்கிறான்;

கோடை வெய்யில் வாசம் மல்கும்
கோலக் காட்டுப் பாதையில்
மூடு கார் இராவினில்
முழங்குமேகத் தேரினில்
வருகிறான், வருகிறான், வருகிறான்

வெளி உலகத்தில் மட்டுமா இப்படி? எத்தனையோ பாவனைகள் என்னுடைய மனத்திலே சிலிர்த்துத் திரையோடிச் செல்கின்றன. அவற்றையெல்லாம் பாட்டாக வடித்துப் பாடுகிறேன். என்னுடைய பாடல்கள், எனக்கே தெரியும் என்று நான் எண்ணும் என் இரகசியங்களின் குரல், இவற்றில் ஒலிக்கும் ஸ்வரம் ஒவ்வொன்றும் ஒரே ஒரு செய்தியைத்தான் பறையறைகின்றன. அவன் வருகிறான் என்ற செய்தியை;

பண்ணிலே இசைத்துளேன் என்
பாவனைகள் ஆயிரம்
பண்ணில் ஆடும் இசைகள் கூடிப்
பாடும் செய்தி ஒன்றுதான்;
வருகிறான், வருகிறான், வருகிறான்

துயரமா, அந்த வடிவத்திலே வந்து என் நெஞ்சை அழுத்துவது எது? அவன் பாதம், இன்பமா, அது பெருகிப் பெருகிச் சுடர்விடும்படி செய்வது எது? அவனுடைய பாதம் என்ற பரிச வேதி.


துன்பம் மேலோர் துன்பமாகத்
துன்னும் போதுஎன் நெஞ்சினில்

**(மே 9 கவியரசர் ரவீந்திரநாத் தாகூரின் பிறந்த நாள் ஆகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை இடம் பெறுகிறது).**

மன்னி நின்றழுத்தும் பாரம்
மாசிலா அவன்பதம்
வருகிறான், வருகிறான், வருகிறான்

எந்தை பொற்பதங்கள் என்னும்
இன்பவேதி தீண்டலால்
எந்தன் இன்பம் யாவும் சோபை
ஏறும், ஏறும், ஏறுமே
வருகிறான், வருகிறான், வருகிறான்.

இந்தப் பாடல் வங்காளி மொழியில் உள்ள பாடல் ஒன்றின் தமிழ் மொழி பெயர்ப்பு. வங்காளிப் பாடலின் ஆங்கில மொழிபெயர்ப்பைத்தான் யேட்ஸ் படித்துக்



காட்டினார். அந்த ரசிகர் கூட்டம் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தது. யேட்ஸ் தொடர்ந்து படிக்கலானார்;

நீயே வானம், நீயே கூடு
நீயே நிறைஎழில், இக்கூட்டில்
தோயும் மணமாய், ஒலியாய் நிறமாய்ச்
சூழ்வது உயிரை உனதன்பே.

இறைவனே, வையம் என்ற கூடும் நீ தான், கூட்டிற்கு அப்பால் உள்ள அகண்டமான வானும் நீ தான். கூட்டினுள்ளே மணமாயும், ஒலியாயும், நிறமாயும், உயிரை எழிலாய்ச் சூழ்ந்து நிற்பது உன்னுடைய அன்பு தான். இந்தக் கூட்டின் ஒரு புறத்தில், தங்கக் கலமொன்று கையிலேந்தி, காலை என்னும் ஒளிமகள் வருகிறாள்; அழகென்னும் மாலையைக் கொணர்கிறாள்; இந்த உலகத்திற்கு மகுடமாகச் சூட்டுகிறாள்;

காலை வருவாள் கையில் கனகக்
கலமொன் றேந்தி அழகென்னும்
மாலை கொணர்வாள் கொணர்ந்து மண்ணின்
மகுடமாகச் சூட்டிடுவாள்

கூட்டின் மற்றொரு புறத்தில்,மேய்ச்சற் காட்டைக் கடந்து, தங்கக்குடத்தில் அமைதி என்னும் அமுதம் ஏந்தி, அந்தி மகள் வருகிறாள்;

மந்தை துறந்து, வெறித்த மேய்ச்சல்
காட்டு வெளியின் நெடுமேட்டில்
எந்தச் சுவடும் இல்லா வழியில்
ஏறி வருவாள் அந்தி மகள்,
பொங்கி மேற்கில் பெருகும் ஓய்வாம்
புணரி திரளும் சாந்தியினைத்
தங்கக் குடத்தில் ஏந்தி வருவாள்
தண்ணென் றளிப்பாள் அந்திமகள்

காலையும் மாலையும் வாசற்படிகளாக அமைந்த இந்த வையகக் கூட்டில், வண்ண விசித்திரங்களாக விரியும் ஒளியே நிரம்பி நிற்கிறது. ஆனால் இந்தக் கூட்டுக்கு அப்பால் உள்ள வெளியிலோ, ஆன்மா சிறகு விரித்துப் பறப்பதற்காக அமைந்த அந்த விசுவ விசாலத்திலோ, வண்ணங் கடந்த வெண்மை ஒளியே ஆட்சி செலுத்துகிறது.

ஆனால் இந்தக் கூட்டுக்கப்பால்
ஆன்மா சிறகு விரிக்கின்ற
ஆனா அகண்ட வான வெளியில்
ஆட்சி செலுத்தும் வெண்மை ஒளி

அந்தப் பேரொளியில், பகல் இல்லை, இரவு இல்லை, வண்ணமில்லை, வடிவமில்லை; ஆனால், இறைவனே நீ இருக்கிறாய், சொல்லற்ற அந்தத் துரியத்திலும் நீயே இருக்கிறாய்;

களங்க மில்லா அப்பே ரொளியில்
கங்குல் இல்லை, பகல் இல்லை;
துளங்கு நிறமோ வடிவோ இல்லை;
சொல்லும் இல்லை; நீ உண்டு.

இப்படி ஒரு சில பாடல்களை, யேட்ஸ் என்ற அந்த ஆங்கிலக் கவிஞர் படித்துக்காட்டி நிறுத்தினார். கேட்டுக் கொண்டிருந்த ரசிகர்கள் ஒன்றுமே பேசவில்லை. அறை முழுவதும், அந்த ஜூன் மாசத்து அந்திப்பொழுதின் அமைதி நிரம்பியது. பிறகு, பேச்சொன்றும் இல்லாமல் அந்தக் கூட்டம் கலைந்தது.

பாடல்களை இயற்றிய வங்காளக் கவிஞர் ரவீந்திர நாத தாகூருக்குச் சிறிது ஏமாற்றம்; வருத்தமும்கூட; ஆம், அவர் அந்தக் கூட்டத்தில் இருந்தார். தம்முடைய பாடல்களை உபசாரமாகக் கூடப் பாராட்டாமல்

## சிறைக்கே செல்லட்டும்

வேதாரணியம் உப்பு அறப்போரில் பங்கு வகித்தவர்களில் சர்தார் வேதரத்தினம் குறிப்பிடத்தக்கவர். அவரை ஆங்கில அரசு கைது செய்தது; அவரது தந்தையாரை அணுகி, ''உங்கள் மகனை மன்னிப்புக் கேட்கச் சொல்லுங்கள். பல சலுகைகளை அரசாங்கத்திடமிருந்து வாங்கித் தருகிறோம் என்று மாவட்டத் துணை ஆட்சியாளர் தெரிவித்தார்.

''மன்னிப்புக் கேட்டு வெளியே வருவதைக் காட்டிலும், என்மகன் சிறைக்கே செல்லட்டும்' என்று பதிலளித்தார் சர்தாரின் 90 வயதுத் தந்தை அப்பாக்குட்டி.

இந்த ரசிகர் குழாம் கலைந்து விட்டதே என்று அவருக்குக் கவலை. பின் இராதா? ''எதற்காக இந்தப் பாவி மனிதர் யேட்ஸ் என் பாடல்களை இவர்களுக்குப் படித்துக் காட்டினார்?' என்று எண்ணினார்.

**ஆனால்,** மறுநாள் அவருக்கு உண்மை தெரிந்தது. ஸ்ரீமதி மே சிங்க்ளேர், ஸ்ரீமான் நெவின்ஸன் போன்ற சிறந்த கவிதா ரசிகர்களிடமிருந்து பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிந்தன. 'உண்மையைத்தான் சொல்கிறார்களா? அல்லது ஏதோ மரியாதைக்காக இப்படியெல்லாம் புகழ்கிறார்களா? என்று தாகூரே நினைக்கும் அளவுக்கு, கடிதங்கள் எல்லாம் புகழ்மாலைகளாக அமைந்தன. தாகூருக்கு ஒரே திகைப்பு, பிறகு வியப்பு, அதன் பின் மனத்திலே உள்ள உண்மையைத் தான் இவர்கள் பேசுகிறார்கள் என்ற மன நிறைவு.

இதற்குப் பிறகுதான், தாகூரின் புகழ், அவருடைய பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பின் மூலமாக வெளிநாடுகளில் வளர்ந்தது. 1912-ஆம் ஆண்டில் 'கீதாஞ்சலி' என்ற தலைப்பில் 103 பாடல்கள் அடங்கிய தொகுப்பு ஒன்று வெளிவந்தது. இப்பாடல்கள் எல்லாம் ஆங்கில வசன வடிவத்தில் இருந்தன. வசனமாக இருந்தாலும், பாடல்களில் ஒளிவீசிய கருத்துக்களும், உருவகங்களும், உவமைகளும், ஆழ்ந்த தத்துவ உணர்வின் சாயலும், ஆங்கில இலக்கிய உலகை ஆட்கொண்டன. அடுத்த ஆண்டில் (1913) அகில உலக இலக்கியப் பரிசான நோபல் பரிசு, தாகூருக்கு வழங்கப்பெற்றது. மகாத்மா காந்தியால் குருதேவர் என்று அழைக்கப் பெற்ற ரவீந்திர நாத தாகூரின் புகழ் விரைவிலே பரவியது. குருதேவரின் கவிதைக் குரல் உலகம் முழுதும் ஒலிக்கத் தொடங்கியது

(நன்றி: கல்கி - 2-10-60)





இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த குழு — ஊரக வளர்ச்சிச் செயலர் கலந்துரை

இங்கிலாந்து நாட்டின் பிராட்போர்டு பல்கலைக்கழகத்தின் திட்டத் தயாரிப்புப்பிரிவைச்சார்ந்த ஜான் மக்ஆர்தர், பர்மிங்காம் பல்கலைக் கழகத்தின் உள்ளாட்சி அமைப்பு முறைக் கல்வி நிறுவனத்தைச் சார்ந்த டாக்டர் திருமதி மேரி இட்டா-ஒ-டினோவன் ஆகியோர் தமிழக அரசின் ஊரக வளர்ச்சித் துறை ஆணையாளர் மற்றும் செயலாளர் திருமதி வி. சந்திரலேகா, இ.ஆ.ப., அவர்களுடன் 21-4-88-ஆம் நாளன்று கலந்துரையாடினர்.

ஊரக வளர்ச்சித் தொடர்புள்ள அனைத்து அலுவலர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்கான பொறுப்பினை, ஹைதராபாத்திலுள்ள தேசிய ஊரக வளர்ச்சிப் பயிற்சி நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது. இந்நிறுவனம் இங்கிலாந்திலுள்ள சில பயிற்சி மையங்களின் ஒத்துழைப்பு மற்றும் கூட்டு முயற்சியுடன் பயிற்சியளித்து வருகிறது.

தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம் இங்கிலாந்து நாட்டின் ஒத்துழைப்புடன் பயிற்சி வசதிகள் செய்வது பற்றி அறிந்து கொள்ள இந்தக் குழுவினர் இந்தியா வந்துள்ளனர். இரு நாடுகளுக்கிடையே பயிற்சியாளர்களைப் பரிமாறிக்கொண்டு, பயிற்சியளிக்கும் திட்டம் பற்றியும் பரிசீலனை செய்வதும் இக்குழுவின் நோக்கமாகும்.

சென்னைக்கு அருகில் உள்ள காட்டாங்குளத்தூரில் மாநில ஊரக வளர்ச்சி மையத்திற்காகப் புதிய வளாகம் ஒன்று கட்டப்படுமென அரசுச் செயலாளர் திருமதி வி. சந்திரலேகா, குழுவினரிடம் பேசுகையில் தெரிவித்தார்.

அன்று மாலையில் இக்குழு சென்னைக்கருகில் ஆலந்தூரில் தற்போது செயல்பட்டு வரும் மாநில ஊரக வளர்ச்சி மையத்திற்குச் சென்று, பயிற்சி அளிப்பதற்காகச் செய்யப்பட்டுள்ள வசதிகளைப் பார்வையிட்டனர். மாநில ஊரக வளர்ச்சி மையத்தின் முதல்வர் மற்றும் துணை முதல்வருடன், பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளிப்பதன் நோக்கம், வசதிகள், ஆகியவற்றைப் பற்றி உரையாடினர்.

# இலவசப் பாடநூல் விநியோகம்

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் 1988-89 கல்வி ஆண்டில் 64 இலட்சம் மாணவ, மாணவியர்களுக்கு இலவசப் பாடநூல்களை அச்சிட்டு விநியோகம் செய்கிறது. 1 முதல் 8 வரையுள்ள வகுப்புகளுக்கான 318 லட்சம் பாடநூல்களும் பள்ளிகள் திறப்பதற்கு முன், பள்ளிகளின் தலைமையாசிரியர்களிடம் கிடைக்குமாறு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிறுவனத்தின் 10 மண்டல அலுவலகங்களிலிருந்தும் முதல் சுற்று விநியோகம் 2-5-1988 அன்று தொடங்கியது. தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு. அ. பத்மநாபன். இ.ஆ.ப., அவர்கள் சென்னை மண்டல விநியோகத்தை இந்நிறுவனத்தின் தரமணிக் கிடங்கில் கொடி அசைத்துத் தொடங்கி வைத்தார். காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், கும்மிடிப்பூண்டி மற்றும் பொன்னேரி ஆகிய நான்கு சரக பள்ளித் துணை ஆய்வாளர்களுக்குத் தேவையான இலவசப் பாட நூல்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இத்தொடக்க விழாவில் கல்வித்துறை சிறப்பு ஆணையர் மற்றும் செயலர், பள்ளிக் கல்வி இயக்குநர், ஆரம்பப் பள்ளிக் கல்வி இயக்குநர், தலைமை நிருவாக அலுவலர், அக்ரோ கார்கோ டிரான்ஸ்போர்ட் ஆகியோர் கலந்து கொண்டனர். (2-5-1988) அன்று மாநிலத்திலுள்ள 56 பள்ளித் துணை ஆய்வாளர்களுக்கு முதல் சுற்றில் 2, 4, 5, 7 மற்றும் எட்டாம் வகுப்புகளுக்கான இலவசப் பாடநூல்கள் அனுப்பி வைக்கப்பட்டன. இரண்டாம் சுற்றில் 20-5-1988, முதல் 6-6-1988 வரை புதிய கல்விக்கொள்கைக்கு இணங்க இயற்றப்பட்டுள்ள 1, 3 மற்றும் 6 வகுப்புகளுக்கான புதிய பாடநூல்களும் ஆங்கிலவழி மற்றும் சிறுபான்மை மொழி நூல்களும் அனுப்பி வைக்கப்படும் என்று தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு. இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப. தெரிவித்துள்ளார்.

# சென்னையில் கைத்தறி விழா

**சென்னை கைத்தறிக் கண்காட்சியில் 1985இல் 201 இலட்சம் ரூபாய்க்கும், 1986-இல் 225 இலட்சம் ரூபாய்க்கும் 1987-இல் 227 இலட்சம் ரூபாய்க்கும் கைத்தறித் துணி வகைகள் விற்பனையாகியுள்ளன.**




கைத்தறித் துணிகளின் பெரும் பகுதி விற்பனை, தீபாவளி மற்றும் பொங்கல் ஆகிய இவ்விரண்டு திரு விழாக் காலங்களில் நடைபெறுகிறது. பொங்கலுக்கு அடுத்து 9 அல்லது 10 மாதங்களுக்குப் பிறகுதான் தீபாவளி வருகிறது. பொங்கலுக்கும் தீபாவளிக்கும் இடைப்பட்ட காலத்தில் கைத்தறி ஜவுளிகளின் விற்பனை அதிக அளவில் நடப்பதில்லை.எனவே, கூட்டுறவுத் துறையில் செயல்படும் கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்புத் தருவதற்காகப் பொங்கலுக்கும், தீபாவளிக்கும் இடைப்பட்ட காலத்தில் தயாராகும் கைத்தறித் துணிகளின் விற்பனைக்குக் கைத்தறிக் கண்காட்சி ஏற்பாடு செய்வது மிக அவசியத் தேவையானது. இதனைக் கருத்தில் கொண்டே, 1950-ஆம் ஆண்டு தொடக்கத்தில் கைத்தறிக் கண் காட்சி தொடங்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் சென்னை மாநகரம், மாவட்டத் தலைநகர்கள் மற்றும் முக்கிய நகரங்களில் கைத்தறிக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

சென்னை கண்காட்சித் திடலில் 1985ஆம் ஆண்டில் ரூ. 201 இலட்சம் மதிப்புள்ள துணிவகைகளும், 1986-ஆம் ஆண்டில் ரூ. 225 இலட்சம் மதிப்புள்ள துணிவகைகளும் 1987-ஆம் ஆண்டில் ரூ. 227 இலட்சம் மதிப்புள்ள துணி வகைகளும் விற்பனையாயிற்று.

சென்னையில் 24.4.1988 அன்று 34-வது கைத்தறி விழாவினை மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. ராம்நிவாஸ்மிர்தா அவர்கள் தொடங்கி வைத்தார்.

தொடக்க விழாவிற்கு வந்தவர்களை, கோ-ஆப்டெக்ஸ் தனி அலுவலர் திரு ஏ.பி.பட்டிகர்,இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். ஆளுநரின் ஆலோசகர் திரு. ஏ. பத்மநாபன், இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்பதாக இருந்தார். மாண்புமிகு இந்தியப் பிரதமர் வருகை தொடர்பான அவசர அலுவல் காரணமாக அவர் வர இயலாததால் கைத்தறி, நெசவாளர் மற்றும் கதர்த்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு எம். அகமது, இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். அவர் ஆலோசகரின் செய்தியினைப் படித்தார். அச்செய்தியில் ஆளுநரின் ஆலோசகர் குறிப்பிட்டிருந்ததாவது:

''தமிழர் வாழ்வின் சமூக-பொருளாதார அமைப்பில் கைத்தறி மிக முக்கியமானதொன்றாகும்.

கைத்தறியை ஊக்குவிப்பதில் இந்தியாவிலேயே முதன்மையான மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகும்.

கைத்தறியை நல்ல முறையில் அமைத்துப் பாதுகாக்கவும், கைத்தறியின் முறையான வளர்ச்சிக்கு வழி காணவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

''நூலுக்கு மின்விசை'' என்ற திட்டத்தைத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 11 கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து தனி



யார் துறையில் இயங்கும் நெசவாளர்களுக்கு 5000 சிட்டை நூல் பேல்கள் 4.54 கிலோ கொண்ட கட்டு ஒன்றுக்கு ரூ.12 வீதம் 2-17 நெ.நூல் தவிர மற்ற எல்லா இரக நூலும் வழங்கப்படும். 2-17 நெ. நூல் விலை கட்டு ஒன்றுக்கு ரூ. 13.20 வீதம் குறைக்கப்பட்ட விலையில் வழங்கப்படும்.

கூட்டுறவு மற்றும் தனியார் துறையில் இயங்கும் நெசவாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் வழங்கும் விலையைவிட 10 சதம் குறைவாக விலையில் நிர்ணயித்து மாதம் ஒன்றுக்கு 25,000 கிலோ விஸ்கோஸ் நூலிழை கிடைக்க தென்னிந்திய விஸ்கோஸ் நிறுவனத்துடன் தமிழக அரசு ஓர் ஏற்பாடு செய்துள்ளது.

பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்வதற்குப் பெங்களூரிலுள்ள மத்திய பட்டு நிறுவனத்திடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சைனா கச்சாப் பட்டை வாங்க கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்குத் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட 5 டன் சைனா கச்சாப்பட்டைக் கோ-ஆப்டெக்ஸ் வாங்கியுள்ளது. அதனை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்ய ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஜனதா திட்டத்தின்கீழ் தமிழகத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ஜனதா இரகங்களை உற்பத்தி செய்து, ஒவ்வோர் இரகத்திற்கும் மத்திய அரசு நிர்ணயித்த விலையில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலமும், தமிழ்நாடு நுகர்வோர் அமைப்பின் மூலமும் சமுதாயத்தின் நலிந்த பிரிவினருக்கு விநியோகம் செய்யும் பணி கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஜனதா இரக உற்பத்தியில் 35,000 தறிகள் ஈடுபட்டுள்ளன. 31.3.1988 வரை 34.39 மில்லியன் சதுர மீட்டர் ஜனதா இரகத் துணிகளை உற்பத்தி செய்து விநியோகித்துள்ளது கோ-ஆப்டெக்ஸ்.

கூட்டுறவுத் துறையில் இயங்கும் நெசவாளர்களின் நலனுக்காகக் ''கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்'' என்ற நெசவாளர் நலத் திட்டம் ஒன்று தமிழகத்தில் 15.11.1975 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நெசவாளர் நலனில் தனக்குள்ள அக்கறையை வெளிப்படுத்தும் வகையில் ''மத்திய சிக்கன நிதித்திட்டம்'' என்ற ஒரு திட்டத்தை 1985-86 முதல் மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. அத்திட்டமும் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

கூட்டுறவுத் துறையில் செயல்படும் நெசவாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை ''ஹட்கோ'' நிதியுதவியுடன் மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்த உதவியைப் பயன்படுத்திக் கொள்வதில் தமிழகம் முதன்மையாக விளங்குகிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், நூல் மற்றும் துணியில் 160 கோடி ரூபாய் அளவிற்கு வியாபாரம் செய்துள்ளதையும், பிரதமச் சங்கங்களிலிருந்து செய்யப்படும் ஜவுளிக் கொள்முதலை அதிகரிக்கவும், சீரிய ஏற்பாடுகள் செய்திருப்பதையும் அறிய நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

விழாவில் கைத்தறி மற்றும் நெசவாளர் துறை இயக்குநர் திரு ஆர். சி.பாண்டா இ.ஆ.ப., அனகாபுத்தூர் திரு சி.இராமலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

கைத்தறி விழாவினை மாண்புமிகு மத்திய அரசின் ஜவுளித்துறை அமைச்சர் திரு.ராம்நிவாஸ் மிர்தா அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றுகையில்,

''தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களில் 65 சதவீதம் பேர் கூட்டுறவுத்துறையில் உள்ளனர். இந்தியாவிலேயே இது ஒரு சாதனையாகும்.

''தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து 6 மாதங்களுக்கு வேலை அளிப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டுக்கு ரூ. 9 கோடி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 15 ஆயிரம் நெசவாளர்கள் பயன் அடைந்துள்ளனர்.

''பட்டு நெசவுத்துறை மேம்பாட்டிற்காக நிதி கோரி ரூ. 700 கோடித்திட்டம் ஒன்று உலக வங்கியிடம் அளிக்கப்பட்டுள்ளது.

''கைத்தறி ஜவுளிகளுக்கு அரசு அளிக்கும் தள்ளுபடிச் சலுகையை நிறுத்தும் உத்தேசம் எதுவும் இல்லை.

''கச்சாப்பட்டு சீனாவிலிருந்து100 டன்கள் வரை இறக்குமதி செய்யப்படும். இதில் ஏற்கெனவே 24 டன் கச்சாப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. பட்டுநூல் விலை உயராமல்-நிலையாக இருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்'' என்றார்''

நிகழ்ச்சி முடிவில் திரு ஜே.சுத்தானந்தன் நன்றி கூறினார்.

—நமது செய்தியாளர்

# பட்டுக்கோட்டையில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர்

**''மனித சமுதாயம் நல்வாழ்வு பெற நமக்குள் ஒரு வித்தியாசமும் பாராட்டாமல், வேறுபாடுகளை மறந்து, இந்திய நாட்டின் குடிமகன் என்ற உயர்ந்த நோக்கத்துடன் செயல்பட்டால்தான் நாம் வெற்றி பெறமுடியும்''**



மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் 27-4-88 அன்று காலை பட்டுக்கோட்டைக்கு வருகை தந்தார். குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற பின்பு முதன் முதலாக வருகை புரிந்த அவருக்கு பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப் பட்டது.

மதுரையிலிருந்து ஹெலிகாப்டரில் காலை, 10.15 மணிக்கு, பட்டுக்கோட்டையில் உதவி ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைக்கப் பட்டிருந்த சிறிய விமான தளத்தில் வந்து இறங்கினார்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மா.இராமு, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றார்.

பின்னர் அங்கிருந்து காரில் புறப்பட்டு சரியாக 10.40 மணிக்குப் பயணியர் விடுதிக்குச் சென்றார். வழிநெடுகிலும் சாலைகளின் இரு மருங்கிலும் பொதுமக்கள், மாணவ, மாணவிகள் கூடிநின்று உற்சாகமான வரவேற்பு அளித்தனர்.

காலை 10.50 மணிக்கு குடியரசுத் தலைவர் அவர்கள் பயணியர் விடுதியில் தன்னுடைய நண்பர்களை மகிழ்ச்சியுடன் சந்தித்துப் பேசினார்.

திரு கிருஷ்ணமூர்த்தி அய்யர், திரு. சாமுவேல் பிள்ளை, திரு காசிநாதன், திரு சேக் தாவூது உட்பட அவரது நண்பர்கள் மேதகு குடியரசுத் தலைவரைச் சந்தித்து நலம் விசாரித்துக் கொண்டனர்.

''எனது சொந்த ஊருக்கு வந்ததில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்'' என்று மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் அங்கு கூடியிருந்தோரிடம் கூறினார்.

பின்னர் 11.45 மணிக்குத் தன்னுடைய குலதெய்வமான நாடியம்மன் கோவிலுக்குக் காரில் புறப்பட்டார். வழியெங்கணும் மக்களுக்கு வணக்கம் செலுத்திக் கொண்டே சென்றார். கோவில் வாசலில் பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்கப்பட்டார். கோயில் திருப்பணிக் குழுத் தலைவர் திரு வி. என். சாமிநாதன், பொதுத் துறை ஆணையர் மற்றும் செயலர் திரு கே.ஏ.சுந்தரம், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு கல்யாணசுந்தரம் இ.ஆ.ப., முதலியோர் வரவேற்றார்கள். இறைவழிபாடு முடித்தவுடன் அவருக்கு, கோவில் சார்பில் பரிவட்டம் கட்டப்பட்டது.

அதன் பிறகு பிற்பகல் 1.50 மணிக்கு, பெரிய தெருவில் அமைந்துள்ள தமது சொந்த வீட்டிற்குச் சென்று, ஓய்வெடுத்ததுடன் உறவினர்களையும் சந்தித்துப் பேசினார்.

பின்னர் பட்டுக்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டார்.

பட்டுக்கோட்டை அரசு மேல்நிலைப் பள்ளித் திடலில் நடைபெற்ற விழாவில் நகரசபை சார்பில்

தலைவர் திரு. விசுவநாதன் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்.

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் திரு ஜெயபாலும் பழைய மாணவர் கழகம் சார்பில் வழக்குரைஞர் திரு. குரு. மாணிக்கமும், நகர மக்கள் குழு சார்பில் திரு. கே. டி. பி. கதிரேசனும் வரவேற்பு இதழ் வாசித்து அளித்தனர்.

பின்னர் இராஜாமடத்திலுள்ள தமது பூர்வீக வீட்டை ஆரம்பச் சுகாதார நிலையம் அமைப்பதற்காக மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் நன்கொடையாக வழங்கினார். அரசு சார்பில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மா. இராமு, இ.ஆ.ப., அவர்கள் அதற்கான பத்திரத்தைப் பெற்றுக் கொண்டார்.

மேலும், பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வுகளில், முதல், இரண்டாம் நிலையில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு ரூ. 500 பரிசு அளிக்கும் வகையில் தமது தந்தையார் திரு. ராமசாமி அய்யர் பெயரில் ஒரு கல்வி அறக்கட்டளை அமைக்கப் பட்டுள்ளதாக மேதகு குடியரசுத் தலைவர் அவர்கள் அறிவித்தார். இதற்காக ரூ. 20,000 டெபாசிட் செய்யப்பட்டு அதன் வட்டியில் பரிசுகள் வழங்கப்படும். இந்த ஆண்டு வெற்றி பெறுபவர்களுக்காக ரூ. 2,000 ஐயும் மேதகு குடியரசுத் தலைவர் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. ஆசீர்வாதத்திடம் வழங்கினார்.

பின்னர் மேதகு குடியரசுத் தலைவர் பேசியதாவது:

''ஒரு மனிதனை உட்காரவைத்து, தொடர்ந்து அபிஷேகம் செய்தால் மூச்சுத் திணறி விடும். அதேபோன்று உட்காரவைத்துப்புகழாரம் சூட்டிக் கொண்டே இருந்தால் அப்போதும் மூச்சுத் திணறும். இந்த நிலையில் தான் நான் திணறிக் கொண்டிருக்கிறேன்.

''இந்த நகரில் வாழ்ந்து இந்தப் பள்ளிக்கூடத்தில் படித்து இன்று நாட்டுக்குப் பெருமை தரக்கூடிய பதவியில் இருப்பதை எனது கடமையாகக் கருதுகிறேன். எந்தக் கடமையானாலும் அதை நன்றாகச் செம்மையாகச் செய்வதுதான் என் பணி. அதே போன்று பள்ளி மாணவ, மாணவிகளாகிய நீங்கள் எந்தப் பணியில் ஈடுபட்டிருந்தாலும் அதனைச் செவ்வனே செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

''நமது நாடு வறுமைமிக்க நாடாகும். மக்கள்தொகைப் பெருக்கம் தான் அதற்குக் காரணமாகஉள்ளது. நம் நாட்டிலுள்ள வளம், பிற நாடுகளைவிடக் கூடுதலாக இருக்கின்றது. நமது நாடு விடுதலை பெறுவதற்கு முன்பு பசி, பஞ்சம் இருந்தது. அன்றைக்கு 5 கோடி டன் உணவுதான் உற்பத்தி ஆனது. ஆனால் இன்று நாம் 15 கோடி டன் உற்பத்தி செய்கிறோம். பட்டினிச் சாவு என்ற பெயரில்லாமல் நல்ல புகழைப் பெற்றுக் கொண்டு வருகிறோம். மேலும் உணவு உற்பத்திக்கு வழி வகை உள்ளது. நாம் நீர்ப் பாசனத் திட்டங்களைப் பெருக்கினால் உணவு உற்பத்தியினைப் பெருக்கலாம். கடலில் போய் விழுந்து வீணாகின்ற தண்ணீரை நாம் முழுமையாகப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

''காவிரிப் பிரச்சினை பற்றி இங்கு எல்லோரும் பேசினார்கள். காவிரிப் பிரச்சினையை நான் தீர்க்க முடியாது. அது பிரதமர் அவர்களால் தான் முடியும். நான் பிரதமருக்கு ஆலோசனை கூறலாம் என்றுதான் அரசியல் சட்டம் கூறுகிறது. அந்த வகையில் என்னால் இயன்ற அளவுக்கு பாரதப் பிரதமருக்கு ஆலோசனை கூறுவேன்.


''நம் நாட்டில் எழுபது சதவீத மக்கள் விவசாயத்தை நம்பி இருக்கிறார்கள். ஐம்பது சதவீத மக்களாவது தொழில்துறையில் ஈடுபட வேண்டும்.

''காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலும் துவாரகாவிலிருந்து அசாம் வரையிலும் பாரதியார் கூறியது போல நாம் அனைவரும் ஓர் குலம், ஓரினம் என்ற எண்ணம் வளர வேண்டும். விடுதலைப் போராட்டக் காலத்தில் அந்த உணர்வுதான் இருந்தது. வேறு எந்த வேறுபாடுகளையும் நாங்கள் பார்க்கவில்லை. நானும் ம.பொ.சியும் இரண்டு ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தோம். அப்போது ஆட்சிப்பணிக்கு வருவோம் என்று கனவில்கூட நினைக்கவில்லை.

''மனித சமுதாயம் நல்வாழ்வு பெற நமக்குள் ஒரு வித்தியாசமும் பாராட்டாமல், வேறுபாடுகளை மறந்து, இந்திய நாட்டின் குடிமகன் என்ற உயர்ந்த நோக்கத்தோடு செயல்பட்டால்தான் நாம் வெற்றி பெற முடியும்''

விழாவில், தமிழ் வளர்ச்சி உயர் நிலைக் குழுத் தலைவர் மாண்புமிகு ம.பொ.சி., திரு அன்பு வேதாசலம், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சுந்தர்ராஜ், எம்.பி. முதலியோர் பேசினார்கள்.

விழா முடிந்ததும் மேதகு குடியரசுத் தலைவர் திருச்சிராப் பள்ளிக்குப் புறப்பட்டுச் சென்றார்.



**தகவல்: சி. நடராஜன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**தஞ்சை மாவட்டம்**

# வீர வரலாறு படைத்த செண்பகராமன்

—ஜே. வி. சாமி

**பிறப்பால் கேரளராகவும், இனத்தால் தமிழராகவும், திருமணத்தால் வட இந்தியராகவும், வாழ்க்கை நெறியால் உலகக் குடிமகனாகவும் விளங்கிய மாவீரன் செண்பகராமனின் வரலாறு இந்தியத் திருநாட்டுக்கே பெருமை சேர்க்கவல்லதாகும்.**



ஒருமைப்பாட்டை உலகிற்கே பறைசாற்றி இந்திய விடுதலைக்காக அயராது பாடுபட்ட வீரர்களுள், திலகமாக விளங்கியவர் மாவீரன் செண்பகராமன்.

திருவனந்தபுரத்தில் புத்தன் சந்தை என்ற ஊரில் சேரமன்னர் வழியில் வந்த சின்னச்சாமிபிள்ளை-நாகம்மா தம்பதியரின் மகனாக 15.9.1891இல் தோன்றியவர் செண்பகராமன்.

•

திருவனந்தபுரத்தில் மகாராஜா பள்ளியில் ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே ஆங்கில அரசை எதிர்த்துப் புரட்சியில் இறங்கினார் செண்பகராமன். சக மாணவர்களை ஒன்று சேர்த்து, வெள்ளையர்களுக்கு எதிரான முழக்கங்களை எழுப்பிப் போராட்டத்தைத் துவக்கிவைத்தார் அவர்.

சுதந்திர வேட்கை மிக்க செண்பகராமனை உலகம் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. அவரது ஒளிமிக்க கண்கள் - வீரமிக்க தோற்றம்-உண்மை நிறைந்த செயல்கள் சர் வில்லியம் ஸ்டிரிக் லாண்ட் என்ற ஆங்கிலேயரைக் கவர்ந்தன.

திருவனந்தபுரத்தில் மிருக வைத்தியராகப் பணி ஆற்றிவந்த அவர், உண்மையில் ஜெர்மன் நாட்டின் உளவாளி. அவர், செண்பகராமனை அழைத்துத் தனது திட்டங்களை எடுத்துக் கூறினார். அந்தத் திட்டங்கள் செண்பகராமனைக் கவர்ந்தன.

அந்த நேரத்தில், ஊரைவிட்டு எங்கும் போகக்கூடாது என்று ஆங்கில அரசு, செண்பகராமனுக்குத் தடை விதித்திருந்தது. போலீஸ் கண்காணிப்பும் அதிகமாக்கப்பட்டிருந்தது. என்றாலும் போலீஸை ஏமாற்றிவிட்டு, சர் வில்லியத்துடன் திருவனந்தபுரத்தை விட்டு நீங்கினார் செண்பகராமன்.

இலங்கைக்குச் சென்று, அங்கிருந்து ஒரு கப்பலில் இருவரும் இத்தாலி நாட்டுக்குச் சென்றனர். அப்போது செண்பகராமனுக்கு வயது 15 தான்.

அவர் தலைமறைவாகிய செய்தி இந்தியா முழுதும் பரபரப்பை ஏற்படுத்தியது. அவரது வீட்டிற்குப் பலத்த காவல் போடப்பட்டது. உறவினர்களை எல்லாம் அடிக்கடி விசாரணை செய்து, தொல்லை தந்தது ஆங்கிலேய அரசு.

இத்தாலிக்குச் சென்ற செண்பகராமன் இலக்கியம், விஞ்ஞானம், ஆகிய துறைகளைப் பயின்றார். இத்தாலி மொழியையும் கற்றார். மேலும், பல மொழிகளையும் கற்

றார். பின்னர் சுவிட்சர்லாந்துக்குச் சென்று அங்கு கல்லூரியில் பயின்று சிறந்த மாணவராக விளங்கினார். பொறியியலில் தேர்ச்சி பெற்று, டாக்டர் பட்டம் பெற்றார்.

சுவிட்சர்லாந்தில் அவர் அவ்வப்போது ஆற்றிவந்த சொற்பொழிவு அனைவரையும் கவர்ந்தது. இந்திய நாட்டில் அந்நிய ஆட்சியினர் நடத்திய அடக்குமுறைகளையும் கொடுமைகளையும் கனல்தெறிக்கும் விதத்தில் எடுத்துச் சொன்னார். இந்திய மக்களின் பால் சுவிஸ் மக்களின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற முயன்றார்.

பின்னர் ஜெர்மன் நாட்டின் தலைநகரான பெர்லின் சென்று கல்லூரியில் பயின்று பொறியியல் துறையில் டாக்டர் கலாநிதி பட்டம் பெற்றார்.

இந்திய நாட்டின் போராட்டம் குறித்து ஜெர்மன் நாட்டின் பல பகுதிகளிலும் சொற்பொழிவாற்றி வந்தார். அதன் விளைவு அந்த நாட்டிலே இந்திய ஆதரவு சர்வதேசக் குழு என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டது. அதன் தலைவராகப் பொறுப்பேற்று, அரும்பாடு பட்டார் செண்பகராமன்.

ஐரோப்பிய நாடுகளிடையே இந்தியாவைப் பற்றிப் பரவியிருந்த தவறான கருத்துக்களை நீக்கினார். இந்தியாவின் நன்மைக்காகப் பாடுபட்டார். தமது எண்ணங்களைத் தக்கவிதத்தில் ஐரோப்பிய மக்களுக்குத் தெரிவிப்பதற்காக Pro-India என்ற பத்திரிகை ஒன்றைத் தொடங்கினார். ஆங்கிலேய அரசின் பொய்ப் பிரச்சாரங்களை இந்தப் பத்திரிகையின் மூலம் முறியடித்தார். அதன் காரணமாகக் கோபமுற்ற ஆங்கில அரசு, செண்பகராமனின் பெயர் இந்திய நாட்டில் மட்டுமல்ல பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் அனைத்திலும் பரவவிடாமல் தடைசெய்தது. அதனால், இந்திய மக்கள் செண்பகராமன் ஆற்றிவரும்எந்தத்தொண்டு பற்றியும், போராட்டம் பற்றியும் அறிந்துகொள்ளும் வாய்ப்பே இல்லாமல் போய்விட்டது.

செண்பகராமனின் பெருமையையும் அறிவாற்றலையும் அறிந்துகொண்ட கெய்சர் சக்கரவர்த்தி, அவரைத் தமது அந்தரங்க நண்பனாக நியமித்துக்கொண்டார். சிறிது சிறிதாக அவரது பெருமை ஜெர்மன் முழுதும் பரவியது. அவர் கலந்து கொள்ளாத அரசாங்க விழாவோ,விருந்தோ இல்லை என்ற நிலை உருவாகியது. அவரது திறமையைப் பாராட்டி ஜெர்மன் அரசு வொன் (VON) என்ற மிகச் சிறந்த பட்டத்தை அளித்துச் சிறப்பித்தது.

## தேசியத்தில் சிந்தனை செலுத்திய வீரர்



நாடு கடத்தப்பட்டவர்களில் ஒருவரான டாக்டர் செண்பகராமன் பிள்ளையை நான் சந்தித்தேன். அவர் தேசியம் ஒன்றில் மட்டுமே தமது சிந்தனையைச் செலுத்தினார். நாஜிகளுடன் கலந்து, சற்றும் பயமின்றிப் பணிபுரிந்த ஒரு சில இந்தியர்களில் டாக்டர் பிள்ளை முதன்மையானவர்.

பண்டித ஜவஹர்லால் நேரு
(Glimpses of World History
என்னும் நூலில்)

இந்தியா மட்டுமல்ல உலகில் அடிமைப்பட்டுக் கிடக்கும் எந்த நாடாக இருந்தாலும் சரி, அதன் அடிமைத்தளை அகற்றப்படவேண்டும் என்ற உன்னதமான கொள்கைக்குச் சொந்தக்காரராகத் திகழ்ந்த செண்பகராமன், League of oppressed, people of the orient ship என்னும் சங்கங்களைத் தொடங்கிப் பாடுபட்டார். இவற்றின் கிளைகளை நிறுவுவதற்காக பர்மா, சயாம், சீனா, எகிப்து, அமெரிக்கா, துருக்கி, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சென்றார்.

1930ஆம் ஆண்டில் செண்பகராமன் இந்திய வர்த்தக சங்கத்தின் பிரதிநிதியாக நியமிக்கப் பெற்றார். அந்தச் சமயத்தில் அவர், திருமதி காமா என்னும் வீராங்கனையின் மகளான லட்சுமிபாயைத் திருமணம் செய்துகொண்டார்.

வியத்நாம் நகரில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் செண்பகராமன் கலந்து கொண்டார். அந்த மாநாட்டில் பங்கு பெற்ற நேதாஜி சுபாஷ் சந்திர போஸுடன் செண்பகராமனுக்கு நெருக்கம் ஏற்பட்டது.

ஆப்பிரிக்கக் கண்டத்தில் தலைகாட்டிய நிறவெறி, செண்பகராமனின் உள்ளத்தில் போராட்டத்தை உருவாக்கியது. இனவெறியை ஒழிப்பதற்காக கலிபோர்னியா சென்றார். நிறவெறிக் கொடுமைக்கு ஆளான நீக்ரோ மக்களுக்கு நீதி கிடைக்கப் பாடுபட்டார். அதன் பொருட்டு அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சனைச் சந்தித்தார்; தனது சங்கத்தின் இலட்சியங்களை எடுத்துச் சொன்னார்.

ஆனால் அமெரிக்க அதிபர், ''எங்கள் நாட்டு மக்களின் விருப்பத்திற்கு மாறாக என்னால் நடக்க இயலாது'' என்று சொல்லவே, செண்பகராமன் அமெரிக்க நாடு முழுதும் அலைந்து, மனித உரிமைகள் குறித்து வீர முழக்கம் செய்தார்.

நிறவெறியர்கள், 'இந்தியாவைச் சேர்ந்த ஒருவர், நமதுநாட்டிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடுவதா' என்று வெகுண்டனர்; செண்பகராமன் மீது ஆத்திரம் கொண்டனர்.

இந்நிலையில், செண்பகராமனின் சொற்பொழிவினால் கவரப்பட்ட நீக்ரோ மக்கள்,அவரைத் தங்களது தலைவராகக் கருதினார்கள். இந்த நிலை வேறு, அமெரிக்க மக்களை மிகவும் ஆத்திரத்துக்கு ஆளாக்கியது.

ஆங்கில அரசும் அவருக்குத் தொல்லை தரத் தொடங்கியது. அமெரிக்கா, பிரிட்டன் இருநாடுகளையும் சேர்ந்த காவல்துறையினரும் ஒற்றர்களும் செண்பகராமனைப் பிடிப்பதற்குத் திட்டம் தீட்டினர். இந்த உண்மையை அறிந்து கொண்ட அவர் மாறு வேடம் அணிந்து, வேறு பெயரில் 'பாஸ்போர்ட்' பெற்று, அமெரிக்காவை விட்டு வெளியேறினார்.

ஆப்பிரிக்காவை அடைந்தார். அங்கேயும் அவரது இலட்சியப்பணி தொடங்கியது. அங்கு அடிமைப்பட்டு அவதியுற்ற மக்களின் விடுதலைக்காகப் பாடுபட முனைந்தார். செய்தியை அறிந்த ஆங்கில அரசு, அவரை எப்படியாவது கைது செய்துவிட வேண்டும் என்பதில் தீவிரம் காட்டியது.

'சண்பகராமனை உயிருடனோ பிணமாகவோ கொண்டு வருபவருக்கு ஒரு லட்சம் பவுன் பரிசளிக்கப்படும்' என்று அறிவித்தது ஆங்கில அரசு. உலகத்தில் உள்ள பல நாடுகளிலும் இந்த அறிவிப்பை ஏந்திய சுவரொட்டிகள் ஒட்டப்பட்

டன. ஒற்றர்கள் பலர் அவரை வட்டமிட்டனர்; வலையில் வீழ்த்தத் திட்டமிட்டனர். மதகிரி என்ற பெண் ஒற்றர், தனது திறமையை எல்லாம் பயன்படுத்திப் பார்த்தும், முடியவில்லை. செண்பகராமன் தப்பித்து பெர்லின் சென்றுவிட்டார்.

நமது இந்திய நாட்டில் அண்ணல் காந்தியடிகளின் தலைமையில், விடுதலைக்காக அறப்போர் நடைபெற்றது; என்றாலும், ஒரு சிலர் தீவிரவாதிகளாகத் திகழ்ந்து, வெள்ளையரைத் தாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். அத்தகைய தீவிரவாதிகளுக்கு, செண்பகராமன் ஜெர்மனியிலிருந்தவாறே ஆயுத உதவிகளை அனுப்பி வந்தார்.

இந்திய ஆதரவு சர்வதேச சங்கத்தின் உறுப்பினர்களையும் ஆங்காங்கே சிதறிக் கிடந்த இந்தியர்களையும் ஒன்று திரட்டி இந்தியன் நேஷனல் வாலண்டியர் கோட்ஸ் I. N. V. என்ற படை உருவாக்கப்பட்டது. இந்தப் படை, ஜெர்மன் அரசின் உதவியுடன் இந்தியாவை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்ற உடன்பாடு, கெய்ஸரால் நிறைவேற்றப்பட்டது. இந்தப் படையின் தலைமைப் பொறுப்பைச் செண்பகராமன் ஏற்றார். இந்தப் படை வெற்றி பெற்றால்-இந்தியா விடுதலை பெற்றால்-அதன் முதல் குடியரசுத் தலைவராக செண்பகராமன் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்பதும் கெய்சரின் எண்ணம்.

1914ஆம் ஆண்டில் முதல் உலகப் போர் தொடங்கியது. பிரிட்டனுக்கும் ஜெர்மனுக்கும் கடும்போர் நிகழ்ந்தது.

செப்டம்பர் 24ஆம் நாள், புகழ் பெற்ற எம்டன் என்னும் நீர் மூழ்கிக்கப்பல் சென்னைக்கு வந்து, செயின்ட் ஜார்ஜ் கோட்டையைத் தாக்கிச் சென்று, ஆங்கில அரசை கதி கலங்கச் செய்தது. மாவீரன் செண்பகராமன்தான் அந்தக் கப்பலை இயக்கி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்க செய்தி. சூயஸ் கால்வாயில் நின்று கொண்டிருந்த பிரிட்டிஷ் கப்பல்கள் பலவற்றை நிர்மூலமாக்கிவிட்டே அவர் சென்னைக்கு வந்தார்.

சென்னையில் தாக்குதல் நடத்திய செண்பகராமன் அடுத்து பாண்டிச்சேரி சென்றார். அங்கே, ஏற்கனவே கிடைத்த தகவலின்படி, துறைமுகத்தில் காத்துக் கொண்டிருந்த சுத்தானந்த பாரதியைச் சந்தித்து, அவரிடம் கைப்பெட்டி ஒன்றைக் கொடுத்து, சுப்பிரமணிய சிவாவிடம் சேர்க்கும்படிதெரிவித்து ''ஜெய்ஹிந்த்'' என்று முழக்கமிட்டார். பின்னர் சிங்கப்பூர் நோக்கிச் சென்றார். துணிச்சல்மிக்க இந்தக் காரியங்களை அவர் ஆற்றும்போது அவருக்கு வயது 23 தான்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை முறியடிப்பதற்கு மெசபடோமியா யுத்தகளத்தைப் பயன்படுத்தினார் செண்புகராமன். அவரது I.N.V யின் ஆற்றலைக்கண்டு ஆங்கிலேயர்கள் அடைந்த அச்சத்திற்கு அளவே கிடையாது.

முதலாம் உலகப்போர் 4ஆண்டுகள் நடைபெற்றது. இறுதியில் ஜெர்மன் தோல்வியுற்றது. போர் நிறுத்தப்பட்டு ஒப்பந்தம் ஏற்பட்டது. வெர்சேல்ஸ் ஒப்பந்தம் என்ற பெயர் பெற்ற அந்த ஒப்பந்தத்தில் பல சரத்துக்கள் இருந்தன. அதில் ஒன்று, செண்பகராமனை பிரிட்டனிடம் ஜெர்மன் அரசு ஒப்படைக்க வேண்டும் என்பதும் ஆகும்.



மாவீரன் செண்பகராமன் மனைவி லட்சுமிபாயுடன்

ஆனால் இந்த சரத்தை ஜெர்மன் அரசு ஏற்க மறுத்துவிட்டது.

ஜெர்மன் அரசு தோல்வியைத் தழுவினாலும் கூட அது இந்திய சுதந்திரப் போருக்கு எந்த விதத்திலும் தோல்வியை அளிக்கவில்லை. மாறாக, புதிய ஆற்றலையும், புத்துணர்வையும் தோற்றுவித்தது. செண்பகராமனின் வழியைப் பின்பற்றி I.N.A. என்ற படையை நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் உருவாக்குவதற்கு அடித்தளம் அமைத்துத் தந்தது.

செண்பகராமன் ஜெர்மனியில் வாழ்ந்த காலத்தில் அங்குச் சென்றிருந்த இந்தியத் தலைவர்கள் பலர் அவரது இல்லத்திலேயே தங்கினர் என்பது குறிப்பிடத்தக்க செய்தி.

பண்டித ஜவஹர்லால்நேரு, மோதிலால் நேரு, சுபாஷ் சந்திர போஸ், வித்தல்பாய் படேல், தாதாபாய் நௌரோஜி ஆகியோர் செண்பகராமனின் ஜெர்மன் இல்லத்தில் விருந்தினராகத் தங்கியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

ரஷ்யப்புரட்சியை உருவாக்கிய மாவீரன் லெனின் அவர்களையும் செண்பகரர்மன் அவர்கள் சந்தித்திருக்கிறார். விடுதலை இயக்கங்களுக்கு லெனின் ஆதரவளித்து வந்ததனால், அவரைப் பாராட்டுவதற்கு ஜெர்மனியிலிருந்து ஒருகுழு சென்றது. அதில் முதன்மையாக இடம் பெற்றவர் செண்பகராமன் ஆவார்.

ஜார் ஆட்சிக்கு எதிராகப் புரட்சி செய்து ஜெனீவாவில் தலைமறைவாக இருந்த லெனினை, செண்பகராமன் பலமுறை ரகசியமாகச் சந்தித்ததுண்டு.

காபூலில் செண்பகராமன் முதல் சுதந்திர அரசை அமைத்தபோது, லெனின் அதற்கு வாழ்த்துச்செய்தி அனுப்பியிருந்தார் என்றால் அவரது உள்ளத்தில் செண்பகராமன் மாபெரும் இடத்தைப் பிடித்திருந்தார் என்பது தெளிவு.

ஜெர்மனியில் இருந்த காலத்தில் செண்பகராமனுக்கும் நாஜிக்களின் தலைவரான அடால்ஃப் ஹிட்லருக்கும் தொடர்பு ஏற்பட்டது. இருவரும் நெருங்கிப் பழகினர்; நண்பர்களாகத் திகழ்ந்தனர்,

ஒரு நாள் உரையாடிக் கொண்டிருந்தபோது ஹிட்லருக்கும், செண்பகராமனுக்கும் கருத்து மோதல் ஏற்பட்டது.

இந்தியத் திருநாட்டையும் இந்தியப் பெருமக்களையும் பற்றி ஹிட்லர் இழிவாகப் பேசினார்.

''இந்தியர்களுக்கு, சுதந்திரம் பெறுவதற்குரிய திறமையோ, தகுதியோ கிடையாது'' என்று கூறினார் ஹிட்லர்.

உடனே கொதித்தெழுந்த செண்பகராமன், இந்திய நாட்டின் பரம்பரைப்பெருமை குறித்தும் இந்தியத் தலைவர்களின் மகத்தான திறமை குறித்தும் ஒரு நீண்ட சொற்போர் புரிந்தார். அவரது முழக்கத்தைக் கேட்ட ஹிட்லர், தனது தவற்றை உணர்ந்து, மன்னிப்புக் கேட்டார்.

''வெறும் வாயளவில் மன்னிப்புக் கேட்டால் போதாது; எழுத்து வடிவில் மன்னிப்புக் கேட்கவேண்டும்'' என்று தெரிவித்தார் செண்பகராமன். வேறு வழியின்றி ஹிட்லர் எழுத்துமூலம் தமது மன்னிப்பைக் கேட்டுக் கொண்டார். உலகத்தையே நடுங்க வைத்த சர்வாதிகாரி ஹிட்லரையே நடுங்க வைத்த பெருமை - அடிபணிய வைத்த பெருமை மாவீரன் செண்பகராமனுக்குக் கிடைத்தது.

இந்த நிகழ்ச்சி நாஜியர்களைக் கொதிப்படையச் செய்தது. எவருக்கும் தலைவணங்காத நமது தலைவரான ஹிட்லரே செண்பகராமனிடம் தலைவணங்க நேர்ந்துவிட்டதே என்று எண்ணி எண்ணி நொந்தனர். செண்பகராமனிடம் வெறுப்பைச் சிந்தினர். அவரை வஞ்சிக்கத் திட்டமிட்டனர். அவர் கலந்து கொண்ட அரசாங்க விருந்து ஒன்றில், அவரது உணவில் நஞ்சுகலந்து விட்டனர். அது ஆளை உடனடியாகக் கொல்லும் நஞ்சு அல்ல. மெதுமெதுவாகக் கொல்லும் தன்மை கொண்ட நஞ்சு. இந்த நஞ்சு தனது வேலையைச் செய்யத் தொடங்கிற்று. மாவீரன் செண்பகராமனை அது தாக்கியது. அதனால் தனது மிடுக்கையும் பொலிவையும் சிறிது சிறிதாக இழந்து, உடல்நலம் குன்றிப் படுக்கையில் வீழ்ந்தார் அவர்.

ஹிட்லர் செய்த வஞ்சம்தான் தன்னைப் படுத்த படுக்கைக்கு ஆளாக்கிவிட்டது என்பதை அவர் நன்கு உணர்ந்தார். தனது ஆயுட்காலம் குறுகிவிட்டது என்பதையும் அவர் புரிந்து கொண்டார். மனைவி லட்சுமிபாயைத் தன்னருகில் அழைத்து, தனது இறுதி இலட்சியத்தை எடுத்துரைத்தார்.

''இந்திய நாட்டின் விடுதலையைக் காணாமலே என் ஆவி பிரியப் போகிறது. என்றாலும் நான் இறந்த பின்னர் எனது சாம்பலைப் பாதுகாத்து வைத்து, எனது பிறந்த நாட்டுக்கு எடுத்துச் சென்று, ஒரு பகுதி சாம்பலை என் அன்னையின் சாம்பல் சங்கமமான கரமணை ஆற்றில் கரைத்துவிடவும். மறுபகுதியை நாஞ்சில் நாட்டின் வளமிக்க வயல்களில் தூவிவிடவும். அதுமட்டுமல்ல. பிரிட்டிஷ் அரசை நான் எதிர்த்துப் போராடியது போலவே, எனது மறைவிற்குப் பின்னர் நீயும் போராட்டத்தைத் தொடரவேண்டும்.''

கணவரின் வேண்டுகோளை நிறைவேற்ற ஒப்புக்கொண்டார் லட்சுமிபாய். என்றாலும் அவர் மரணமடையப் போகிறாரே என்பதை எண்ணியபோது லட்சுமிபாயின் கண்களில் நீர் ஆறாகப் பெருக்கெடுத்தது.

1934ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் நாளன்று, மாவீரன் செண்பகராமனின் இன்னுயிர், அவரது உடலை விட்டு நீங்கியது.

செண்பகராமனுக்குப் பிடித்தமான லில்லி மலர்களை நீலநிற ரிப்பனில் கட்டி, அவரது உடலின்மீது வைத்து அஞ்சலி செலுத்தினார் லட்சுமிபாய். தனது கணவரின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவர் கதறியழுத காட்சி நாஜிகளைக் கூடக் கலங்க வைத்துவிட்டது.

சடலத்திற்குத் தீ மூட்டப்படும் போது லட்சுமிபாய் அழுத அழுகை இருக்கிறதே அதை வருணிக்க வார்த்தையே கிடையாது.

ஒரு மனைவி தன் கணவனை இழந்து விட்டாளே என்று எண்ணி லட்சுமிபாய் அழவில்லை. இந்திய மாதா தன் வீரப்புதல்வர்களில் ஒருவரை இழந்துவிட்டாளே என்றுதான் அவர் அழுதார்.

கணவனின் மறைவு லட்சுமிபாயை வருத்தியது என்றாலும் கடமை அவருக்குத் தெம்பை ஊட்டியது. முக்கியமான ஆவணங்களை எல்லாம் எடுத்துப் பதுக்கி வைத்துவிட்டார் லட்சுமிபாய். அவர் எதிர்பார்த்தபடியே நாஜிக்கூட்டம் அவரது வீட்டுக்குள் புகுந்து சோதனையிட்டது. ஹிட்லரின் கைப்பட எழுதிய அந்த மன்னிப்புக் கடிதத்தைத் தேடியது; அது அவர்களுக்கு அகப்படவே இல்லை.

அபலை லட்சுமிபாயையும் விட்டு வைக்கவில்லை நாஜியர்கள். அவரையும் கொடுமைப்படுத்தினர். அவரை மனநல மருத்துவமனையில் சேர்த்தார்கள். மாவீரனின் மனைவியான அவர்; மருத்துவ மனையிலிருந்து தப்பித்து, ஜெர்மனியை விட்டே புறப்பட்டார்; இத்தாலிக்குச் சென்று, பின்னர் ஸ்பெயின் நாட்டை அடைந்து, அங்கிருந்து பம்பாய் வந்து சேர்ந்தார். அத்தனை கஷ்டங்களிலும் தன் கணவரின் சாம்பலையும் விடாது கொண்டு வந்தார்.

செண்பகராமனின் மறைவுக்குப் பின்னர் இந்திய ஆதரவு சர்வதேச சங்கம் வலுவிழந்து போயிற்று. அதன் உறுப்பினர்கள் ஆளுக்கொரு பக்கமாகப் பிரிந்து சென்று விட்டனர்.

1936இல் பம்பாயை அடைந்தார் லட்சுமிபாய். பல்லாண்டுக்காலம், தமது கணவரின் நினைவிலேயே வாழ்க்கையைக் கழித்தார். தன் கணவரின் கடைசி விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அரும்பாடுபட்டார்; என்றாலும் காலம் கனியவில்லை.

1966 செப்டம்பர் திங்களில் அதாவது கணவர் மறைந்த 32 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தியாவின் முதல் போர்க்கப்பல் 'ஐ.என்.எஸ். டில்லியில்' செண்பகராமனின் சாம்பலை எடுத்துக் கொண்டு எர்ணாகுளத்திற்குச் சென்று, சாம்பலின் ஒரு பகுதியைக் காரணை ஆற்றில் கரைத்தார்; மற்றொரு பகுதியை நாஞ்சில் நாட்டு வயல்வெளிகளில் தூவிவிட்டார்.

ஒரு போர்க்கப்பலில் தாயகம் திரும்பவேண்டும் என்ற இலட்சியத்துடன் திகழ்ந்த செண்பகராமனின் சாம்பலை, ஒரு போர்க்கப்பலின் வாயிலாக எடுத்துவந்து, அவரது ஆசைஎ்ய நிறைவேற்றினார் லட்சுமிபாய்.

அவர், தம் கணவரின் விருப்பத்தை நிறைவேற்றிவிட்டு, மறுபடியும் பம்பாய் சென்று அங்கேயே வாழ்க்கை நடத்திவந்தார். ஒரு மாவீரனின் மனைவி மிகவும் கஷ்டஜீவனம் நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

1972ஆம் ஆண்டு. பம்பாயில் லட்சுமிபாய் வசித்து வந்த வீட்டின் கதவு இரண்டு மூன்று நாட்களாகத் திறக்கப்படாமலிருந்தது. அக்கம் பக்கத்தில் வசித்தவர்கள் காவல் துறையினருக்குத் தகவல் தந்தனர்.

காவல்துறையினர் வந்து, கதவை உடைத்து உள்ளே சென்றனர். அப்போது லட்சுமிபாய் மயக்கமுற்ற நிலையில் கிடந்தார். அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். அங்கு சிகிச்சை பலனளிக்காமல், அவர் மரணம் எய்தினார்.

அவரால் பாதுகாத்து வைக்கப்பெற்றிருந்த ஆவணங்கள் பம்பாய் காவல் துறையினரால் எடுத்துச் செல்லப்பட்டன. பின்பு அவை டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அந்த ஆவணங்கள் மாவீரனின் வீரவாழ்க்கையை உலகுக்கு எடுத்துச் சொல்லும் பெட்டகங்களாகத் திகழும் என்பது திண்ணம்.

# தருமபுரி மாவட்டத்தில் ஆளுநரின் ஆலோசகர்




மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ.பத்மநாபன் இ.ஆ.ப., அவர்கள் (25.4.88) தருமபுரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வளர்ச்சிப் பணிகளைப் பார்வையிட்டார்.

ஓசூரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள போக்குவரத்து சிக்னல் விளக்கினைத் துவக்கி வைத்தார். ஓசூர் பேரூராட்சியின் குடிநீர்த் திட்டப் பணிகளில் ஒரு பகுதியாக, பேரண்டப்பள்ளியில் ஆழ்துளைக் கிணறு தோண்டப்படும் பணியைப் பார்வையிட்டார். இப்பணியின் செலவுக்காக ரூபாய் 39,000க்கு அந்த இடத்திலேயே அனுமதி வழங்கினார்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒன்னல்வாடியில் நடைபெற்று வரும் அகர்பத்தி தயாரிப்புத் தொழிற் கூடத்தைப் பார்வையிட்டார். மேட்டரையில் தேசிய ஊரகவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக் கூடத்தைப் பார்வையிட்டார். உதயாண்டாப்பள்ளியில் ஆதிதிராவிடர்களுக்கெனக் கட்டி முடிக்கப்பட்டுள்ள 20 தொகுப்பு வீடுகளை ஆலோசகர் துவக்கி வைத்தார். கதர்கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் வெள்ளிச்சந்தையில் நடத்தப்பட்டு வரும் கையினால் தயாரிக்கப்படும் காகிதத் தொழிற் கூடத்தைச் சுற்றிப் பார்த்தார். குத்தாள ஹள்ளியில் ஆதிதிராவிடர்களுக்கென, கட்டி முடிக்கப்பட்டுள்ள 20 தொகுப்பு வீடுகளைப் பார்வையிட்டார். எஸ்.கொள்ளப்பட்டியில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ள பல்நோக்கு மையக் கட்டடத்தைத் துவக்கி வைத்தார்.

அதியமான் கோட்டையில் சமூக நலத்துறையின் மூலம் பெண்களால் நடத்தப்படும் காலணி தைக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தைப் பார்வையிட்டார். பாகலஹள்ளியில் ஆதிதிராவிடர்களுக்கெனக் கட்டி முடிக்கப்பட்டுள்ள 20 தொகுப்பு வீடுகளையும், அதே காலனியில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பல்நோக்கு மையக் கட்டடத்தையும் மற்றும் மேல் நிலைநீர்த்தேக்கத் தொட்டியையும் திறந்து வைத்தார்.

பின்னர் தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாவட்ட அனைத்துத்துறை அலுவலர்களின் கூட்டத்தில் கலந்து கொண்டு வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார். அதன் பின் செய்தியாளர்களிடம் பேசும்போது,

''முதல் கட்டமாக நூறு கோடி ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்டுள்ள ஹொகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் திட்டப்பணிகள் தயார் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும்! இத்திட்டத்தின் மூலம் தருமபுரி மாவட்டத்தில் உள்ள மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் பயன்பெறுவார்கள்'' என்று தெரிவித்தார்.

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 50 ஆழ்துளைக் கிணறுகள் போட்டுள்ளதாகவும், மேலும் 200 ஆழ்துளைக் கிணறுகள் ஜூலை மாதத்திற்குள் முடிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

''பெண்ணாகரம் மற்றும் ஊத்தங்கரைப் பேரூராட்சியின் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிவடைந்துவிட்டதாகவும், மேமாதம் முதல் வாரத்தில் இப்பணிகள் செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்படும்'' என்றும் தெரிவித்தார்.

''வறுமையைப் போக்கும் திட்டப்பணிகளான தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்துக்கு ரூபாய் 2.6 கோடியும், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்துக்கு ரூபாய் 1.7 கோடியும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்துக்கு ரூபாய் 2.03 கோடியும் இம்மாவட்டத்திற்காக 1988-89ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளன.''

''இதன் மூலம் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஆதிதிராவிடர்களுக்கென 250 தொகுப்பு வீடுகளும், 97 சமுதாய நலக்கூடங்களும் கட்டப்படும்.

''இம்மாவட்டத்தில் மூன்று கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு காமராஜர் புதிய ஆதிதிராவிடர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 100 தீப்பிடிக்காத வீடுகள் கட்டப்படும் உடல் ஊனமுற்றோர் நலனுக்காக ரூபாய் ஒரு இலட்சம் இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை உடல் ஊனமுற்றோர் நலனுக்காகச் செலவிடப்படும்'' என்றார்.

''மாநிலத்தில் மொத்தம் உள்ள 38,000 நீர்ப்பாசன ஏரிகளைத் தூர் எடுப்பதற்காகவும், செப்பனிடுவதற்காகவும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு நிதி நிறுவனங்களின் உதவியுடன் செயல்படுத்தப்படும்.

''கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் இம்மாவட்டத்தில் 5 இடங்களில் பாலியஸ்டர் நூல் நூற்கும் நூற்பு ஆலைகள் நிறுவப்படும். ஒவ்வொரு ஆலையும் ரூ. 1,25,000 மதிப்புடையவையாகும். இதன்மூலம் 300 நபர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். இம்மாவட்டத்தில் 6 பட்டு நெசவு நூற்பு மையங்கள் இந்த நிதி ஆண்டில் நிறுவப்படும்.

''மலைவாழ் பழங்குடியினர், ஆதிதிராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோர்களுக்கு இலவசப் புத்தகங்கள் மற்றும் இரண்டு சீருடைகள், பள்ளி திறந்த உடன் கிடைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன'' என்று கூறினார்.

**மு. பிச்சைப்பா**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தருமபுரி.**

# திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகள்

பருவ மழை பொய்த்தமையால் மாநிலமெங்கும் வறட்சி தலைதூக்கியபோது திருச்சி மாவட்டத்தில் முன்னேற்பாடாக பலவறட்சி நிவாரணத் திட்டங்கள் மூலம் வறட்சி நிவாரணப் பணிகள் செயலாக்கப்பட்டன. குடிநீர் வழங்கும் திட்டப் பணிகளுக்காக 1987இல் ரூ.205.84 இலட்சம் செலவிடப்பட்டது. 1465 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கிராமப்புற ஏழைமக்கள் துயர் போக்க அவர்களுக்காக வேலை அளித்து அவர்தம் வாட்டம் நீக்கும் திட்டங்கள் இம்மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டன. ரூ.77.95 இலட்சம் செலவிடப்பட்டது.1,153 பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.**

இத்திட்டத்தின் கீழ் 31.3.88 முடிய ரூ. 383.18 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 24,566 பேர் பயனடைந்துள்ளனர்.

1988-89 நடப்பு நிதியாண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 368.422 லட்சம் மானியமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 11,365 புதிய பயனாளிகளுக்கு · உதவி அளிக்க அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

**வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு விவசாயிகளுக்கு உதவும் பெருந்திட்டம்**

1987-88ஆம் ஆண்டிற்கான பெருந்திட்டத்திற்கு ரூ. 73.565 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

**தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்**

அரசினால் ரூ. 407.89 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் ரொக்கமாக ரூ.299.085 இலட்சம், 3480.250 மெ.டன் அரிசியின் மூலம் ரூ. 64.38 இலட்சம், 3480.250 மெ.டன் கோதுமை மூலம் ரூ. 5395 இலட்சம் என மொத்தம் ரூ. 426.579 இலட்சம் திரட்டப்பட்டது. இது இலக்கை மீறிய சாதனை ஆகும்.



**வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட தானியங்கள்**

ரூ. 19.98 இலட்சம் மதிப்புள்ள 1080.250 மெ.டன் அரிசியும் ரூ. 16.74 இலட்சம் „மதிப்புள்ள 1080.250 மெ.டன் கோதுமையும் ஒதுக்கப்பட்டன.

ரூ. 21.47 இலட்சம் மதிப்புள்ள மனித சக்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், இலக்கை மீறி ரூ. 22.06 இலட்ச மதிப்புள்ள் சாதனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1988-89ஆம் ஆண்டிற்கு 2,260 வேலைகளுக்கு ரூ.394.60 இலட்சத்திற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்**

1987-88ஆம் ஆண்டிற்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு ரூ. 471.40 இலட்சம் ஆகும். ஊராட்சி ஒன்றியம், மற்றும் செயற்பொறியாளர்களுக்கு வழங்கப்பட்ட தொகை ரூ. 443.99 இலட்சமாகும்.

**வறட்சிக்காக வழங்கப்பட்ட உணவு தானியங்கள்**

ரூ. 23.12 இலட்சம் மதிப்புள்ள மெ.டன் அரிசியம், 19.38 இலட்சம் மதிப்புள்ள 1250 மெ.டன் கோதுமையும் வழங்கப்பட்டுள்ளன.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்ட மையங்களில் ஒரு மையத்திற்கு —ஒரு நபருக்கு 80 கிராம் வீதம் சத்துணவு மாவு 6 மாதம் முதல் 2 வயதிற்குட்பட்ட 30 குழந்தைகளுக்கும், 20 பாலூட்டும் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கும் வழங்கப்படுகிறது. 31.3.88 வரை 32 ஊராட்சி ஒன்றியங்களிலும் திருச்சி நகராட்சி நீங்கலாக 5 நகராட்சிகளிலும் இதனால் 33,625 தாழ்த்தப்பட்டவர்களும், 40,715 பிற சாதியினரும் 430 மலைச்சாதியினரும் பயனடைகின்றனர்.

**ஆதிதிராவிடர் நலத்துறை**

இத்திட்டத்தின் மூலம் 52 நபர்களுக்கு உழவு மாடுகள் வாங்க. ரூ. 42,600 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

1987-88 நிதியாண்டில் 367 குடிதண்ணீர்த்திட்டத்திற்கு ரூ.2,50,70 செலவிடப்பட்டுள்ளது.

**பாரதப் பிரதரின் சுயவேலை வாய்ப்புத் திட்டம்**

படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு பாரதப் பிரதமர் அவர்களின் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1983-84 முதல் 1986-87 முடிய ரூ. 731.53 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 4172 பேர் கடன் உதவியால் பயன் பெற்றனர். இதில் 25 சதவிகிதம் அதாவது ரூ. 182.88 இலட்சம் மான்யமாக வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். 1987-88 ஆம் ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 750ல் 31.3.88 முடிய 807 நபர்களுக்கு ரூ. 151.14 இலட்சம் கடன் வழங்கவங்கிகளால் ஒப்புதல் அளிக்கப்பட்டு 31.3.88 வரை 496 நபர்களுக்கு ரூ. 62.53 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**சி. பி. ராமநாதன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**

## பார்த்தோம்

16.4.88 இதழில், மூதறிஞர் இராஜாஜி அவர்களின் கட்டுரை அன்றைய நடப்பை அப்படியே காட்டியது. மூதறிஞரின் பொன்மொழித் தொகுப்பு அரிய பொக்கிஷம்.

—அரிமா பூபாளம்.
ப. முருகேசபாண்டியன்,
கரப்பாடி(கோவை
மாவட்டம்)

அட்டைப்படம் மிக அருமை. மூதறிஞர் இராஜாஜியின் பொன்மொழிகள் சிறப்பாக இருந்தன.

—பி.ரமேஷ்,
வந்தவாசி

இந்த இதழில் அருமையான செய்திகள் வெளிவந்துள்ளன. உப்புச்சத்தியாக்கிரகப் போர் பற்றிய செய்திகளை அறிந்துகொள்வதற்கு வாய்ப்பாக இருந்தது.

—தி.சுரேந்திரன்.
எஸ்.அக்ரஹாரம்,

## படித்தோம்

ஒப்பில்லாத சமுதாயம் உலகிற்கே ஒரு புதுமையாக உப்புச்சத்தியாக்கிரகம் செய்து, நாடு விடுதலை பெற்ற அதிசயம் உலக வரலாற்றிலே இல்லை. அதன் நினைவாக வந்த இதழ்,மணம் பரப்பி எங்களை மகிழ்வித்தது.

—ஆர். அத்தியப்பன்,
மூணுசாவடி



ஆசிரியரும் வெளியிடுபவரும் :
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
100 சதவிகிதம் அசல் பட்டு
மற்றும் தங்க சரிகைகளைக்
கொண்டு நெசவு செய்யப்பட்ட
புதுமையான
பட்டுச்சேலைகளை
கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.
இந்தியாவின் மிகப்பெரிய
கைத்தறி கூட்டுறவு விற்பனை
நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ்.
அதற்குச் சொந்தமான
560 விற்பனைக்கூடங்கள்
மூலமாக கோடிக்கணக்கான
வாடிக்கையாளர்களின்
தேவைகளை பூர்த்தி செய்கிறது
DIPR: Efficient

Licence No. TN/MS(C)/PP-23



திருச்சியிலிருந்து....

உப்புச் சத்தியாக்கிரக
நினைவு போற்றும்
புனிதப் பயணம்



வேதாரணியத்தில்....